வெளியீடு 14-10-98

Issued 14-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 23, 1998 – தொகுதி 40 – எண் 2

**Monday the 23rd March, 1998 – Volume 40 – No. 2**


*...றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

| | பக்கங்கள் |
|---|---|
| 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | 280-292 |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 280-282 |
| *மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 280-281, 282 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 283-286 |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி | 283-284, 285 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 286-288 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 286, 287 |
| (ஈ) தமிழ்நாடு திரையரங்குகள் முறைப் படுத்துதல் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1998 | 288-291 |
| *திரு. நா. பெரியசாமி | 288-289 |
| *மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் | 288, 289-290, 291 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 292-294 |


218450

D V211, 31/III 98 N98.40.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 9, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மார்ச் 23, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.*"

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும், பதிலுரையும், திரு. பி. வெங்கடசாமி.

***Thiru B. Venkatasamy:** Hon. Speaker, Sir, On behalf of Janata Dal, I welcome the Governor's Address. A lot of new things have been included in the Address. However, there are lot more things to be done so as to make Tamil Nadu, one of the best States in India.

I would like to point out the important matters which might have been included in the Address. One is, employment opportunity to the



educated youth in Tamil Nadu. More importance should have been given to job-oriented education and starting of more cottage industries for creating employment opportunities to the rural youth. For example, agro-based industries like sericulture, dairying, fishing, etc., should have been given importance. I hope, all these things will be included in the Budget. The root-cause for the terrorism is only the unemployment problem. This is the main evil which is creating all these problems in Tamil Nadu, as well as in the entire India. We will have to tackle this problem. Our Hon. Chief Minister is a seasoned politician. He knows things and he will do it in a better way than any other man in India, I have got that faith.

Next we have to generate more electricity in Tamil Nadu. Actually, now there is power-cut. Why should there be power-cut? We have got have the Neyveli Lignite Corporation, which belongs to the Government of India. We must get our share from them. We have got hydel power projects and other things. I think the Government have not properly planned to get sufficient electricity. Electricity is the main thing through which we can improve our economy in the country. I request you to give top priority to electricity and to create more infrastructural facilities like water, electricity, roads, communication, etc.,

There is no proper water supply at SIPCOT Complex, Hosur. We have got two SIPCOT complexes. One more SIPCOT complex is to come at Hosur. I request that Hogenakkal water should be supplied to these industrial complexes. There is no other source, because this is a drought-prone area. Otherwise, they cannot develop. Hosur SIPCOT complexes are the fast-developing industrial complexes in the world, I come to know. So, I request the Hon. Chief Minister to see that these items are included in the Budget.

Regarding house-site pattas to poor people, yesterday, in the presence of our Hon. Minister Thiru Mullaivendan we have given pattas to nearly 350 industrial workers. Likewise, more pattas should be given to the people belonging to poor families.

During the last 22 months, nearly Rs.15,576 crores have been committed for industrial development. Really, it is a very good thing. But, most of the sophisticated industries are not giving employment opportunities to the people. That is our concern. I, therfore, request the Hon. Chief Minister to see that some agro-based industries are started so that we could employ more rural youth.

முற்பகல் 9-35

15% reservation to rural youths in professional courses is a welcome feature. I also request that new ration cards should be supplied urgently.

The law and order situation in Tamil Nadu was the best. But of late, it has deteriorated a little. In Hosur about 8 days back two teachers Mr. Gopal Reddy and Mr. Vijayakumar were attacked by thieves. The thieves have murdered these two people and have taken away the jewels of Mr. Gopal Reddy's wife. I think this is the fourth or fifth incident occuring in Hosur. The industrial workers fear to go in their two wheelers after 6.00 p.m. This is a matter of concern. I therefore request the Hon. Chief Minister to see that this is properly investigated. There are also chain snatching incidents. The Hon. Minister from our district knows it. Sir, there are some black sheeps in Police Department and you must find out all such people.

I am really very happy that the Hon. Chief Minister has announced reward of Rs. 1,000 to all the policemen, who were honest and were able to protect Tamil Nadu in a very very proper way, after the Coimbatore blasts. When you are rewarding such policemen, why not punish those who are not doing their work? If you transfer them, they will gladly go and join there and do the same thing. I request the Hon. Chief Minister to take note of this. In Hosur, today there is a teachers' protest against the murders. I request the Hon. Chief Minister to take stern action against police people who are negligent. Previously such incidents were not there and Hosur was very good. Since it is a border town a lot of people come there, I request that more police force be posted there. The city is in a triangular border. The dacoits from Andhra Pradesh and Karnataka also come there. It is an industrial





town. The people are really terrified to go out after 6.00 p.m. I request the Hon. Chief Minister to see that something is done about this.

Blasts have occurred in Coimbatore recently. I came to know that after that incident nobody was bold enough to go inside and find out the culprits. I came to know that the C.R.P.F., the Collector, the Commissioner, the A.R.P. could not go and search the house in which the terrorists were staying. I came to know that one Inspector by name K.N. Murali of B-1 Police Station entered the house boldly without caring for his life along with 8 constables and he has caught 5 people alive with 500 bombs. Such people should be rewarded and given double promotion. Then only there will be duty consciousness in the Police Department. I request the Hon. Chief Minister to see that such people are rewarded and the blacksheeps eradicated.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15ஆம் தேதி காலை 4-30 மணிக்கு திருமால் வீதியில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியிலே தைரியமாக உயிரைத் துச்சமாக மதித்து நான்காவது மாடிக்கு தீவிரவாதிகளைப் பிடிக்கச் சென்றபோது குண்டு வெடித்து. அதனாலே தானும் காயம் அடைந்து, அந்தத் தீவிரவாதிகள் 9 பேரிலே 6 பேர் இறந்து போனார்கள். அந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது பி-1 போலீஸ் ஸ்டேஷனிலே பணியாற்றி வருகிற சந்திரசேகர் என்ற துணை ஆய்வாளர் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**Thiru B. Venkatasamy**: Thank you very much. I request that such people are rewarded properly so that they are encouraged. Hon. Chief Minister had encouraged them by giving a reward of Rs. 1,000 to the policemen. All such people who are faithful to the Government must be encouraged very properly.

Coming to other points, we are really very much thankful for the sanction of Rs. 25 lakhs to the M.L.A.s under Constituency Development Scheme. We are able to do a lot of things in our Constituencies. However, it is not sufficient because of the growing prices and other things. I request the Hon. Chief Minister that at least in the coming

[Thiru B. Venkatasamy] [1998 மார்ச் 23

budget Rs. 50 lakhs should be given. To be frank with you the opposition is not going to gain. Only your MLAs are going to get more and the people will be more happy about your Government. So, I request the Hon. Chief Minister....

*முற்பகல் 9-40*

**Hon. Speaker:** No, No. Hon. Member cannot make this distinction. MLA's Scheme is meant for all M.L.A.s. What do you mean by saying `your MLAs' as if you are not going to use it?

**Thiru B. Venkatasamy:** Thank you Sir, for your kind suggestion. It will be beneficial to the people. They are working only in the interest of the State so that more works can be done and better relationship between the people and the MLAs could be established. So, I request the Hon. Chief Minister to do it.

**(Hon. Deputy Speaker occupied the chair)**

Regarding the Parliamentary elections, to be frank with you and as our friend Thiru S. Thirunavukkarasu was telling, the results could have been different if you could have given some consideration to Mr. S.Thirunavukkarasu, Janatha Dal, Puthiya Thamizhagam and other people. If you could have accommodated them, definitely the results would have been reversed and there couldnot be so much hue and cry in the Tamil Nadu. I think I need not press much because Hon. Chief Minister knows that. But hereafter the United Front must be consolidated and you must work more cogently and you must work for the betterment of the nation. The B.J.P. people are telling now that they are secular. They should have also mentioned secularism in their Election Manifesto. It is proved in that only secular forces can rule India. I am very happy that atleast they have understood now that only secularism can do well in India but not Hindutva. Accordingly they have left out the Kashmir and other issues. I am happy that they have realised that people have voted for them only for that. I know that people are going to... (The gong was sounded)



1998 மார்ச் 23]

**Hon. Deputy Speaker:** Finish your speech quickly.

**Thiru B. Venkatasamy:** Sir, I will finish within two minutes. People are going to ask about the promises which they gave in their manifesto. After the Parliament session, when they go to their constituencies people will ask what happened to the Ramar Temple? What about the Kashmir Issue and Hindutva? This is true. But however, I pray that a very strong Government must be there whoever may come. In the interest of the economy of the nation, Janatha Dal wants a very strong Government and a very good Government in the Centre. If they give it, definitely we will welcome it.

Regarding my constituency, actually robbery incidents have taken place for the 4th or 5th time. I came to know that the police people want some more facilities like wireless units and they want some mobile units also. No worker is going outside the factory after 6-00 p.m. I request that very good Police Officers should be posted there. Nothing bad has happened in our area when there were previously some good Police Officers. But now such incidents are happening everywhere. If a person goes in a two-wheeler they catch and kill him with an iron rod. For the fourth time a murder has taken place in my constituency. This is very very dangerous and it is not a good culture also. So, I request the Hon. Chief Minister to take stern action to prevent such happenings. Thank you very much for giving me this opportunity, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் சிறப்புமிக்க தொடரில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையின் மீது நான் சில முக்கியமான கருத்துக்களை புதிய தமிழகத்தின் சார்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக தேவேந்திர குல சங்கமாக இருந்ததைப் பெயர் மாற்றம் செய்து தேர்தல் ஆணையத்தில் முறையாகப் பதிவு செய்து புதிய தமிழகம் கட்சியாக இந்த மாமன்றத்தில் செயல்பட

அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயிரம் ஆண்டு காலம் வர்ணாஸ்ரமத்தின் பிடியில் சிக்கியும், சுதந்திரம் பெற்று ஐம்பதாண்டு காலமாகியும் தங்களது அடையாளங்களை இழந்து வாழ்ந்த கோடானுகோடி ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளங்களை மீட்டு எடுக்கும் போராட்டத்தின் ஒரு கட்டமாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், தென் மாவட்டங்களில் பல தொகுதிகளில் இலட்சக்கணக்கில் வாக்களித்து, எதிர்காலத்தில் அரசியல் களத்தில் தாங்கள் ஒரு புறக்கணிக்க முடியாத சக்தி என்பதை உலகுக்கு உணர்த்தி, சாதி, மத, பொருளாதார ஆதிக்கம் அற்ற புதிய தமிழகத்தைப் படைத்திடப் புறப்பட்டுவிட்ட கோடானு கோடி வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு இம்மாமன்றத்தின் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்து, நான் சில முக்கியமான கருத்துக்களைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 9-45

மிக முக்கியமான பிரச்சினை என்று சொல்லுகின்றபொழுது, கடந்த 3 மாத காலமாகத் தமிழகத்திலே நடந்து வருகின்ற மத மோதல்கள் மிக முக்கியமானது. அதைப்பற்றிச் சொல்வதற்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே நீண்ட நெடு நாட்களாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கக் கூடிய, அதேபோல, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகள், தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய மிக முக்கியமான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, நான் அந்தப் பிரச்சினைகளின் மீது என்னுடைய கருத்துகளைப் பிறகு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டாண்டு காலத்திற்கு முன்பு இதே மாமன்றத்தில், தமிழக முதல்வரவர்கள், கொடியங்குளத்திற்கு ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு பாலிடெக்னிக்கும், ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இன்றுவரை அவை தொடங்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது.

அதேபோல, பல்லாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கக் கூடிய கிராமப்புறங்கள் அடங்கிய அந்த ஒட்டப்பிடாரம் தொகுதியில் 50 பேர் அல்லது 100 பேருக்குக்கூட தொழில் அல்லது வேலை கொடுக்கக் கூடிய ஒரு தொழிற்சாலை இல்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.





விரைவிலேயே, வீரன் சுந்தரலிங்கத்தின் பெயரிலான தொகுப்பு வீடுகளைத் திறக்க வருகின்ற முதல்வரவர்கள் அங்கே வருகின்றபொழுது அந்த வீடுகளை மட்டும் திறந்து வைத்தால் போதாது; அந்த வீடுகளிலே வாழ்கின்ற இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற வகையிலே ஒரு தொழிற்சாலையை, இன்னும் சொல்லப்போனால், ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலையை அங்கே நிறுவி அதில் ஆயிரக்கணக்கான மக்கள் பயன் பெறக்கூடிய ஒரு தொழிற்சாலையை தொடங்கக்கூடிய வகையிலே அதற்கு அடிக்கல் நாட்டுகின்ற வகையிலே, இந்த பட்ஜெட் தொடரிலேயே அவர்கள் அதற்குண்டான நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேப்பங்குளம் - கலப்பைப்பட்டி சாலை, ஒட்டநத்தம் - சங்கம்பட்டி சாலை, அச்சங்குளம் - காமநாயக்கன்பட்டி சாலை, கோவில்பட்டி - பசுவந்தனை சாலை, குறுக்குச் சாலை - ஒட்டப்பிடாரம், ஒட்டநத்தம் - மணியாச்சி சாலை, எப்போதும் வென்றான் - கடம்பூர் சாலை, புதியமுத்தூர் - சாமிநத்தம், வீரபாண்டியபுரம் சாலைகள் எல்லாம் காடுகளைப் போலக் காட்சியளிக்கின்றன. எனவே, அவற்றிற்கெல்லாம் பெருமளவு நிதி ஒதுக்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கொடியங்குளத்திலே மக்களெல்லாம் பாதிக்கப்பட்டு, வீடுகளையெல்லாம் இழந்திருக்கிறார்கள்; ஐந்தாறு கோடி ரூபாய்க்கு மேலாகப் பொருட்களெல்லாம் சேதமடைந்தன. இன்றுவரை அதற்காக நிவாரண நிதி ஒதுக்கப்படாதது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. எனவே, 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழே ஒரு பெரிய அளவு நிதியை ஒதுக்கி அந்த மக்களுக்கு உதவக் கூடிய வகையிலே முதல்வரவர்கள் தலையிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த இரண்டாண்டு காலமாக நான் இந்த மாமன்றத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வேலைவாய்ப்பு பற்றி வெள்ளையறிக்கை கேட்டிருந்தேன். வெள்ளையறிக்கை கேட்டிருக்கின்றேன் என்றால், ஏதோ ஒரு அறிக்கைக்காக அல்ல; இந்த ஆளுநர் உரையிலே 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு உத்தரவாதம் வேண்டுமென்று நாம் மத்திய அரசினிடத்திலே வலியுறுத்துகின்றோம். அதே சமயத்திலே 19 சதவீத

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1998 மார்ச் 23

இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

நாங்களெல்லாம், தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்பேரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்கான குழுவிலே பார்க்கின்றபொழுது—அன்புச் சகோதரர்கள் பலர் இந்த மாமன்றத்தினுடைய பல்வேறு உறுப்பினர்கள் அதிலே இருக்கின்றார்கள்—ஏ, பி, சி என்று அழைக்கக்கூடிய உயர்ந்த பதவிகளிலே 4 சதவீதம் கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது தெரியவந்தது இது வேதனைக்குரிய விஷயம்.

முற்பகல் 9.50

இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு ஊழியர்களுக்குப் பதவி உயர்விலும், இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு சொல்லி 77-வது திருத்தம் நாடாளுமன்றத்திலே கொண்டு வந்து மற்ற மாநிலங்களில் எல்லாம் அமல்படுத்துகின்றபொழுது தமிழக அரசு இன்னும் அதை அமல் ஆக்குவதற்குக் காலம் தாழ்த்த வேண்டிய காரணம் என்ன? தமிழ்நாடு அரசு தந்தை பெரியார் வழியில், அண்ணல் அம்பேத்கர் வழியில் நடக்கக்கூடிய அரசு ஆயிற்றே. ஏன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தக் காரணத்தினால்தானே எண்ணற்ற இளைஞர்கள் படித்துப் பட்டம் பெற்றும்கூட வேலைவாய்ப்பு இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, காலம் தாழ்த்தாமல் இந்த அரசு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நீண்டநெடு நாட்களாக காரணையிலே பஞ்சமி நிலத்தை மீட்க வேண்டுமென்று தாழ்த்தப்பட்ட மக்கள் போராடி வருகிறார்கள். எனவே, அந்த நிலத்தை மீட்டுக் கொடுப்பதற்கு அரசு தயங்கக் கூடாது. சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு, தாங்கள் வசித்த பதவியின் காரணமாக, ஒருசில பேர் ஆயிரக்கணக்கான நிலங்களை அபகரித்துக் கொள்கிற நிலையை அல்லது ஆக்கிரமித்துக் கொள்கிற நிலையை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? எனவே, அதை மீட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு தயங்கக் கூடாது.



1998 மார்ச் 23] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அதேபோல, ஒரு வருடத்திற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போடுகிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது? 3000 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும். நான் கேட்கிறேன், ஒவ்வொரு சமுதாயமும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. முன்னேறிய சமுதாயத்தை விட்டுவிட்டு யார் தாழ்ந்து கிடக்கின்றார்களோ, யார் பிற்பட்டு இருக்கின்றார்களோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்பதுதான் விஞ்ஞான ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சரியாக இருக்க முடியும். 15 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் 40 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கினால், அந்த மக்கள் எப்படி முன்னேற முடியும்? அதனால் குறைந்தபட்சம் 25 சதவீதமாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒட்டுமொத்த பட்ஜெட்டில் ஒதுக்கினால்தான் இந்த மக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முன்னேற முடியும். வேண்டுமானால் தமிழக முதல்வர் மாறுவேடத்தில் சென்று கிராமப்புறங்களிலே பார்க்கட்டும். பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படியெல்லாம் கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்கள் சென்றிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதியிலே, அந்த மக்களுக்காகச் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட 25 சதவீத ஒதுக்கீட்டிலே - ரோடு இல்லை, அந்த மக்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் கிடையாது. இன்னும்கூட, வெயில், இதுபோன்ற காலத்திலே 7 ரூபாய், 10 ரூபாய் கூலி கிடைக்காமல் பட்டினியுடன் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்—அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா? நம்முடைய காலத்தில் செய்ய வேண்டாமா? எனவே, இதற்கு எல்லோரும் ஒத்துழைத்து இந்தப் பட்ஜெட்டிலே—ஒட்டுமொத்த பட்ஜெட் தொகையிலே 25 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கிட நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு தரவேண்டும், தமிழக முதல்வர் அவர்களை வற்புறுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளையும், அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எந்த வங்கிக்குச் சென்றாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒருவரும் லோன் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ‘பள்ளன், பறையன், லோன் கொடுக்க முடியாது நீ கட்டமாட்டாய், உனக்கு லோன் கிடையாது போ’ என்று சொல்கிறார்கள். P.M.R.Y. ஸ்கீமிலே 10 ஆம் கிளாஸ், 12 ஆம் கிளாஸ் படித்தவனுக்கு லோன் கொடுக்கலாம் என்று அவர்கள் Sanction பண்ணி subsidy கொடுத்து

அனுப்பினாலும்கூட, அங்கே போனவுடன் Stop ஆகிவிடுகிறது. அரசாங்க வேலைவாய்ப்பிலே எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியவில்லை, சுயமாகத் தொழில் செய்யலாமென்று பேங்க்குக்குப் போனால் எல்லா அப்ளிக்கேஷனையும் அப்படியே withheld பண்ணுகிறார்கள். அதனால் அரசாங்கம் தாட்கோவை ஒரு பெரிய வங்கி போல செயல்படச் செய்வதற்கு தமிழக முதல்வர் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த பட்ஜெட்டிலே அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பேங்க்குக்குப் போய் நிச்சயம் லோன் வாங்க முடியாது. இந்த அதிகாரிகளைச் சந்தித்து லோன் வாங்குவது இந்த யுகத்தில் முடியாது. ஒருவரும் முன்னேற முடியாது. எனவே, அதற்கென தனியாக 400 கோடி, 500 கோடி ரூபாய் ஒதுக்கி வங்கி போல செயல்படுவதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

சமூக ரீதியில் Forward Community முன்னுக்குப் போயாகிவிட்டது. Backward Community முன்னுக்குப் போயாகிவிட்டது. உயர்த்தப்பட வேண்டிய Community என்று பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் இருக்கிறார்கள். அந்தக் கடமையை, தந்தை பெரியார் வழியிலே, அண்ணா வழியிலே, அண்ணல் அம்பேத்கர் வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற கலைஞர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக, புதிய தமிழகம் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மிக முக்கியமாக, குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றியும் மத மோதல் பற்றியும் பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எனக்கு ஒரு வேதனை என்னவென்றால், பல உறுப்பினர்கள் சொல்கின்றபோது, தீவிரவாதியைப் பிடித்தவுடன் சுட்டுக் கொல்லுங்கள், நடு வீதியிலே கட்டிவைத்து அடியுங்கள் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், தீவிரவாதம் திடீரென ஆகாயத்திலிருந்தா வந்தது? ஒரு ஜாதிக்கு மட்டுமே, முஸ்லீம்களுக்கு மட்டுமே தீவிரவாதம் வந்ததா? கடந்த 20 வருடங்களாக தமிழ்நாட்டில் என்ன நடந்தது தெரியுமா உங்களுக்கு? கோயம்புத்தூரில் நீங்கள் பார்த்தால், உங்களுக்கெல்லாம் தெரியுமோ தெரியாதோ நான் கோயம்புத்தூரில் இருக்கக்கூடியவன், 'முஸ்லீம் கடையில் வாங்காதே' என்று நோட்டீஸ் போட்டு ஊர் ஊராகப் பிரச்சாரம் பண்ணினார்களே அது தீவிரவாதம் ஆகாதா? நவம்பர், டிசம்பர் குண்டுவெடிப்புக்குப் பிறகு, கடந்த தேர்தலுக்கு முன்பு 14 ஆம் தேதி நடந்தது என்று மட்டும் வைத்து அவர்களைத் தீவிரவாதி என்று ஒதுக்கலாம் என்று பார்க்கிறீர்களே. மண்டைக்காடு சம்பவத்திற்கு வித்திட்டது யார்? தொடர்ச்சியாக மேடை போட்டு இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். கூட்டம் போட்டு என்னென்னவெல்லாம் பேசியிருக்கிறார்கள்? அந்நியநாட்டு மதம் என்று சொன்னீர்கள். சொந்த நாட்டில் இருக்கும் மக்களை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?





**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள்.

முற்பகல் 9-55

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்நிய நாட்டு மதம் என்று பார்த்தால், சொந்த நாட்டு புத்த மதத்தை அழித்தது யார்? சமண மதத்தை அழித்தது யார்? சொந்த நாட்டுக்குள்ளேயே தாழ்த்தப்பட்ட மக்கள் இருப்பது இந்து மதத்தில்தான். அதற்கெல்லாம் எப்போது தீர்வு காணப்போகிறீர்கள்? இப்படியொரு பிரச்சாரம் தொடர்ச்சியாக 20 வருடமாக நடந்து கொண்டிருந்தது; நடந்து கொண்டிருக்கிறது. அப்போது அதையெல்லாம் விட்டுவிட்டு, அதையெல்லாம் கணக்கிலே வைத்துக்கொள்ளாமல், இன்றைக்கு முஸ்லீம் தீவிரவாதிகள் வந்துவிட்டார்கள் என்றால், இதற்குக் காரணமானவர்கள், காரணமாக இருந்தவர்கள் யார்? இன்னோரிடத்திலிருந்து நம் நாட்டிற்கு வந்து, தமிழ்நாட்டிற்கு வந்து வியாபார நோக்கத்தோடும், அரசியல் நோக்கத்தோடும் பிரச்சாரம் பண்ணியவர்களுடைய தூண்டுதலால்தான் இன்றைக்கு பாட்சா உருவானார். இல்லையென்றால் பாட்சா எப்படி வந்திருக்க முடியும்? பாட்சா எப்படி அந்தக் கருத்தை வைத்துப் பேசியிருக்க முடியும்? உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி, என்று பார்க்காதீர்கள். அந்நிய நாட்டு மதம் என்று பார்க்காதீர்கள்.

அந்நியநாட்டு மதம் என்றாலும் தொன்றுதொட்டு அந்தக் கடவுளைக் கும்பிட்டாலும் ஒன்றுபட்டு வாழ்ந்த மக்கள் மத்தியிலே வேறுபாடுகளை இன்றைக்கு உருவாக்குகின்றார்கள்.

நேற்று என்னுடைய நண்பர் ஒருவர் வேலூரிலிருந்து வந்திருந்தார். நாங்கள் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "ஐயா, நிலைமை ரொம்ப மோசமாகப் போய்விட்டது. இஸ்லாமியப் பெண் ஆட்டோவிலே ஏறுவதற்கு வந்தால் ஆட்டோக்காரன், 'ஐயையோ, நீ இஸ்லாமியப் பெண்மணி, ஏற்றமாட்டேன், நீ குண்டு வைத்திருப்பாய்." என்று ஒதுங்கி விட்டுவிட்டுப் போய்விடுகிறான் . இது எந்த நிலைமைக்கு நாளைக்குப் போகும்? ஒரு Pregnant lady பிரசவத்திற்காக ஒரு ஆஸ்பத்திரிக்குப் போகின்றபோது அங்கே குழந்தை பிறந்தால் அவர் முஸ்லீம், ஏதாவது பண்ணிவிடுவார் என்று சொல்லி பிரசவத்திற்காகப் போகின்றவர்களை ஒரேயடியாக ஒதுக்கிவிடும் நிலைக்கு வந்துவிடும். ஏதோ ஒரு பக்கம் மட்டும் பார்த்தால் எப்படிச் சரியாக இருக்க முடியும். இந்த நாட்டிலே பார்ப்பனியத்தினுடைய அந்தச் சமுதாயத்தினுடைய ஆபத்தையெல்லாம்.....

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Point of Order. *என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி ஆணையிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இஸ்லாமியப் பெண்மணி என்று மாற்றிக் கொள்ளவும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக அந்த அளவிற்கு இன்றைக்கு வேறுபாடுகளைச் சமுதாயத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே மிகவும் முக்கியமானது என்னவென்றால், இந்த ஆளுநர் உரையிலே இன்னும் கொஞ்சம் விரிவாக எதிர்பார்த்தேன். இந்தக் காவல் துறையிடம் இதை விடக்கூடாது. இது ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. கொஞ்சம் பேர் இறந்துவிட்டிருக்கிறார்கள், பொருட் சேதம் ஏற்பட்டது என்று பார்க்கக் கூடாது. ஒரு ஆபத்து வந்திருக்கிறது என்ற முறையில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





பார்க்கக் கூடாது. இதுநாள் வரையிலும் இல்லாதது, அதாவது தூரத்திலேயிருந்து வந்தவர்கள் ஒரு காலத்திலே ஒட்டுமொத்தமாக அவர்கள் இந்தச் சமுதாயத்திலே தமிழர்களாக இருக்கிறார்கள், இஸ்லாமியராக இருந்தாலும், கிருத்துவராக இருந்தாலும் தமிழர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே வேறுபாடுகள் வரவில்லை. ஆயிரம் ஆண்டுகாலம் ஜாதி வேறுபாடுகள் இருக்கிறதே தவிர, மத வேறுபாடுகள் இந்த நாட்டுக்குள்ளே வரவில்லை. அப்படிப் புதிய முறையிலே மத வேறுபாடுகளைப் பார்க்கிறபோது அது எங்கேயிருந்து வருகிறது என்று நாம் பார்க்க வேண்டுமே தவிர, நாம் அதையும் விட்டுவிட்டு, தமிழர்களாக வாழ்ந்தவர்கள் இன்றைக்கு இந்துக்களாக உருவெடுக்கக்கூடிய முயற்சி நடைபெறுகிறபோது அதைத் தடுக்க இந்த திராவிட இயக்கங்கள் - தி.மு.க. கூடப் பிரச்சாரத்தைச் செய்யவில்லையே என்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. கருத்துப் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும். நாம்கூட தேர்தலுக்கு பயந்துவிட்டு அப்படிச் செய்யாமல் விட்டிருக்கிறோமோ என்று தோன்றுகிறது. இதனாலே இன்றைக்கு தி.மு.க.-விலே அடிமட்ட உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் இயக்கங்கள், இப்படி எல்லா மட்டத்திலேயும், குறிப்பாகக் கீழே இருக்கக் கூடியவர்கள் மத்தியிலேகூட இந்து, இஸ்லாம் வேறுபாட்டு மனப்பான்மை லேசாக உருவாகி வந்திருக்கிறது. அதனாலே இந்த மன்றத்திலே நான் கேட்பது என்னவென்றால், நீங்கள், ஆட்சி கவிழ்ந்துபோகும் என்று பயப்படாதீர்கள். ஆட்சி தேவைப்பட்டால் கொண்டுவருவதற்கு நாங்கள் இருக்கிறோம். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) கவிழ்க்கவும் விடமாட்டோம். அப்படியெல்லாம் ஒன்றும் பயப்பட வேண்டாம். இலட்சியத்தை அடிப்படையாக வைத்து, ஜாதியை ஒழிப்பதற்கு, மதவெறியை ஒழிப்பதற்கு வந்தாயிற்று என்று சொன்னால் கை கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதிலே ஒன்றும் மாற்றமே கிடையாது. ஆனால் நான் கேட்பது என்னவென்றால், உங்களுக்குத் தெரியாதது அல்ல. சிவாஜி ஆண்ட இந்து சாம்ராஜியத்தில் எப்படி இந்தப் பார்ப்பனீயம். சூத்திரர் மக்களையும், உழைக்கும் மக்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் அடிமைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டதோ அதேபோல் இப்போது நடக்கக்கூடிய அந்த முயற்சிகளையும் முறியடிப்பதற்கு நாம் கருத்துப் பிரச்சாரம் செய்யத் தயாராக வேண்டும். ஆட்சி போகுமே என்ற பதற்றமே வேண்டாம். இது சாதாரண போராட்டம் அல்ல, இது மிகப் பெரிய

வெடிகுண்டுக்காரர்கள்போல், அணுகுண்டுபோல் பேராபத்து ஏற்படுத்தக்கூடியவர்களை எதிர்த்து நடத்தும் போராட்டம், அந்தப் பேராபத்தை உணர்ந்து, இந்திப் பெண்ணை விரட்டிய இந்த மண்ணில் இந்துத்துவப் பெண்ணை நுழையவிடக் கூடாது என்பதை உணர்ந்து அதற்குத் தயாராக வேண்டும். மேலும் இதை ஒரு சட்டப் பிரச்சினையாகப் பார்க்காமல் இந்த மன்றத்திலே நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இஸ்லாமியப் பெரியவர்களை அழைத்துப் பேச வேண்டும். அதேபோல், மத வெறி சக்திகளுக்கு எதிராக இருக்கக்கூடிய எல்லா சக்திகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அதேபோல் இந்த மன்றத்திலே இந்தப் பிரச்சினையைத் தொடங்குவதற்குக் காரணமே, பாபர் மசூதி அன்றைக்கு இடிக்கப்பட்டதே. அன்றைக்கே ஒட்டுமொத்த, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய, இந்தியாவிலே இருக்கக்கூடிய முஸ்லீம் மக்கள் மத்தியிலே ஒரு காயம் ஏற்பட்டது. என்றைக்கு அந்த அயோத்தியிலே பாபர் மசூதி மீண்டும் கட்டப்படுகிறதோ அன்றைக்குத்தான் அந்தக் காயம் ஆறும். அதுவரையிலும் அந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்யும். அதை நிறைவேற்றக்கூடிய வகையிலே நாம் ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றம் வாயிலாக நிறைவேற்ற வேண்டும். பாபர் மசூதி மீண்டும் கட்டப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மாமன்றம் சார்பாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரத நாட்டினுடைய பண்பாட்டில் அல்லது கலாச்சாரத்தில் நம்முடைய வேதங்கள் எந்த இடத்திலுமே சாதி மதத்தைப் பற்றிக் குறைவாகவோ துவேசமாகவோ குறிப்பிட்டது கிடையாது. அப்படிப்பட்ட உதாரணமும் கிடையாது. ஆனால், பிற்காலத்தில் சொல்லியிருக்கக் கூடும். அது தவறுதான். இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால், தேசியம் என்ற அளவில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற நல்ல சூழ்நிலையில் இப்போது அந்தத் தவற்றைக்கூட உணர்ந்து பலர் இப்போது ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று நினைக்கிறார்கள்.





அயோத்தி பற்றிய பிரச்சினை வந்ததால் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அயோத்திப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், 1992 ஆம் ஆண்டு நடந்த சம்பவத்தைப் பற்றி தமிழகத்திலும் மற்றும் வேறு எந்த மாநிலத்திலும் அயோத்தி பற்றி சொல்லி பிரச்சினை நடக்கவில்லை. தமிழகத்தில் இப்பொழுதுதான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. எனவே, நாம் எங்கே தவறு செய்துவிட்டோம் என்பதைக் கண்டறிந்து, இந்தப் பிரச்சினை எப்படி வந்தது, ஏன் வந்தது, இனிமேல் வராமல் இருக்க என்ன வழி என்பதை நாம் கண்டறிந்து, ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு, இனிமேலாவது தமிழகத்தில் எந்தவிதமான பிரச்சினையும் வராத அளவுக்கு நாம் அனைவரும் அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு நல்ல முடிவை எடுத்து, நல்ல சூழ்நிலையை உண்டாக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'செம்பனா ஜாயிதே சூத்திரா' என்று எந்த மதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிறக்கும்பொழுதே ஒருவன் சூத்திரனாகத்தான் பிறக்கிறான் என்று எந்த மதம் சொல்கிறது. அப்படிப்பட்ட சூத்திரன் உயர்ந்த சாதியினுடைய வைப்பாட்டி மகன் என்று இழிவுபடுத்திப் பேசியிருப்பது எந்த மதத்திலே என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டுப் பேசக்கூடாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய ஒட்டுமொத்தக் கருத்து என்னவென்று சொன்னால், சாதி மத வேற்றுமைகளை வைத்துக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடக்கூடாது மக்களுடைய வாழ்விலே அமைதி நிலவ வேண்டுமென்பதுதான் நோக்கமே தவிர, அதிலே உள்நோக்கம் கற்பித்து யாரும் விமர்சனம் செய்யக்கூடாது என்பதுதான் வேண்டுகோளே தவிர வேறொன்றுமில்லை என்பதை மட்டும் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. இன்னும் 3 பேர் பேச வேண்டும். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அருமை நண்பர் திரு. வேலாயுதன் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்து மதத்திற்கு இன்றைக்கும் அவர்கள் ஆதாரமாகச் சொல்லக்கூடிய ரிக் வேதத்தினுடைய புருஷசுக்தத்திலேயே மனிதர்களை மனிதர்களாகப் பார்க்காமல், மனிதர்கள் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ரிக் வேதம்தான் மனிதர்களைப் பாதத்திலே பிறந்தவன் என்றும், தோளில் பிறந்தவனென்றும் நெற்றியில் பிறந்தவன் என்றும், வயிற்றில் பிறந்தவன் என்றும் பிரித்துப் பார்த்து, பேதத்தின் முதல் தொடக்கமே ரிக் வேதம்தான் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களால், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழியப்பட்டு பின்னர் வழிமொழியப்பட்டு, இந்த அவையிலே விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. நானும் ஒருசில கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்தக் கூட்டத் தொடருக்குப் பிறகு, 27 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் சமர்ப்பிக்கவிருக்கிறார்கள். எனவே, நிதிநிலை அறிக்கையினுடைய வரையறைகள் எல்லாம் இதுவரையில் லநிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும், நிர்ணயிக்கப்பட்டு இருக்கவேண்டும். எனவே அதற்கு முன்பாகவே, ஒருசில கருத்துகளை மீண்டும் நினைவுபடுத்த வேண்டுமென்பதற்காக, ஏற்கெனவே கடந்த நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னுடைய 4 கோரிக்கைகளிலே 3 கோரிக்கைகளை இங்கேயே நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக முழுமையாக அது நடைபெறவில்லை. இருந்தாலும் இந்த நிதிநிலை அறிக்கையிலாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அது குறித்து ஆவன செய்யவேண்டுமென்பதற்காக நான் என்னுடைய உரையை, என்னுடைய கோரிக்கைகளிலிருந்து தொடங்குகின்றேன்.





*முற்பகல் 10-05*

பல நாட்களாக, பல வருடங்களாக இந்த அவைக்கு நான் வருவதற்கு முன்பிருந்தேகூடச் சொல்லி வருகிறேன். அது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். அவர்கள் அந்த இடத்தை நன்கு அறிவார்கள். வெள்ளைக்கல் அணைக்கட்டு. எங்கள் பகுதியில் நீர் ஆதாரத்திற்கு நிலையான ஏற்பாடு இல்லை. பாலாறு ஒன்றுதான் இருக்கிறது. அந்தப் பாலாற்றில் நானும் வாழ்கிறேன்; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வாழ்கிறார்கள். எனவே இதற்கு அதிக விளக்கம் தேவையில்லை. வெள்ளைக்கல் அணைத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, கடந்த கூட்டத்தொடரிலேயே செய்து முடிப்போம் என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள். வாக்குறுதி தந்து விட்டால் உலகமே அழிந்தாலும் வாக்குறுதியைக் காப்பாற்றுவோம் என்பதற்குச் செயல் வடிவம் கொடுக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைந்தபட்சம் இந்தத் தொடரிலாவது— ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உங்களுடைய அனுமதியைத் தர வேண்டுமென்று கேட்டு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு வழிவகுக்க வேண்டுமென்று நான் !கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்குட்டையை ஆம்பூரோடு இணைப்பதற்கு ஒரு சாலை வேண்டும். சர்க்கரை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கிற திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இரண்டு பக்கமும் அதைத் தொடங்கிவிட்டார்கள், முடித்தும் விட்டார்கள். வெள்ளக்குட்டையிலிருந்து வெள்ளைக்கல் வரையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கென்னடிக்குப்பத்திலிருந்து அய்யலூர் வரையிலே நிறைவு பெற்றிருக்கிறது. இடையிலே நம்முடைய வன இலாக்காவினர் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வனம் என்று சொல்கிறார்கள். வனம் என்று சொல்வதற்கு மனமே வராது. அது காடு என்று சொல்லப்படுவதில்லை. வெறும் முட்செடிகள் நிறைந்த பகுதி. 500 மீட்டர் அளவுக்கு இடையிலே இருக்கிற இடத்தை அவர்கள் கொடுக்க வேண்டும். அவர்கள் இதுவரை அனுமதிக்கவில்லை. தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தை ஒப்படை செய்து அங்கே

இணைப்பை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு நம் நாட்டுக்கு இணைப்புகள்தான் தேவை. அதற்கு நாமே தடையாக இருக்கக்கூடாது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று வெள்ளைக்கல் திட்டம் தொடர்பாகவும் வனத் துறைதான் இடத்தை ஒப்படை செய்யாமல் இருக்கிறார்கள் என்றும், அதனால்தான் காலதாமதம் என்றும் சொல்கிறார்கள். திருப்பித் திருப்பி 1,000 தடவை நான் கேட்டுவிட்டேன், 1,001வது தடவையும் நான் சொல்லாமல் அதற்கான அனுமதியைத் தர வேண்டும். அனுமதியைத் தந்து அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிம்மியம்பட்டு பகுதியில் ஓர் உயர்நிலைப் பள்ளி அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் காலத்திலேதான் வந்தது. அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்தால் முல்லைக்கொம்மை, நிம்மியம்பட்டு பகுதிகள் பயன்பெறும். ஆகவே நிம்மியம்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேல்நிலைப்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒப்புதல் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன், நம்பிக்கையும் வைத்திருக்கிறேன். எனவே, தயவுசெய்து நிம்மியம்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கிரிசமுத்திரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மாற்றுவதற்கு உங்களுடைய கனிவான உத்தரவை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த அவையிலே பிரதானமாக ஒரு பிரச்சினையைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். நான் எப்படிப் பேசுவது? பேசுவதா, பேசாமல் இருப்பதா என்று—விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற—ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் முன்னே சென்றால் கடிக்கிறது, பின்னே சென்றால் உதைக்கிறது. இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான சூழ்நிலையிலே நான் இருந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நான் இட்டுக்கட்டிப் பேச மாட்டேன். நாட்டில் இருக்கிற நிலைமைகளை அப்படியே எடுத்துச் சொல்வதற்கு நான் இங்கே வந்திருக்கிறேன். ஒரு தொகுதியின் சார்பாக மட்டுமல்ல, ஓர் உணர்வின் சார்பாக மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் ஒரு சமுதாயத்தின் சார்பாக நான் நிற்கிறேன்



என்பதல்ல. அப்படிச் சமுதாயம் என்று எடுத்துக்கொண்டால் அதைத் தமிழ்ச் சமுதாயம் என்ற அடிப்படையிலேதான் நான் சொல்லுவேனே தவிர இஸ்லாமியச் சமுதாயம் என்றோ அல்லது வேறு சமுதாயம் என்றோ நான் பேச மாட்டேன். யார் பாதிக்கப்படுகிறார்களோ, அநீதிக்கு ஆளாக்கப்படுகிறார்களோ அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பது எங்களைப் போன்றவர்களுடைய கடமை என்பதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள்.

*முற்பகல் 10-10*

இன்றைக்குக் குண்டு வெடிப்புகள், தீவிரவாதங்கள் என்றெல்லாம் அதிகமாகப் பேசப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு பெருமைக்குரிய உறுப்பினர் தாமரைக்கனி அவர்களும் கனிவான பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். யாரோ சில பேர் தடா கைதிகளாகக் காராக்கிரகத்தில் அடைக்கப்பட்டிருந்தார்கள்; அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நினைக்கவில்லை; அவரோடு இருக்கின்ற சில பேர் அதைச் சொன்ன காரணத்தினால் விடுதலை செய்யப்பட்டார்கள்; அப்படி அவர்கள் விடுதலை செய்யப்பட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு நாடு முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டிருக்கிறது; நாமெல்லாம் அலமலந்து நிற்கின்றோம் என்ற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். தயவுசெய்து அந்தக் கருத்தை அருள்கூர்ந்து அவரைப் பின்பற்றுகிறவர்கள் மாற்றிக் கொண்டாக வேண்டும். ஏனென்றால், ஒருவர் சொல்வதனால்தான் ஒரு சட்டம் வளைக்கப்படுகிறது என்ற கருத்து அதிலே இருக்கிறது. இஸ்லாமியர்களோ அல்லது மற்றவர்களோ அதிலே தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற பிரச்சினை வேறு. ஆனால், ஒருவர் சொல்கிறார்: அதற்காகச் சட்டம் வளைக்கப்படுகிறது; சிலருக்குச் சலுகை காட்டப்படுகிறது என்ற கருத்துப்பட உள்ள கருத்து தவறான கருத்து, உண்மைக்கு மாறான கருத்து என்று நான் சொன்னால், அவர் அதை மறுக்க மாட்டார். நீண்ட நாட்களாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சபையிலே இருக்கிறார்கள். அவருக்கென்று தனியொரு பாணியை அமைத்துக் கொண்டு அவர் செயல்படுகிறார். அவருடைய பேச்சுக்களை நாங்கள் விரும்பிக் கேட்பதும் உண்டு. எனவே, இந்தக் கருத்தின் வாயிலாக, அரசு யாரோ சிலருக்காகச் சட்டத்தை வளைத்துப் போட்டுவிட்டது, சலுகை

காட்டிவிட்டது என்ற எண்ணத்தைத் தயவு செய்து உருவாக்கவேண்டாம். அப்படியொரு சலுகையை யாராவது காட்டினால்கூட நிச்சயமாக என்னைப் போன்றவர்கள் அத்தகைய சலுகையை யாரிடத்திலும் எதிர்பார்க்கவும் இல்லை. அதுவும் குறிப்பாக, நாங்களெல்லாம் இந்த ஆட்சி ஏற்படவேண்டும்; இது நீடித்திருக்க வேண்டும்; நீடித்த நிலையான நன்மைகளை நாட்டிற்கும், வீட்டிற்கும் செய்ய வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைத்து, ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் தமிழனுக்காக, நா ட்டிற்காகச் சிந்தித்து சட்டபூர்வமான ஒரு ஆட்சி நாட்டில் நிலையாக இருக்க வேண்டும் என்று கருதுகின்ற காரணத்தால்தான், அதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் டாக்டர் கலைஞர் அவர்களை அன்றும், இன்றும், என்றும் ஆதரிக்கக் கூடியவர்களாக நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் கலைஞரிடத்தில் குற்றங்குறைகள் கண்டால், சொல்வதற்குத் தயங்க மாட்டோம். சொல்லாமலும் இருக்க மாட்டோம். ஏனென்றால், அப்படிச் சொல்லாமல் இருப்பவன் உண்மையான நண்பனாக இருக்க முடியாது. எனவேதான், சொல்கின்ற வேகத்திலே எதையும் சொல்லிவிட வேண்டும் என்று சொல்வது நம்மைப் போன்றவர்களுக்கு ஏற்புடையதல்ல என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள். தயவு செய்து அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தடா சட்டத்திலே கைதாகி இருந்தவர்களில் பலர் விடுதலையாகி இருக்கிறார்கள். யாராலாவது குறிப்பிடப்படுகிறவர்கள்தான் விடுதலையாகி இருக்கிறார்களா? பலர் விடுதலையாகியிருக்கிறார்கள். பலபேர் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஒரு ஜனநாயக நாட்டிலே ஜனநாயகம் வெற்றி பெறவேண்டும். அந்த ஜனநாயகம் வெற்றி பெறும்போது, கேள்வி இல்லாமல், விசாரணை இல்லாமல் ஒரு ஜனநாயக் குடிமகன், ஒரு நாட்டிலே வாழ்கின்ற குடிமகன் எத்தகையதொரு முகாந்திரமும் இல்லாமல் தொடர்ந்து காராகிரகத்தில் அடைக்கப்பட்டு விடக்கூடாது. அது நாட்டிற்கும் நல்லதல்ல. நம்முடைய சட்டபூர்வமான ஆட்சிக்கும் நல்லதல்ல என்ற காரணத்தினால் அதைப் பலர் சொன்னார்கள். அதிலே இருக்கின்ற நியாயங்களை இந்த அரசு உணர்ந்து பார்த்த பிறகு அவர்களுக்கு விடுதலை அளித்திருக்கிறது. அப்படி விடுதலை அளித்திருக்கிறது என்பதால், அதுதான் உங்களுடைய வாதமா? நீங்களெல்லாம் வெளியே வாருங்கள்; குண்டுகளைத் தயார் செய்யுங்கள்; அதுவும்





வெடிகுண்டுகளைத் தயார் செய்யுங்கள்; அவற்றை நாடு பூராவும் பரப்பி, வெடிக்கச் செய்து, அப்பாவி மக்களைக் கொல்லுங்கள் என்று யாராவது நினைத்துப் பார்த்திருப்பீர்களா? பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவற்றை வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்றெல்லாம் நாம் கருத்துக்களைச் சொல்லும்போது ஆழ்ந்து சிந்திக்காமல் சொல்லக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

*முற்பகல் 10-15*

மாண்புமிகு உறுப்பினர் எனக்குத் தம்பி போன்றவர். எனவே, அவருக்கு அறிவுரை கூறுவதற்கு எனக்குத் தகுதி இருக்கிறது; அவர் ஏற்றுக் கொண்டால். தகுதி இருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே, சிந்தித்துச் செயல்பட வேண்டும். இப்போது இருக்கிற நிலை என்னவென்றால், சில சூழ்நிலைகளை வைத்து நாம் முடிவு செய்கிறோம், கோயம்புத்தூரில் நவம்பரில் நடந்தது என்ன? பிறகு, பிப்ரவரி மாதம் 16ஆம் தேதி நடந்தது என்ன? இரண்டும் ஒரே நிலையில் வைத்துக் கணிக்க வேண்டியதா என்பதைப் பற்றிப் பொறுப்புள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்க வேண்டும். 14ஆம் தேதி அங்கு ஒரு பிரச்சினை உருவானது. அதை உருவாக்கியவர்கள் அறிவற்றவர்கள்; ஆணவக்காரர்கள்; ஆத்திரக்காரர்கள் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கே இடமில்லை. ஏனென்றால் ஒரு போலீஸ்காரன்; அவன் வீதியிலே நின்றுகொண்டு, போக்குவரத்தை ஒழுங்குபடுத்தக்கூடிய, கடமையிலுள்ள ஒரு போலீஸ்காரன்; செல்வராஜ் என்கிற என்னுடைய சகோதரன்....(குறுக்கீடு) நவம்பர் மாதம் என்றுதான் சொன்னேன். நவம்பர் மாதத்தில் நடந்ததை—என்ன நடந்தது?—போலீஸ்காரரின் வாய்ப்பேச்சு முற்றியிருக்கலாம். போலீஸ்காரர்களுக்கும் அந்த உணர்வு உண்டு. 'நான் காக்கிச் சட்டையை உடுத்திக் கொண்டிருக்கிறேன்; என்னிடத்தில் இவ்வாறு பேசுகிறாயே?' என்று கேட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். 'யாரைப் பார்த்து இவ்வாறு பேசுகிறாய்? என்னுடைய உடையைப் பார்' என்று அவன் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அப்படிக் கேட்பது ஒன்றும் வழக்கத்திற்கு மாறானது அல்ல. அந்த உணர்வோடு செயல்படுவதும் சில நேரங்களில் தேவைப்படுகிறது; அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவனைக் கொன்றது மிகப்பெரிய குற்றம். அவனை யார் கொன்றார்களோ, அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களோ, அவர்கள் எண்ணிபார்க்க வேண்டும். ஒரு தனிப்பட்ட மனிதனை,

நட்டநடு வீதியிலே சேர்ந்து கொண்டு, அவனை ஓடஓட விரட்டிக் கொன்றார்கள். அவனுடைய குடலைக் கிழித்து மாலையாகப் போட்டுக் கொண்டார்கள் என்றெல்லாம் வந்த செய்தி. அதனை யார் செய்திருந்தாலும். அவர்களுக்கு மரண தண்டனை மட்டுமல்ல; மரண தண்டனைக்கு மேலாக ஏதாவது தண்டனை இருந்தாலும் அதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அங்கே இருந்து பிரச்சினை தொடங்குகிறது. அந்தத் தீவிரவாத மூர்க்கத்தனம், அங்கிருந்துதான் தொடங்குகிறது. அந்தப் போலீஸ்காரர்கள், கோட்டைமேட்டுப்பகுதிக்கு–நான் கேட்கிறேன். கோட்டைமேட்டுப் பகுதி என்றால், அது என்ன அராஜகவாதிகள் வாழ்கின்ற பகுதியா? மனித உருவிலே மிருகங்கள் வாழ்கின்ற பகுதியா? அங்கே நல்லவர்களே இல்லையா? அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்கள் எல்லாம் குண்டுகளைத்தான் சாப்பிடுகிறார்களா? வன்முறையைத்தான் அவர்களுடைய வாழ்க்கையின் அடித்தளமாக அமைத்திருக்கிறார்களா? அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? போலீஸ்காரர்கள் அவர்களுடைய கடமையைச் செய்கிறார்கள்; செய்யட்டும். அப்படிச் செய்யாவிட்டாலும், நாங்கள் குற்றம் சொல்வோம். கடமையைச் செய்ய வேண்டுமென்று கோரக்கூடியவர்களிலே, நாங்கள் முன்னணியிலே இருப்போம். ஆனால், அவர்கள் இளைஞர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்துகிறார்கள். தேவைப்படின், துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டும்; அதில் சுணக்கம் கூடாது; அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அந்தத் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு சில ஒழுங்குமுறைகள் இருக்கின்றன. There are certain disciplines. அதன்படி, நாம் என்ன செய்ய வேண்டும்? முதலிலே தடியடி நடத்த வேண்டும். போலீஸ்காரர்கள், அவர்களுடைய பணியைச் செய்ய முடியாவிட்டால், அராஜகம் கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் தடியடி நடத்த வேண்டும். அதிலேயும். அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால், கண்ணீர்ப் புகையை விடலாம். அல்லது, தண்ணீரைப் பாய்ச்சலாம். அதிலேயும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்று சொன்னால், அவர்கள் என்ன செய்ய வேண்டும்? வானத்தை நோக்கிச் சுடலாம். வானத்தை நோக்கிச் சுட்ட பிறகு, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வேறு வழியில்லை என்ற ஒரு நிலைமை வந்தால், அவர்களை வழிநடத்துகிற அதிகாரிகள் அப்படிக் கருதினால், அவர்கள் உத்தரவிட்டால்— இது மிக முக்கியமானது—அந்த மேலதிகாரிகள் உத்தரவிட்டால், அவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தலாம். அதுவும் அப்படி நடத்துவதாக இருந்தால்,





முழங்காலுக்குக் கீழேயிருந்துதான் அவர்கள் சுடத் தொடங்க வேண்டும். தாறுமாறாகச் சுடக்கூடாது என்பது, உலகம் எங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற, துப்பாக்கிச் சூட்டில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிமுறை என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூற விரும்புகிறேன். அப்படி நடக்கவில்லை என்பதுதான் எனக்கு மிகுந்த மனக்குறையாகத் தெரிகிறது.

ஏனென்றால், தமிழ்நாட்டுப் போலீஸைப் பற்றி நினைக்கும்போதே நாமெல்லாம் தலைநிமிர்ந்து நடக்கக்கூடியவர்கள். உலகத்திலேயே, ஒரு சிறந்த, பொறுப்புள்ள, கடமையுணர்ச்சியுள்ள போலீஸ், தமிழ்நாட்டுப் போலீஸ் என்று ஒப்புக் கொள்கிற நாம், இப்படிப் பொறுப்பற்ற முறையிலே, மேலதிகாரிகளுக்கும், அவர்களுடைய உத்தரவுகளுக்கும் காத்துக் கொண்டிருக்காமல், நினைத்தபடி, ஒவ்வொருவரும் துப்பாக்கிச்சூடு நடத்துவோம் என்று சூளுரைத்து, மார்பகத்தைப் பார்த்து அவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால்—அதுகுறித்து விசாரணைக் கமிஷனை, இன்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள்; விசாரணைக் கமிஷன்மீது எனக்கு அளப்பரிய நம்பிக்கை உண்டு; ஏனென்றால், நீதி உணர்வுக்கு நிலைக் களமாக இருக்கிற, இந்தத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல; குஜராத் மாநிலத்திற்கும் சென்று, தமிழ்நாட்டினுடைய நீதி உணர்வுக்குச் சான்று பகர்ந்து வந்திருக்கக்கூடிய ஒரு பெருமகனார் அந்த விசாரணைக் கமிஷனில் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், ஏன் இது தொடர்ந்தது என்பதைப்பற்றி, அரசும் சிந்திக்கக் கடமைப்பட்டதாக இருக்கிறது.

முற்பகல் 10-20

நான் கேட்கிறேன். ஒரே துப்பாக்கிச்சூட்டிலே ஒரே நாளிலே இவ்வளவு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்களே, வாழ வேண்டியவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்களே, அரும்பு மீசையுடைய அப்போதுதான் வாழ்க்கை அரும்பிக் கொண்டிருக்கூடிய அந்த இளந்தளிர்கள் துப்பாக்கியால் சுட்டுச் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பெற்றெடுத்த தாய்கள், அவர்களுடைய தந்தைகள், பெரியவர்கள் எல்லாம் பார்த்துப் பார்த்து அலமலந்து நின்றிருக்கிறார்களே, அவர்களைத் துப்பாக்கிச் சூட்டால் மரணமடையச் செய்தார்கள். ஆனால் வந்து கேட்டவர்களை, துப்பாக்கியைவிட மிக மிகக்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மார்ச் 23

கொடுமையான கொடுஞ்சொற்களைப் பயன்படுத்தி, பெண்களை எல்லாம் அவமானப்படுத்தி வீட்டுக்கு உள்ளேயிருந்து தரதரவென்று இழுத்து வந்து வெளியே போட்டு பூட்ஸ் காலால் மிதித்து—சமுதாயத்தில் பெண்ணினம் என்று சொன்னால் அதற்குத் தனி மரியாதை தருகிற நம்முடைய தமிழினத்தினுடைய தனிப்பெரும் பண்புகளை, இன்றைக்கு இந்தக் கோட்டைமேட்டுப் பகுதியிலே மட்டுமல்ல அங்கே மிதித்ததன் வாயிலாக ஒவ்வொரு தமிழனுடைய நெஞ்சத்திலேயும் மிதித்திருக்கிறார்களே அதை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்போதுகூட செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். ரிக்ஷாக்காரன்கூட இப்படிச் சொல்கிறான் என்று. அந்த வார்த்தையை அவர்கள் எடுத்துவிட்டார்கள். ஒரு இஸ்லாமியச் சகோதரியை நான் ஏற்றிக் கொண்டு போகமாட்டேன், அவர் குண்டு வைத்திருப்பார் என்று நினைக்கும் அளவுக்கு நாட்டில் செய்திகளைப் பரப்புகிறார்கள். அப்படிப் பரப்புவதற்கு நாம் வழிவகுத்துத் தரலாமா? நான் கேட்கிறேன். பொது நன்மை என்று ஒன்றிருக்கிறது. It is opposed to public policy. இதே அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மிக மூத்த உறுப்பினராக அவர்கள் இங்கே இருக்கிறார்கள். குமாரசாமி ராஜா காலமாக இருந்தாலும், ஓமந்தூரார் காலமாக இருந்தாலும், பெரியவர் பிரகாசம்காரு காலமாக இருந்தாலும், அதற்குப் பிறகு வந்த நம்முடைய ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் அந்தக் காலங்களிலெல்லாமிருந்து அவர்கள் இங்கே உட்கார, நம்முடைய மாண்புமிகு அறிவு உலகத்தினுடைய பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், இனமானக் காவலர் பேராசிரியர் போன்றவர்களும், தமிழினத்தின் தானைத் தலைவர் கலைஞர் அவர்களும் உட்கார்ந்து இங்கே அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். பல கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்கமாட்டார்கள். பொது நன்மையை உத்தேசித்து விளக்கத்தை, விவரத்தை அரசு வெளிப்படுத்துவதற்கில்லை என்று எத்தனை பதில்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. நான் எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆயிற்றே, சொல்லித்தான் ஆக வேண்டும் என்று எப்போதாவது வற்புறுத்தியதுண்டா கலைஞர், பேராசிரியர் வற்புறுத்தியதுண்டா? அவர்கள் நாடாளுமன்றத்திலும் இருந்திருக்கிறார்கள். அங்கே வற்புறுத்தியதுன்டா? ஏன் இவை



1998 மார்ச் 23] [திரு. ம. அப்துல் லத்தீப்]

நாட்டுக்குத் தெரியக்கூடாது என்று சொன்னால் நாட்டின் ஒழுக்கம் கெட்டுவிடக்கூடாது, இந்தத் தீமையை நாம் சுட்டிக்காட்டி இன்னொரு பெருந்தீமையை நாம் வரவழைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக அப்படி ஒரு நடைமுறையை இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்திலே நாம் வைத்து வந்தோம். இந்த அவை அதற்கு எடுத்துக்காட்டான ஓர் அவை, வரலாற்றுச் சிறப்புமிக்க அவை. நான் கேட்கிறேன், ஒரு ரிக்ஷாக்காரன் இந்த உணர்வைப் பெறும் அளவுக்கு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன.

நேற்றையதினம் பெரியமேடு மசூதியிலிருந்து ஓடிவந்தார்கள். ஏனென்று சொன்னால் பூட்ஸ் காலோடு நாயை அழைத்துக் கொண்டு மசூதிக்குள் நுழைந்து அங்கேயிருக்கக்கூடிய மார்க்க பெரியார், தொழுகை நடத்தக்கூடியவர், அவர்கள் கையைப் பிடித்து இழுத்துச் சென்று தகாத கேள்விகளைக் கேட்டார்கள் என்று என்னிடத்திலே வந்து சொன்னார்கள். நான் அவர்களுக்கு அறிவுரை கூறினேன். நாடு முழுவதும் ஒரு தீமை பரவியிருப்பதாக அரசு கருதுகிறது. போலீசும் நினைக்கிறது. அந்தத் தீமையைத் தடுக்கக்கூடிய பெரும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. எனவே அவர்கள் கடமையைச் செய்யும்போது நீங்கள் யார் என்று தெரியாமல் செய்திருக்கக்கூடும். நாயை அழைத்துச் செல்வது நம்முடைய மார்க்க உணர்வுக்குத் தீங்கு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. நாய் இருந்தால் சில துப்புகளைத் துலக்க முடியும். யாரோ சொல்லிவிட்டிருக்கிறார்கள், எல்லாத் தீவிரவாதிகளும் மசூதியில் தஞ்சம் புகுந்துவிட்டார்கள், மசூதியிலேதான் குவியல், குவியலாக வெடிகுண்டுகளை வைத்திருக்கிறார்கள் என்று. எனவே அவர்கள் கடமையைச் செய்கிறார்கள். அதை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அறியமாட்டார்கள் என்று நான் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பினேன். தயவுசெய்து நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் தெளிவாகச் சொல்கிறேன். இங்கே கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள் சில தினங்களுக்கு முன்பு ஒரு சந்தேகத்தை என்னிடத்திலே கேட்டார். முஸ்லீம் அல்லாதோரைப் படுகொலை செய்தால், யார் ஒருவர் அப்படிப் படுகொலை செய்கிறாரோ அவர் நேராக சொர்க்கத்திற்குப் போவார் என்று சொல்கிறீர்களாமே, முஸ்லீம் மதத்திலே அப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறதாமே என்று என்னிடத்தில் கேட்டார். அவர்களை நான் குறைபட்டுக்கொள்ளவில்லை. அவரிடத்தில் சொல்லப்பட்ட ஒரு

செய்தியை என்னிடத்தில் கூறி விளக்கம் கேட்டார். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள்—அப்படிச் சொல்லக்கூடாது—பி.ஜே.பி-இல் நான் விரும்புகிற நல்லவர்களில் ஒருவர். இன்னும் சொல்லப்போனால் பிரதமராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் எனக்கு நன்கு தெரிந்தவர்தான். அவரைப்பற்றி நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். அவர் ஒரு நல்ல மனிதர். ஆனால் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்பதுதான் என்னுடைய ஆதங்கமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவ்வளவு நல்ல மனிதர் அவர்.

*முற்பகல் 10-25*

ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். நான் இந்தூரிலே பேசிவிட்டு, போபால் கூட்டத்தில் பேசுவதற்காக வந்துகொண்டிருந்தேன். அங்கே நடந்தது ஒரே முனிசிபல் தேர்தல். அந்தத் தேர்தலுக்காக 6 முதல் 9 மணி வரை எங்களுடைய கட்சியும், 9-லிருந்து 12 வரை அவர்களுடைய பி.ஜே.பி. கட்சியும் ஒரே மேடையில் முனிசிபல் பார்க்கிலே பேசவேண்டியிருந்தது. நான் வருவதிலே கொஞ்சம் தாமதம் ஏற்பட்டுவிட்டது. எனவே, நேராக வண்டி மேடைக்குச் சென்றதும் நான் அந்த மேடையிலே ஏறிவிட்டேன். அப்போது மணி இரவு 10¼ இருக்கும். அங்கே பார்த்தால் வாஜ்பாய் உட்கார்ந்து இருந்தார். நான் திடுக்கிட்டுத் திரும்பி வெளியே போகவேண்டுமென்று திரும்பியபோது அவர் எழுந்துவிட்டார். அவர் அப்போது என்னிடத்திலே சொன்னார். 'லத்தீப் சார், நான் உங்களைப் பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் பேசுங்கள், நீங்கள் இதே மேடையில் பேச வேண்டுமென்று சொன்னார்; அது எப்படி முடியும், பி.ஜே.பி. மேடையில் நான் எப்படிப் பேச முடியும் என்று கேட்டேன். அதற்கு அவர் "அரே கோயி பாத் நஹி லத்தீப் சாப், கோயி பாத் நஹிஹே, ஆப் காங்கிரஸ் கு தோ நஹீ பூச்சேங்கே, ஆப்தோ அப்னி ஜமாத் கேலியே பூச்சேங்கே. ஆப் நஹீ போலேங்கே, தோ மை நஹீ போலுங்கா", என்று சொன்னார். (சிரிப்பு)

நீங்கள் சொல்லவில்லை. நீங்கள் பேசவில்லை என்று சொன்னால், நான் பேசமாட்டேன் என்று சொல்லி, என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்குப் பிறகு நான் பேசினேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கெழுத்தில் எழுதுபவருக்கு உதவியாக அதைத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** அதைப்பற்றி ஒன்றும் இல்லை. கடைசியில் அதே மேடையில் நான் 3/4 மணி நேரம் பேசியதற்குப் பிறகுதான் வாஜ்பாய் பேசினார். அவருடைய பேச்சுக்கும் என்னுடைய பேச்சுக்கும் இம்மியளவும் வித்தியாசம் இல்லாமல்தான் இருந்தது. பிறகு எங்களோடு சாப்பிட்ட பின்னர்தான் அவர் சென்றார். அப்படிப்பட்ட நல்ல மனிதாபிமானமுள்ள அவருடைய பேச்சைக் கேட்பவர்கள், மேலும் அவர் பேசவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். அப்படிப்பட்ட நல்லவர் வாஜ்பாய். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரு இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் இதுவரை ஒரு பதுமைபோல் உட்கார்ந்துதான் இருந்தேன். அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பாமல் ஒழுங்காக இருந்தேன். அப்படி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பாமல் ஒழுங்காக இருப்பவர்களில் நானும் ஒருவன். ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது என்பதற்காக அல்ல. நேரத்தை வீணடிக்கக்கூடாது என்பதற்காக அவ்வாறு இருந்தேன். சில நேரங்களில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டும், சில நேரங்களில் பேசாமல் அமர்ந்து இருக்க வேண்டும் என்ற கடமை உணர்வோடு பதுமைபோல் உட்கார்ந்து இருந்தேன். எனவே அதை எல்லாம் சேமித்து வைத்து இன்றைக்கு நான் பேசுகிறேன். எனவே தயவுசெய்து சிறிது நேரம் அளிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலே ஒரு நல்ல சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. நான் அவர்களைக் கேட்பது—பாபர் மசூதியைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பராயன் மற்றும் திரு. அழகிரி ஆகியோர் மிக நல்ல முறையில் அழகாகப் பேசியிருக்கிறார்கள். அதற்கு மேல் என்னால் பேச முடியாது. எங்களைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி பேசி இருப்பதைப்போல் நான் பேசக் கூடாது. பேச முடியாது என்பதில்லை. நான் பேசக் கூடாது; சிலவற்றை, சிலர்தான் பேசவேண்டும், அவர்கள்

பேசியிருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாபர் மசூதியை உடைத்தீர்கள். உடைத்ததைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஒரு மசூதி உடைந்துவிட்டது என்பதற்காக நாங்கள் இடிந்து போகவில்லை. இந்த நாட்டின் சட்டம் உடைந்து விட்டதே, சட்டத்தின் அடித்தளம் தகர்க்கப்பட்டுவிட்டதே என்பதுதான் எங்களுடைய கவலையே தவிர வேறு ஒன்றுமில்லை. பாபர் மசூதியை உடைப்பதற்குச் சட்டம் தகர்க்கப்படுமானால் வேறு எதற்கும் தகர்க்கப்படலாம் அல்லவா? அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்திய சமுதாயத்தில், அரசமைப்புச் சட்டத்திற்கு மாறாக, நீதி மன்றத்தின் உத்தரவுகளுக்கெல்லாம் மாறாக, எது எதற்கு கட்டுப்படவேண்டுமோ, அதற்கெல்லாம் நாங்கள் கட்டுப்படமாட்டோம் என்ற அடிப்படையில் மசூதியை உடைத்தார்கள். அந்த மசூதியை உடைத்ததற்காக அல்ல, சட்டத்தை உடைத்தார்களே என்பதற்காகத்தான் நாங்கள் எல்லாம் அலமலந்து நிற்கிறோம். அதேபோலத்தான் நாட்டிலே உள்ள அத்தனைபேர்களும் அலமலந்து நின்றார்கள். முஸ்லீம்களைவிட மற்றவர்கள்தான் அந்தக் கொடுஞ்செயலைக் கண்டித்தார்கள். அவர்கள் மீது எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.

*முற்பகல் 10-30*

நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நம்முடைய வேலாயுதன் அவர்களைக் கேட்க விரும்பவில்லை. ஏனென்றால் இந்தக் கேள்வி கொஞ்சம் ஆழமான கேள்வி. நான் கேட்பது, இராமபிரான் ஜென்மமா, அவதாரமா? இதற்குத் தயவுசெய்து இங்கே இருக்கின்றவர்கள் அல்லது இந்து சமய ஆச்சாரியார்களாக இருந்தாலும் சொல்லவேண்டும். ஏனென்றால், நான் பெரியவரிடத்தில்-காஞ்சிப் பெரியவரிடத்தில் கல்வி கற்றவன். காஞ்சிப் பெரியவரிடத்திலே மதத்தைக் குறித்தும், பல்வேறு தத்துவங்களைக் குறித்தும் அவர்களோடு வாதப்பிரதிச் வாதங்களை செய்து இருக்கிறேன். அந்தப் பெரிய மேதை அவர்களிடத்திலே கற்றுக்கொண்ட நான் கேட்கிறேன், நாங்கள் இராமரை அவதாரமாகப் பார்க்கிறோம், ஆனால் நீங்கள் அவரை ஜென்மமாகக் குறைக்கின்றீர்களா? ஜென்மபூமி, ஜென்மபூமி என்று இராமர் அந்த இடத்திலேதான் பிறந்தார்கள், மற்றவர்கள் பிறப்பதைப் போல் பிறந்து, வளர்ந்து, மூப்பு, மரணம் என்ற நிலைக்கு ஆளாகி மரணம் அடைந்தார்



என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டால் ஜென்மம் என்று சொல்லுங்கள். நான் ஒரு ஜென்மம், எனக்குப் பிறப்புண்டு, வளர்ப்புண்டு, மூப்புண்டு, மரணமும் உண்டு, எனக்குத் தோற்றம் உண்டு, முடிவும் உண்டு. ஆனால் இராமருக்கு உண்டா? தசாவதாரம் என்று சொல்லப்படுகின்ற அந்த அவதாரங்களில் வருகின்ற ஓர் அவதாரம் இராமர் அவதாரம் என்று ஒருபுறம் சொல்கின்றீர்கள். இராமர் அயோத்தியிலே பிறந்தார், அது இராமருடைய ஜென்மபூமி என்றும் நீங்கள் சொல்கின்றீர்கள். இராமர் பிறந்தவரா தோன்றியவரா, என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். ஏதோ உங்களுக்குத்தான் இராமரைப் பற்றித் தெரியும், அல்லது இராமரைப்பற்றி நீங்கள்தான் பெருமையாகப் பேசுகின்றீர்கள் என்பதல்ல. இராமர் பிறந்த நாட்டிலே நானும் பிறந்தவன். இராமர் தோன்றிய மண்ணைச் சேர்ந்தவன் நான். அன்றைக்குக் கூடச் சொன்னீர்கள், வெளிநாட்டு மதம் என்று, வெளிநாட்டு மதம் இந்த நாட்டிற்கு வந்தபோது அந்த மதத்தை ஏற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கியவர்கள் யார்? நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். நான் கட்டிய கோயிலுக்குள்ளே நான் செல்லக்கூடாது என்று என்னைத் தடுத்தவர்கள் யார்? நான் பிரதிஷ்டை செய்த ஊர்த்தட்டிலே நீ கை வைக்கக்கூடாது என்று என் கையை உடைத்தவர்கள் யார்? இங்கே கூடச் சொன்னார்களே எதிலேயிருந்து தோன்றினார்கள் என்றெல்லாம் நான் அதைப் பற்றியெல்லாம் பேச விரும்பவில்லை. ஏனென்றால் நான் அந்த வளாகத்திலே இருந்து வெளியே வந்து விட்டேன். மீண்டும் அந்த வளாகத்தைப் பற்றி நான் விமர்சனம் செய்யக்கூடாது. எனவே, இராமர் எல்லா இடங்களிலும் இருக்கிறார். அவர் தோற்றத்தை யாரும் அறிய மாட்டார்கள், அவர் முடிவையும் அறிய மாட்டார்கள். அவர் ஒரு அவதாரம் என்ற நம்பிக்கை இந்த நாட்டிலே இருக்கிறது.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும், புரட்சிக் கவிஞர் இக்பால் சொல்கிறார் இராமரைப் பற்றி, அவர் பாடுகிறார். என்ன பாடுகிறார்.

ஹே ராம் கே வஜீத்சே ஹிந்துஸ்தான் கு நாஜ்
அஹலே நஜர் சமஸ்தே ஹைன் உஸ்கு இமாமே ஹிந்த்.

இந்த நாட்டிலே இராமர் பிறந்ததால், இந்த நாட்டிலே நடை பயின்றதால் அதன் காரணமாக இந்த நாட்டிற்கு, உலக அரங்கத்திலே அதாவது உலகத்திலேயே மிகப் பெரிய தலைசிறந்த இடம் உண்டு. 'நாஸ்'- 'பெருமை' உண்டு.

"அஹலே நகர் சமஸ்தே ஹைஹன் உஸ்கு இமாமே ஹிந்த்." தூரப் பார்வையுடையவர்கள், ஆழமாகப் பார்க்கக்கூடியவர்கள் உண்மை நெறியாளர்கள் இந்தியாவை வழிநடத்தக்கூடிய வழிகாட்டி இராமர் என்பதை ஏற்றுக்கொள்கிறோம் என்று இக்பால் அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் அவரை ஜென்மம் ஆக்கி விட்டீர்கள். ஆனால் அவர் வழிகாட்டி என்று சொல்கிறார். நான் உங்களைக் கேட்கிறேன், இப்போது இதுதான் முக்கியமா? நாட்டிலே இப்போது இதுதான் முக்கியமா? (மணியடிக்கப்பெற்றது) நான் உங்களைக் கேட்கிறேன், எத்தனை பேருக்கு உண்ண உணவு இல்லை, எத்தனை பேருக்கு உடை இல்லை. இந்த நாடு உண்மையாக முன்னேற வேண்டுமானால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் வளர வேண்டும். அந்தப் பொருளாதாரம் வளர வேண்டிய ஒரு கால கட்டத்திலே இன்றைக்கும் பெருமூச்சு விடக்கூடிய கோடானுகோடி மக்கள் இந்த நாட்டிலே இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா?

இன்றைக்கு பி.ஜே.பி. அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த அரசுக்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்படி வாழ்த்தும்போது 5 ஆண்டுகளுக்கு நீங்கள் ஆளவதற்கேற்ப ஆளுவதற்கேற்ப உங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டு, சட்டப்படி நீங்கள் ஆளவேண்டுமென வாழ்த்துகிறேன். யாரோ போய்ச் சொன்னார்கள். ஆதரிக்கிறேன் என்று சொன்னார்கள். 'வா' என்று அழைத்தார்கள். அதன்பிறகு அவர்கள் 'வா' என்றால் போகமாட்டேன் என்கிறார்கள். இவை எல்லாம் என்ன? இந்த விரசங்கள் எல்லாம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் வரமாட்டேன் என்பது, அவர்களைப் பற்றி விமர்சனம் செய்வது, அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழக ஆட்சியைக் கலையுங்கள் என்று சொல்வது; கலைத்தால்தான் நான் வருவேன் என்று சொல்வது; இப்படியெல்லாம் சொன்னார்கள் என்று பத்திரிகைகளிலே பார்க்கிறேன். 356-ஐ எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று நீண்ட ஆய்வுகள் செய்து அதன்படிதான் நாடு நடைபயில வேண்டும், மாநிலங்களுடைய சுயாட்சி காப்பாற்றப்பட வேண்டும், அந்த அளவிற்கு அரசமைப்பு சட்டத்திற்கு மரியாதை செய்யப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என்று சொல்லி, அப்படி யார் மதிக்கவில்லையோ அவர்களுக்கு இந்த நாட்டிலே இடமில்லை என்று சொன்ன திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய், மரியாதைக்குரிய திரு. லால்கிருஷ்ன் அத்வானி இவர்கள்



எல்லாம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடியவர்கள். யாருக்கோ ஏற்பட்ட ஒரு அவசரம், அரிப்பு காரணமாக—அவர்களுக்கு எடுத்த இந்த, நான் என்ன சொல்வதென்றே தெரியவில்லை.—அவர்களுக்கு அப்படி ஏற்பட்டதன் காரணமாக, அதைத் தீர்த்து வைப்பதற்குத்தானா ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்? நான் கேட்கிறேன், அப்போது ஏன் இரண்டு தேர்தல் நடத்த வேண்டும்?

முற்பகல் 10-35

Why there should be a separate constitutional provision for the election of the Parliament and for the election of the State Legislature? These are two distinct, separate constitutional entities and these two constitutional entities cannot be combined. You cannot treat each entity as per your own whims and fancies என்று அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது அவர்களுக்குத் தெரியவில்லையா? நாம் இங்கு இருக்கிறோம். நமக்குத் தெரியவில்லை. சில பேருக்குத் தெரியவில்லை. நமக்குத் தெரியவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்கும் தெரியவில்லை என்று சொன்னால் ஜனநாயக நாட்டிலே அரசமைப்புச் சட்டப்படி நடக்கின்ற நாம், அந்த அரசமைப்புச் சட்டம் அலைக்கழிக்கப்படுமேயானால், ஜனநாயகத்தில் யாருடைய வாக்கால், யார் ஆட்சிக்கு வந்தாலும் யார் அந்த அரசமைப்புச் சட்டத்தை அலைக்கழிக்கிறார்களோ, அவர்களை அழிப்பதற்கு இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு முழு உரிமை உண்டு என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வெறுமனே சொல்கிறார்கள். அவையெல்லாம் எதுவும் நடக்கப்போவதில்லை; நடக்கவும் முடியாது. (மணியடிக்கப்பெற்றது). துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்துக்களாக இருந்தவர்கள்தான், சுமார் 400 அல்லது 500 ஆண்டுகளுக்குப் பிறகு முஸ்லீம்களாக மாறியிருக்கலாம். என்னுடைய மூதாதையர்கள் இந்துக்கள். நான் இன்னும் தெளிவாகச் சொல்லுவேன். மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் கட்ட அடிகோலியவர்களே நாங்கள்தான். எங்களுடைய மூதாதையர்கள்தான். ஆனால், அடிகோலிய பிறகு, நாங்கள் பிரதிஷ்டை செய்த மீனாட்சியம்மையை நெருங்க முடிந்ததா?

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மார்ச் 23

இல்லை. காரணம், இப்போது நான் சூத்திரன். சூத்திரன் என்ற அந்த நிலையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காக மதம் மாறினேன். அதனால் எனக்கு பிரமோஷன் கிடைத்தது. இப்போது அவர்களுடைய மொழியிலே எங்களுக்கு என்ன பெயர் தெரியுமா? 'மிலேச்சன்'. அப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனுடைய மாண்பு காப்பாற்றப்பட வேண்டாமா? நான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரன், நான் இந்த நாட்டை உருவாக்கியவன். 'நீ ஆயிரம் கட்சிகளுக்கு மாறுகிறாய், உன்னை யாராவது கேட்கிறார்களா?' நீ கட்சி மாறலாம், நான் மதம் மாறக்கூடாதா? கட்சி மாறுவதற்குத் தடையில்லை. காலையிலே ஒரு கட்சி, மாலையிலே ஒரு கட்சி என்று மாறுகிற நிலைமை இருக்கிறது. ஆனால், நாங்கள் எங்கள் அணியிலே இருந்து கூட மாறுவது இல்லை. அப்படி மாறுவதை நாங்கள் ஒரு பிணியாகக் கருதுகிறோம். எனவே, நாங்கள் இங்கே வந்தோம். இங்கே வந்த பிறகு என்னுடைய எண்ணப்படி வாழ்வதற்கு எனக்கு முழு உரிமை உண்டு. அதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எங்களுடைய உரிமையை யாராவது தடுப்பார்களேயானால், அந்த வாழ்க்கை எங்களுக்கு வெல்லம் அல்ல, அந்த வாழ்க்கை வாழ்வதைவிட, உரிமையோடு, மானத்தோடு, சுயமரியாதையோடு வாழ்வதற்குத்தான் நாங்கள் நினைப்போம்.

எனக்கு இருக்கின்ற கவலை எல்லாம், ஆட்சி வருகிறது; ஆட்சி போகிறது. இங்கே சில நண்பர்கள் பேசினார்கள். தமிழைப் பற்றி, தமிழ் உணர்வைப் பற்றிப் பேசினார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் வெளிப்படுத்தியது தமிழ் உணர்வா? தேர்தலிலே வெற்றியடைந்த பின்னால், கொள்கையை மாற்றிக் கொள்ளலாமா? கலைஞர் அவர்கள் தேர்தலிலே வெற்றி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், 'எப்போதுமே' அவர் ஜெயசீலர், (மேசையைத் தட்டும் ஒலி) என்ன காரணம் என்றால், அவர் கொண்டிருக்கிற கொள்கையிலே உறுதியாக இருக்கிறார். அவர், அவராகவே இருக்கிறார். யாருக்கும், எப்போதும் அவர் அடிமையானது இல்லை.

இப்போது தேர்தல் நடந்து முடிந்தது. நான் மிகவும் வேதனைப்படுகிறேன். யார், யாரோடு எல்லாமோ சேர்ந்து விட்டார்கள். அப்படிச் சேரலாமா? நாங்கள் எல்லாம் இதை எண்ணிக்கூடப் பார்க்கவில்லையே? தமிழைப் பற்றிப் பேசுகின்ற நீங்கள், திராவிட இயக்கத்தைப் பற்றிப் பேசுகின்ற நீங்கள், அண்ணாவையும், பெரியாரையும் சுட்டிக்காட்டும்போது மனம் வேதனையடைகிறது.



1998 மார்ச் 23] [திரு. ம. அப்துல் லத்தீப்]

'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட
மாந்தரை நினைந்து விட்டால்'

என்று பாரதியார் சொன்னதைப்போல, இவர்களை நினைத்து விட்டால், நமது நெஞ்சு பொறுக்காமல், துடித்துக் கொண்டிருக்கிறோம்; தவித்துக் கொண்டிருக்கிறோம். யார் யாரோடு சேர்வது? கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

என்னுடைய நண்பர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் உங்களை வைத்து சப்த லோகங்களைப் படைத்தது போல, டாக்டர் கலைஞர் அவர்களை நடுநாயகமாக வைத்து இந்த நட்சத்திரங்களை எல்லாம் சேர்த்து தமிழனுடைய மானத்திற்குச் சான்று பெறுவோம் என்று முயற்சித்தவர்கள் அல்லவா? அதிலே வெற்றியும் கண்டவர்கள் அல்லவா? அவர்களுக்கு இடையிலே என்ன ஏற்பட்டு விட்டது? இன்று, இந்து பத்திரிகை என்ன எழுதியிருக்கிறது? 'யாருக்கு வெற்றி என்றால், யாருக்குத் தோல்வி என்றால், பெரியாருக்குத் தோல்வி, அண்ணாவுக்குத் தோல்வி, நாராயண குருவுக்குத் தோல்வி' என்று எழுதியிருக்கிறது. ஏனென்று சொன்னால் பெரியார் தமிழ்நாட்டிலே இருக்கிறாரா?

முற்பகல் 10-40

நமது நெஞ்சங்களிலும் உள்ளங்களிலும் வீற்றிருந்த அந்தப் பகுத்தறிவுப் பகலவன் என்று என்னுடைய அருமைச் சகோதரர் திரு. கணேசன் அவர்கள் சொன்னார்களே, அந்தப் பகுத்தறிவுப் பகலவன் அஸ்தமனமாகிவிட்டதா? அஸ்தமனமாகியதும், உங்கள் நெஞ்சங்களிலும், உள்ளங்களிலும் அது அஸ்தமனமாகிவிட்டதா? அண்ணா என்ன ஆனார்? அண்ணாவை கொடியில் பிடித்து இருப்பவர்களே, அவர்களை ஒரு தடியில் தாங்கி நிற்பவர்களே, மடியில் அவர்கள் உண்டா, அண்ணா உண்டா, தயவுசெய்து நான் கேட்கிறேன். இன்றைக்கு யாருக்குத் தோல்வி என்று நினைக்கிறீர்கள்? உனக்குத் தோல்வி, எனக்குத் தோல்வி, வருங்கால தமிழ்ச் சமுதாயத்திலே தோன்றக்கூடியவர்களுக்குத் தோல்வி. ஆனால் ஒன்றை நான் சொல்கிறேன், கடந்த தேர்தலிலே என்ன நிலைமை? அது இப்போது மாறியிருக்கிறதே, இல்லையா? அடுத்த தேர்தலில் இதே நிலைமை இருக்குமென்று நம்புகிறீர்களா? நீங்கள், அண்ணா, நிரந்தர முதல்வர் என்று சொன்னால் உங்களுடைய கைகளை எடுத்து என்னுடைய

கன்னத்திலே ஒத்திக்கொள்வேன். ஆனால் யாரை நிரந்தர முதல்வர் என்று வீர கர்ஜனை செய்கிறீர்கள்? தயவு செய்து-திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு ஆளட்டும் - நீங்கள் நிரந்தர முதல்வர் என்று சொல்லாதீர்கள். நிரந்தர முதல்வர் என்று சொன்னவர்கள் என்ன ஆனார்கள் என்பதை இந்த நாடு அறியும். நாம் அறிவோம். கலைஞர் அவர்களைக்கூடக் கடந்த கூட்டத் தொடரின்போது சில நண்பர்கள் நிரந்தர முதல்வர் என்று சொன்னார்கள், நான் உடனடியாகத் தடுத்தேன் சொல்லாதீர்கள் என்று. ஏனென்றால், நான் கலைஞர் மீது அளப்பரிய அன்பு வைத்துள்ளவன். அதனால் அப்படிச் சொல்லாதீர்கள் என்றேன். 'நிரந்தரம்' என்பது 'அவன்' தான்; 'அவனைத்' தவிர வேறு ஒன்றும் நிரந்தரம் இல்லை. 'அந்தரம், நிரந்தரம்' யார்? 'அவர்' தான், எனவே அப்படிச் சொல்லாதீர்கள்.

இந்து, முஸ்லீம் என்றெல்லாம் பேசுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன் (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்து விடுகிறேன். உங்களுக்கு ஒத்துழைக்கிறேன். எனக்குப் பொறுப்பு இருக்கிறது. பேசி முடித்து விடுகிறேன்.

இந்து, முஸ்லீம் என்றெல்லாம் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், முதலிலே நாம் மனிதர்கள், நல்ல மனிதனாக இருந்தால் நல்ல முஸ்லீமாக இருக்க முடியும்; நல்ல இந்துவாக இருக்க முடியும். தயவு செய்து அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இந்த இந்து என்ற வார்த்தையே இந்தியாவின் வார்த்தை அல்ல, இந்தியாவிற்குத் தெரியாத வார்த்தை, சனாதனம் என்றால்தான் இந்தியர்கள், இங்கே இருக்கிற தர்மம் சனாதன தர்மம், அதைத்தான் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களும் ஒப்புக்கொண்டார்கள்.

கீரனூர் கோர்ட்டில் ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள், நீதிபதி பானுமதி அவர்கள். அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். சனாதனம்தான் இந்த நாட்டினுடைய தர்மம். அதுதான் இந்து மதம். இந்து என்பது அரபு வார்த்தை. இந்து என்று சொன்னால் அழகு என்று பொருள்; பாரசீகத்திலும் பொருள் அதுதான். இந்தி என்றால் அழகன், இந்தா என்றால் அழகி என்றே அதில் பயன்படுகிறது. அவர்கள் இந்த நாட்டிலே வந்து பார்த்தார்கள்—பாலைவனத்தைப் பார்த்தவர்கள் இங்கேயுள்ள சிந்து தீரத்தையும், காவிரி தீரத்தையும்



பார்வையிட்டுவிட்டுச் சொன்னார்கள், இந்து என்ற மதம் இல்லை. இருக்கிறது என்று சொன்னால் அது இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளலாம், அதிலே ஒன்றும் தகராறு இல்லை என்று எனவே, தயவுசெய்து நான் எல்லோரையும் கேட்டுக் கொள்வது, இதையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது நீங்கள் போலீஸ்காரர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. ஜி.பழனிசாமி.. திரு. லத்தீப் உட்காருங்கள். ஏறத்தாழ 40 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஓர் உறுப்பினர் பேசி, அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவேண்டும், அதன்பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேலாயுதன் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. லத்தீப் தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ நம்முடைய மண்ணில் இருந்து தங்கப் பரல்களைத் துகள்களைத் தேடுவதுபோன்று நாட்டில் இருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் சென்று பெண்களுக்கு எல்லாம் தொந்தரவு கொடுத்து எல்லோரையும் கைது செய்கிற வேலை தொடருமானால் எனக்கு ரொம்ப கவலையாக இருக்கிறது. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். இதை நிறுத்த வேண்டும். ஏனென்றால், மக்கள் ஆழமாகச் சிந்திப்பதில்லை. அவர்கள் ஒரு முடிவு செய்துவிட்டால், நன்றாக இருக்காது. அந்த முடிவுகளுக்கு அவர்கள் வரக்கூடாது. இன்னும் சொல்லப்போனால் தண்டனை கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுங்கள்; மரண தண்டனைகூடச் கொடுங்கள். ஆனால் அப்பாவிகளைத் தயவுசெய்து எந்த வகையிலும் தொந்தரவு செய்யாதீர்கள், நான் உங்களைக் கேட்டுக்கொள்வது போலீஸ்காரர்களுக்கு ரூ.1,000 கொடுத்திருக்கிறீர்கள். அது உங்கள் இஷ்டம்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது. திரு. லத்தீப் தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 10-45

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். காவலர்கள் முதல் டி.ஜி.பி. வரையிலும் எல்லோரும் நன்றாகச் செய்திருக்கிறார்கள் என்று ஒப்புதல் கொடுப்பதற்கு 1,000 ரூபாய் கொடுத்திருந்தால் அது மிகவும்

வேதனைக்குரியது. அந்த நிலை இல்லை என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, எல்லாச் சமுதாய மக்களும்—இப்போது நாம் செய்ய வேண்டியது நாட்டை முன்னேற்ற வேண்டியது; நாம் எல்லாம் சகோதரர்கள்; மதங்கள் வீடுகளிலே இருக்கட்டும்; கடவுளை மற, மனிதனை நினை என்று சொன்ன மகத்தான மாமனிதர்கள் தோன்றிய இந்த நாட்டில் நாம் மனிதனை நினைத்துவிட்டு, மனிதர்களுக்கு நன்மை செய்துவிட்டு, பிறகு நாம் கடவுளைப் பற்றிச் சிந்திக்கலாம்; கடவுளை நாம் காப்பாற்றத் தேவையில்லை; கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்; கடவுளை நாம் காப்பாற்ற வேண்டுமானால், இந்த கடவுள் பயல்கள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்து, தயவுசெய்து இந்தக் கடவுள்களை வைத்துக் கொண்டு மனிதர்கள் சண்டை போடக்கூடாது என்பதைத் தெரிவித்து, அமைதி திரும்ப, நியாயங்கள் செய்யப்பட, நீதியை நிலைநாட்ட, அப்பாவிகளைக் காப்பாற்ற, அரசு முறையாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் **துணைத் தலைவர்** அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஜி. பழனிசாமி.

**திரு. சி. வேலாயுதன்:** ஒரு நிமிஷம்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை, உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகின்றேன். உயர்ந்த பாரத ரத்னா விருது பெற்ற தமிழகத்தைச் சார்ந்த சிறந்த விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கும், இசை மேதை எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநரும் அரசியல் மேதையுமான திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக இந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிற அந்தப் பாராட்டுதல்களோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தனது பாராட்டுதல்களை இணைத்துக்கொள்ள விரும்புகிறது.



**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

குறிப்பாக, மேதகு ஆளுநர் உரையில் இந்த மாநிலத்தில் நலிந்த மக்கள் பொருளாதார வளர்ச்சி அடைகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும் என்று சொல்லி இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்று சொன்னால், அரசு அதிகார மட்டத்திலேயே இருந்துவிடாமல், மக்கள் விழிப்புணர்வு அடையக்கூடிய விதத்தில் இந்தப் பொருளாதார மேம்பாடு அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக, நடந்து முடிந்து இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் பற்றி எனக்கு முன்னால் இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிற கருத்துக்களோடு எங்களது கருத்துக்களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுகின்ற மாநிலக் கட்சிகளுக்கு எதிரான வகையில், நடந்து முடிந்து இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில்—ராஜஸ்தான், மகாராஷ்டிரா, பஞ்சாப், குஜராத், பீகார், அசாம், ஓரிசா, மத்தியப் பிரதேசம், ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய 11 மாநிலங்களில் ஆளுகின்ற கட்சிகளுக்கு எதிரான வகையில் வாக்குகளை மக்கள் அளித்து இருக்கிறார்கள். அநேகமாக, நாடாளுமன்றத் தேர்தலிலே தமிழகத்திலே வெற்றி பெற்று இருக்கிற கட்சிகள் தினந்தோறும் டில்லிக்குப் போகிறபோது, டில்லிக்குப் போய்விட்டு திரும்பி வருகிறபோது கொக்கரிக்கின்ற அவர்கள் அந்த நிலைகளை உணர வேண்டும் என்பதற்காக இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்றும், கலைத்தே தீர வேண்டும் என்றும் சொல்லக்கூடியவர்கள், முதலில் மகாராஷ்டிராவையும் ராஜஸ்தானையும்—அங்கு ஆளுகின்ற கட்சி பாரதிய ஜனதா கட்சியைப்பற்றி சொல்ல வேண்டும். 11 மாநிலங்களில் ஆளுகின்ற கட்சிகளுக்கு எதிரான தீர்ப்பினை மக்கள் இந்தியாவிலே இப்போது தந்து இருக்கிறார்கள், இதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால், மத்தியிலே நிலையான ஆட்சி வேண்டும் என்று தமிழகத்திலே கடந்த தேர்தலில் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கினார்கள். இன்றைக்கு ஒரே ஒரு சீட் யாருக்கு என்று நாடாளுமன்றத்தில் பலப் பரீட்சை நடக்கப்போகிறது.

எனக்கு முன்னால் இந்தச் சட்டமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி வரிசையில் பேசிய தலைவர்களும் உறுப்பினர்களும், நேற்றையதினமும், அதற்கு முன்பாக கடந்த இரண்டு நாட்களாகவும், இன்றும்

தங்களுடைய வாதங்களை எடுத்து வைக்கிறபோது, பல நிலைமைகளைக் கண்டோம். இப்போது ஏற்பட்டுள்ள வாய்ப்புகளை வைத்துக்கொண்டு, வெற்றியை வைத்துக்கொண்டு, அவர்கள் எல்லாம் நிரந்தரம் என்று கொக்கரிக்கிற நிலையை எல்லாம் நாம் கண்டோம். அங்கே நிலைமை, ஒரே ஒரு சீட்டிலே நாடாளுமன்றத்தில் ஆடிக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

முற்பகல் *10-50*

அங்கே பாரதீய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் பரிதாபமான அரசியல் நிலைமை உருவாகியிருக்கிறது. அதை உணருபவர்களுக்கு நல்லது. பாரதீய ஜனதா கட்சிக்கு 264 சீட்டுகளும், காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணிக்கு 263 சீட்டுகளும் உள்ள நிலையில் 27ந் தேதி வாக்கெடுப்பில் எந்த ஆட்சி என்பது தீர்மானிக்கப்பட இருக்கிறது. அதைத் தீர்மானிக்கிற போதுதான் அந்த அரசு எந்த அளவுக்கு நடக்கப்போகிறது என்று தெரியும். அங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அமைச்சர்களாகப் பதவிப் பொறுப்புகளிலே இருப்பவர்கள் சிலர், இங்கே ஐந்தாண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு மக்களின் வரிப்பணத்தைச் சுருட்டிக் கொண்டு இருந்தவர்கள், அரசாங்கத்தின் நிலங்களை அபகரித்தவர்கள், இன்றைக்கு மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அதிலிருந்து தப்பித்து விடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்கள் ஏதோ நாடாளுமன்றத் தேர்தலில் மாற்றி வாக்களித்து விட்டார்கள் என்று எண்ணி, நீங்கள் ஏமாந்து விடக்கூடாது. அப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் தமிழ்நாட்டு மக்கள் உங்களை மன்னிக்கமாட்டார்கள். காரணம் இனிமேல் தமிழகத்திற்கு வருகிற மத்திய அமைச்சர்களை மக்கள் பார்த்து மனு கொடுக்கவேண்டுமென்றால், அவர்கள் போய்ப் பார்க்கவேண்டிய இடம் கோர்ட்டுகள்தான். அங்கேதான் மனுக்கள் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு நிதி பெற நாம் மனு கொடுத்துப் பார்க்க வேண்டிய இடம் இனிமேல் கோர்ட்டாகத்தான் அமைந்திருக்கிறது. அவர்கள் ஆண்டபோது அவர்கள் தமிழக அரசின் நிலங்களை அபகரித்து, பினாமியாக எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த



நிலங்களை நீங்கள் கைப்பற்றியாக வேண்டும். அவர்களுடைய சொத்துக்களை நீங்கள் பறிமுதல் செய்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் உங்களை நிந்திப்பார்கள்.

அவர்கள் அங்கே இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்கலாம். ஆனால் வேதனை என்னவென்றால், அந்த ஆட்சி குரங்கு கையில் கிடைத்த பூமாலை போல ஆகிவிட்டது. பிய்த்துப் பிய்த்துப் எறியுது. எல்லாம் சின்னப்பிள்ளை விளையாட்டைப் போல சாதாரணமாக நடக்கிறது.

இங்கே நடைபெறுகின்ற விவாதங்களின்போது, முதலமைச்சர் அவர்கள் கூடக் கையிலே பேப்பரை வைத்துக் கொண்டு குறிப்புகள் எடுத்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஏதோ கிழித்துக் கிழித்துப் போட்டுக்கொண்டிருக்கவில்லை. ஆகவே எதையெதைப் பேச வேண்டும், எதையெதைப் பேசக்கூடாது என்று நண்பர்கள் உணர்ந்து பேச வேண்டும். இந்த இரண்டாண்டுகளாக நாம் பார்க்கிறோம். இந்த ஆட்சியில் ஆடம்பரமான விழாக்கள் நடக்கவில்லை. ஊதாரித்தனமான செலவுகள் நிச்சயமாகக் கிடையாது. பல ஆயிரக்கணக்கான கார்களில் பவனி வரவில்லை. முதலமைச்சர் அவர்கள் எந்த மாவட்டத்திற்கு வந்தாலும், எந்தவொரு நிகழ்ச்சிக்கு வந்தாலும் எளிமையாக நிகழ்ச்சிகள் நடக்கின்றன. திட்டங்களின் பலன்கள் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்ற அந்த நோக்கம் இன்றைக்கு முதலமைச்சரிடத்திலே காணப்படுகிறது. இதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது?

என்னுடைய நண்பர் ஒருவரைப் பார்க்கப் போயிருந்தேன். கடுமையான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த இடத்தில் நாற்றமாக இருந்தது. என்னப்பா, இவ்வளவு நாற்றத்தில் எப்படி உன் முகத்தைக் கொடுத்து வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாய்? பத்தியைக் கொளுத்தி வைத்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்டேன். அவர் ரொம்ப யோசித்துச் சொன்னார். ரொம்பவும் சாக்கடையில் கிடந்துவிட்டேன். அதைத்தான் சுத்தம் செய்து கொண்டிருக்கிறேன். இந்த வாடையில் உடம்பு மரத்துப் போய்விட்டது. இனிமேல் போய் நான் பத்தி கொளுத்தி வைத்தாலும், சென்டைத் தெளித்தாலும் வாடை எனக்கு மாறித் தெரியப்போவதில்லை என்று சொன்னார். அதுபோல நல்லதும் கிடையாது, கெட்டதும் கிடையாது என்ற அளவில் ஆகிவிட்டது. சூழ்நிலை காரணமாக அப்படி ஆகிவிட்டது.

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மார்ச் 23

பல பேர் பேசுகிறார்கள். ரொம்ப வேதனையாக இருக்கிறது. விமானத்தில் ஏறும்போது ஒரு அறிக்கை, இறங்கும்போது ஒரு அறிக்கை விடுகிறார்கள். எல்லாம் கலைப்பதிலேயே இருக்கிறார்கள். நான் சொல்கிறேன். தமிழ்நாடு அரசை அவ்வளவு சீக்கிரம் கலைத்துவிட முடியாது. இதைக் கலைக்க ஆரம்பித்தால், முதலிலே மத்திய ஆட்சி கவிழ்ந்துபோய் விடும். ஒரே ஒரு சீட்டிலே இப்போது ஆடிக் கொண்டிருக்கிறது. பதினொரு மாநிலங்களிலே அரசுகளைக் கலைத்தாக வேண்டும். அப்படிக் கலைத்தால்தான் தமிழ்நாட்டில் கை வைக்க முடியும். ஆகவே இவற்றையெல்லாம் பார்க்க வேண்டும். அகில இந்திய அளவில் வாக்குகள் எவ்வளவு விழுந்திருக்கின்றன என்று பார்த்தால், பாரதிய ஜனதா கட்சிக்கு 37 சதவீதம்தான் வாக்களித்திருக்கிறார்கள் மக்கள்.

முற்பகல் 10-55

அதேபோன்று, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், ஐக்கிய முன்னணியாக இருந்தாலும், 53 சதவீதம் 52 சதவீதம் என்று இந்தியாவிலே மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள்; இதை யாரும் மறந்து விட முடியாது. இன்றைக்கு மத்தியிலே நிலையான ஆட்சி என்று சொல்லி வாக்கு பெற்றவர்கள் மத்தியிலே நிலையான ஆட்சி இல்லை, கூட்டணி ஆட்சிதான் நிலைத்திருக்கும் என்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆளுநர் உரையிலே, பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது. குறிப்பாக அவர்களைப் பொறுத்தவரையில், ஒரு பகிரங்கத் தன்மை ஆளுநர் உரையிலே காண முடிகிறது; எதுவும் மறைக்கப்படவில்லை. தமிழ்நாட்டில், 22 மாதங்களிலே நடந்திருக்கிற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்பட வேண்டும் என்று சொன்னாலும்கூட வேதனையான சம்பவங்கள் நடந்திருப்பதை மறைக்காமல் ஆளுநர் உரையிலே குறிப்பாக, கோவையிலே நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இது பெரிதும் நம்மைப் பாதிப்பு அடையச் செய்திருக்கிறது; மிக மிகக் கவலைக்குரியதாக இருக்கின்றது.

தமிழ்நாட்டு மக்கள் இதுபோன்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களால் பீதியடைந்து இருந்தாலும்கூட, இது இன்று நேற்று நடந்ததாகச் சொல்லிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள்.



1998 மார்ச் 23] [திரு. ஜி. பழனிசாமி]

1980-ஆம் ஆண்டு மண்டைக்காட்டுச் சம்பவத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறினார்கள். மதம் மாறிய பின்னால், அந்த இந்து மதத்தாரை அன்றையதினத்திலே பாதுக்காக்க முடியாத ஒரு நிலை இருந்தது. இந்திய வரலாற்றிலே மிகப் பெரிய மதக் கலவரம், பம்பாய் கலவரம். மகாராஷ்டிரத்தில், பி.ஜே.பி கட்சி ஆட்சி நடந்து கொண்டிருக்கிற அந்த மாநிலத்தில்தான், மிகப் பெரிய அந்தச் சம்பவம் நடந்தது. தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட இடமாக இருந்தது, பம்பாய் நகரம், மகாராஷ்டிரா மாநிலம். அன்றைக்கு அதைத் தடுக்க முடியவில்லை. அங்கிருந்து தொடங்கியதுதான், இன்றைக்குத் தமிழகம் முழுமையும், இந்தியா முழுமையும் ஏற்பட்டிருக்கிற வெடிகுண்டு என்கிற கலாச்சாரம். ஏதோ இது இங்கு மட்டும் நடக்கிறது என்று சொல்ல முடியாது.

பாரத தேசத்தின்மீது அந்நிய நாடுகள் படையெடுத்தபோது, அரசியல் சுயநலங்களை மறந்து, இந்தத் தேசத்தைப் பாதுகாக்கின்ற முறையில், நம்முடைய அரசியல் தலைவர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட்ட காலங்கள் உண்டு. அன்றைக்குத் தீவிரவாதங்கள் தலையெடுத்தபோது, ஆளுகிற கட்சி எதுவாக இருந்தாலும், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவித்தார்கள். இதுபோன்ற யோசனைகளைத் தெரிவிக்க வேண்டுமே தவிர, இதை வைத்துக் கொண்டு, அரசியல் ஆதாயம் தேடுகின்ற முயற்சியிலே சில கட்சிகள் இன்றையதினத்திலே ஈடுபட்டுக் கொண்டிருப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற பள்ளி மாணவர்கள், முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு பொறியியல் கல்லூரியிலே 15% இட ஒதுக்கீடு கொண்டு வந்திருப்பது, உண்மையிலேயே முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. இது பாராட்டுக்குரியது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை, மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்குவது என்கிற நல்ல முடிவு, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது. அதே நேரத்தில் விலைவாசி உயராமல் இருப்பதற்கான முயற்சியிலே நம்முடைய அரசு ஈடுபட வேண்டும்.

அதேபோன்று, குடிநீர், மருத்துவம், சாலை, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் இதில் அறிவிக்கப்பட்டு

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மார்ச் 23

இருக்கின்றன. என்றும் இல்லாத அளவுக்கு, 'அண்ணா மறுமலர்ச்சி திட்டம்', 'நமக்கு நாமே திட்டம்', 'மாதிரி கிராமங்கள்' போன்ற நல்ல பல திட்டங்கள் மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையிலே அமைந்துள்ளன. கிராமப்புற மக்கள் இவற்றை வரவேற்கின்ற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து, சாலைகள்-பாலங்கள்; கடந்த காலத்திலே செய்ய முடியாத பணிகளை நிறைவேற்றுவதற்காக, உலக வங்கி மற்றும் நபார்டு வங்கி மூலமாக 1416 கோடி ரூபாய், இதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது. இந்தத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமானால், வரக்கூடிய நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை இல்லாத அளவுக்கு, இதை நீங்கள் நிறைவேற்றினால்தான், திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

அதேபோன்று கடந்த வருடம், நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழகத்தில் ஏற்பட்ட பெருத்த வெள்ளச் சேதங்கள்; அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கிற பாதிப்பு; எங்களுடைய மாவட்டத்தில் சுமார் 8 அமைச்சர்கள் அங்கேயே தங்கி, நேரடியாக மக்களுக்கான நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் போன்றவர்கள் எல்லாம் அங்கேயே தங்கி இருந்தார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே இருந்தபோது, திருத்துறைப்பூண்டிக்கு வந்திருந்த நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நீங்கள் திருச்சிக்கு திருமணத்திற்குச் செல்ல வேண்டாம், அங்கேயே தங்கி இருந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும், அமைச்சர்கள் எல்லாம் தங்கி இருக்க வேண்டும் என்று சொல்லி செய்திகளை எல்லாய கேட்டறிந்தார்கள். அதற்காக 58 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்றைக்கு விவசாயிகள் பெரிய அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓரளவிற்கு நிவாரணப் பணிகளைச் செய்திருந்தாலும்கூட, 3 ஆண்டுகாலமாக விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 4 ஆண்டு காலமாக



1998 மார்ச் 23] [திரு. ஜி. பழனிசாமி]

கூட்டுறவுக் கடன்களைக் கட்டமுடியாமல் இருக்கிறார்கள். குத்தகை விவசாயிகள், சாகுபடியில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள், முழுமையாகக் கடனைக் கட்டமுடியாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், ரிசர்வ் வங்கி அனுமதிக்க முடியாது என்று சொல்கிறது என்று பலமுறை இங்கே பதில் அளித்திருக்கிறார்கள். ஓராண்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தால் கூட்டுறவுக் கடனை ஒத்திவைக்கலாம் என்றும், 2 ஆண்டுகாலம் குத்தகை விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், அந்தக் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றலாம் என்றும், 3 ஆண்டுகாலமும் விவசாயிகள் வெள்ளத்தால பாதிக்கப்பட்டிருந்தால், அந்த குத்தகைக் கடனை, கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்யலாம் என்கிற அளவிற்கு ஏற்கெனவே ரிசர்வ் வங்கியின் உத்தரவு இருப்பதாகக் கூறுகிறார்கள். விவசாயிகளுக்கு நீங்கள் வாழ்வு அளிக்க வேண்டும் என்று சொன்னால், பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி இருந்தபோதிலும்கூட, கூட்டுறவுக் கடனை ரத்துசெய்து, அவர்களுக்கு நீங்கள் வாழ்வு அளிக்க வேண்டும். அவர்கள் இதனை எதிர்பார்க்கிறார்கள். உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே எதிர்பார்க்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கோயில் குத்தகை. தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர்செய்யும் விவசாயிகளும், குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று இன்றைய தினம் எதிர்பார்க்கிறார்கள். அதையும் நீங்கள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு தினங்களாக நம்முடைய மன்றத்திலே காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நீண்ட விவாதங்கள் நடைபெற்று இருக்கின்றன. காவிரி நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒரு நீண்ட விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து இருக்கிறார்கள். காவிரி நதிநீர்ப் பிரச்சினை என்பது வேறு; தேசிய நதிநீர்த் திட்டம் என்பது வேறு. இவை இரண்டையும் உணராமல், இங்கே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த

உறுப்பினர்கள், தடுமாற்றமான செய்தியை இங்கே விவாதத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு விவாதிப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. ஒன்றை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது துணைத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு பரிதி இளம் வழுதி அவர்களும், விமான விபத்திலே மறைந்த முன்னாள் மத்திய இணை அமைச்சர், மரியாதைக்குரிய என்.வி.என். சோமு அவர்களும், நாங்கள் எல்லாம்கூட- காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக அன்றைக்கு இருந்த ஆட்சி, அன்றைக்கு இருநத பாரதப் பிரதமரிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தியபோது, கலந்து கொண்டோம். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள், காவிரி நதிநீர்ப் பிரச்சினையை எவ்வளவு கேலிக்கூத்தாக ஆக்கினார்கள் என்பதைப் பார்த்தபோது, அது உண்மையிலே வேதனையான காரியம்.

இன்று மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திரு. தலித் எழில்மலை அவர்களும்கூட, நம்மை இந்த அம்மையார் அவர்கள் அவமானப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். யாரை அழைத்துவந்தார்கள் தெரியுமா? இங்கே இருக்கக்கூடிய தையல் கலைஞர்கள் சங்கத்தினுடைய தலைவர் ஒருவர்; சமூக நல சேவை செய்யக்கூடிய மனப்பான்மை உடையவர் ஒருவர்; இவர்கள் எல்லாம் காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு டெல்லிக்கு வந்தார்கள். நாங்கள் எல்லாம் போனோம். திரு. நரசிம்ம ராவ் அவர்கள் எங்களைக் கூப்பிட்டு இருந்தார். அப்போது கர்நாடகத்திலே முதலமைச்சராக இருந்த தேவகவுடா அவர்களையும் கூப்பிட்டிருந்தார்கள். நாங்கள் எல்லாம் போய் உட்கார்ந்து இருந்தோம். சென்னையிலே உள்ள தையல் கலைஞர் சங்கத்தின் தலைவர் ஒருவர் வருகிறார், காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் பேச்சுவார்த்தைக்கு வேடிக்கையாக இருந்தது. நான், உடனே வெட்கப்பட்டு, அன்றைக்கு இருந்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். 'ஐயா எங்களை அவமானப்படுத்தாதீர்கள், தஞ்சை மாவட்டத்திலே நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள், நடுவர் மன்றத்திற்கு, தனி நபர்களே-கோர்ட்டிற்கு,- டிரிப்யூனலுக்கு எல்லாம் போய் இருக்கிறார்கள். எனவே, நல்ல 4 பேர்களை அழைத்து வரக்கூடாதா என்று கேட்டேன். அன்றைக்கு நடந்த அந்தக் கூட்டத்திலே பேசிய திரு. என்.வி.என். சோமு அவர்களுடைய பேச்சை இன்றைக்கு நான் நினைத்துப்



பார்க்கிறேன். எவ்வளவு பொறுப்புணர்வோடு பேசினார்? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகிறது என்பதற்காக அவர்கள் யோசனை சொல்லாமலில்லை. தமிழ்நாட்டினுடைய நலனை, தமிழ்நாட்டினுடைய அந்த நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக அவர் பேசிய பேச்சு, அவர் சொன்ன அந்த ஆலோசனை, அந்த அரசோடு நாங்கள் எந்த அளவிற்கு ஒத்துழைப்போம் என்று சொன்ன கருத்து இவற்றை என்னால் இன்றைக்கு மறக்க முடியவில்லை. அதையெல்லாம் பொறுப்புணர்வோடு பேசினார். இருந்தாலும்கூட அதையெல்லாம் கேலிக்கூத்தாக்கியவர்கள் தான் இன்றைக்கு தேசிய நதிநீர்த் திட்டத்தோடு காவிரி நதிநீர்ப் பிரச்சினையை இணைத்துப் பார்க்கிறார்கள். காவிரி நதிநீர்ப் பிரச்சினை என்பது வேறு; தேசிய நதிநீர்த் திட்டம் என்பது வேறு. இந்த இரண்டையும் ஒன்றாக்கி இன்றையதினத்தில் நம் முன்னாள் முதலமைச்சரவர்கள் தமிழ்நாட்டிற்குத் துரோகம் விளைவித்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல முடியும். அந்த அளவிற்கு தெரிந்தே பதவிக்காக இந்தப் பணியை அவர்கள் இன்றைக்கு காட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் சொல்லமுடியும். ஆகவே நம்முடைய அரசு காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் கொஞ்சம்கூட இடம் கொடுக்காமல், நீங்கள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை காவிரி விவசாயிகளுக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே விவசாயிகளுடைய நலனைக் கருத்திற்கொண்டு மொத்தமாக நீங்கள் இதைச் செய்து கொடுக்க வேண்டும்.

22 மாத கால ஆட்சியில் ரூ.15,576 கோடியில் தொழில் துவங்குவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிற நல்ல முயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அதேநேரத்திலே, இருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைக்குக்கூட 'டன்லப்' தொழிற்சாலை அநேகமாக மூடியிருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் முதலமைச்சரோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அநேகமாக இன்றைக்கு எரிந்து கொண்டிருக்கிறது; என்ன சூழ்நிலையிலே எரிந்துகொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் தெரிந்தே, நிர்வாகமே இப்படிக் கொளுத்திவிட்டு, அந்த ஆலையை நடத்தக்கூடாது,

தொழிற்சாலையை நடத்தக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் அந்தத் தொழிலாளரிடத்திலே எழுந்துள்ளது. அநேகமாக நீண்டகாலமாக அந்த ஆலை மூடப்பட்டிருக்கின்ற காரணத்தால், தொழிலாளர்கள் அந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்த ஆலை இன்றையதினத்திலே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. ஆக அதை அணைப்பதற்கே பல நாட்கள் ஆகும் என்று இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, இந்தச் சதிகள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை முதலில் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மீனவர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கமிட்டி அமைக்கப்பட்டு, அது தமிழகம் முழுமையும் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி ஏழை எளிய தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் அடிப்படையான தேவை என்ன என்பதை விளக்கி, கமிஷன் தன் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, உரிய நடவடிக்கை எடுத்ததற்காகப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பல ஆண்டுகளாக எந்த முதலமைச்சரும் செய்ய முடியாத பணியை நமது முதலமைச்சர் அவர்கள் செய்து காண்பித்தார்கள். அரசுத் துறையில் ஆதிதிராவிட மக்களுக்கான காலி இடங்களில் அவர்களை நியமிக்க முடியாத நிலைமை பல ஆண்டுகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று பதவி உயர்வைப் பொறுத்தவரையிலும், அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகள்கூடத் தடுக்கப்பட்டிருக்கிற மோசமான நிலையில், நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, தமிழகத்தில் இருக்கக் கூடிய அரசுத் துறைகளில் 115 துறைகளை, ஒவ்வொரு துறையாக அழைத்து, அந்தத் துறையிலே எந்த விகிதாச்சாரத்திலே ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் பதவியிலே இருக்கிறார்கள். இல்லையெனில் அதற்கான காரணம் என்ன என்ற விளக்கங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே கேட்டறிந்து, அவர்களும், இன்னும் 3 மாதம், 6 மாதங்களில் அங்கேயுள்ள காலி இடங்களை நாங்கள் பூர்த்தி செய்வோம் என்று எங்களிடத்திலே, அந்தக் கூட்டத்திலே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும்கூட, பல துறைகளில் மற்ற வகுப்பினருக்கான அந்த இடங்களைப் பூர்த்தி செய்கிறபோது படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பது உண்மை என்று தெரிய வந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் பதவி உயர்வு அளிக்கின்றபோதும் கூட அது தடுக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் அந்தக் கமிட்டியிலே ஆய்வு செய்கிறபோது இந்த விவரங்கள் தெரிய வந்தன. இதையெல்லாம் கூட நம்முடைய அமைச்சரவர்கள் இப்படி ஒரு சம்பவம் நடக்கிறது என்று தெரியாமல் வெளியிலே பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு, உண்மை நிலையைத் தெரிந்து கொள்கிற ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததன்மூலம் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத வகையில் நம்முடைய முதலமைச்சரின் மனதிலே உள்ள அந்தத் திறமையைக் கண்டறிய முடிந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்

அதேபோல் மீனவர்களைப் பொறுத்தவரையில், நாகை, திருவாரூர் மாவட்டங்களில், கொள்ளிடம் முதற்கொண்டு, நாகப்பட்டினம், கோடியக்கரை, தொண்டியக்காடு வரையும் இருக்கின்ற மீனவர் பிரச்சினை ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. 1963-லே துவங்கிய அந்த மீன் வளர்ச்சித் துறை, சிறப்பாகச் செயல்பட்ட அந்தத் துறை, இன்றைக்குப் பலஹீனம் அடைந்திருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற 67 மீனவர் கிராமங்கள் பல்வேறு அரசாங்கங்களுக்குப் பல லட்சம் ரூபாய் அளவில் இன்றைக்கு நிதியாதாரங்களை, வருவாயைப் பெற்றுக் கொடுக்கின்ற அந்த நிர்வாகம் இன்றைக்குப் பலஹீனம் அடைந்திருக்கிறது. அடிப்படையான வசதிகளை அந்தப் பகுதியிலே நீங்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

இயற்கைச் சீற்றங்கள் வருகின்றபோது அவர்களுடைய படகுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அந்தக் குடும்பங்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மீன் ஏற்றுமதிக்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கைகளை வைத்து அந்த மீனவ மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டு வருகின்றார்கள். அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக்கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜாதிக் கலவரங்கள் தோன்றுவது சம்பந்தமாக ஏற்கெனவே பல்வேறு விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. முன்னெச்சரிக்கையாக, தென் மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கின்ற ஜாதிக் கலவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்ததால், அதற்குப் பின்னாலும்கூட, மாவட்டங்களுக்கிருக்கிற பெயர்களை அகற்றி, அதேபோன்று பேருந்துகளுடைய பெயர்களையும் அகற்றி அமைதி ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு என்ன வந்திருக்கிறது? நம்முடைய தேசத்தினுடைய தலைவர்களுடைய சிலைகளை அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காக, யாரோ ஒருவர் தேசவிரோதக் காரியங்களிலே ஈடுபடக்கூடியவர்கள், இன்றைக்கு அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காக அந்தச் சிலைகளின் தலையிலே வேறு ஏதாவது ஒரு மாலையை மாட்டி, ஜாதிக் கலவரங்களை உருவாக்கி அதன்மூலமாக அரசியல் ஆதாயங்களைத் தேடலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுபவர்கள் மீது, தமிழகக் காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தமிழகத்தில் தீவிரவாதத்தின் காரணமாக தமிழ்நாட்டு மக்களிடத்திலே ஒரு பெரிய பீதி பரவிக் கொண்டிருக்கின்றது.



45 கிலோ வெடிகுண்டுகள், வெடித்தால் 2 கிலோ மீட்டர் தூரம் வரை சேதம் ஏற்பட்டு பலபேர் உயிர் இழப்பார்கள் என்ற பயங்கரமானச் செய்திகள் இன்றைக்குப் பத்திரிகையிலே வந்து கொண்டிருக்கின்றன. எனவே, தமிழகத்தில் மக்கள் அச்சமின்றி நடமாடும் விதத்தில் நம்முடைய காவல் துறையினருக்குத் தனியான பயிற்சி அளிக்கப்பட்டு, அதுபோன்ற சம்பவங்கள் வட நாட்டில் நடந்தாலும், நம்முடைய மாநிலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஊழல் செய்திருக்கிறவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய வழக்குகளை சரியாக நடத்தி, அந்த ஊழல் சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, ஆளுநர் உரையை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

***திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து முதலில் ஆளுநர் உரைக்கு சம்பந்தம் இல்லாமல் இங்கே சிலர் பேசிய சில பேச்சுகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டியது என்னுடைய கடமை என்ற முறையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

மெர்க்கன்டைல் வங்கியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. மெர்க்கன்டைல் வங்கி என்பது இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய நாடார் சமுதாய மக்கள், அவர்களுடைய உழைப்பின் மூலமாக ஏற்படுத்திய ஒரு வங்கி. கிட்டத்தட்ட 150 கிளைகளைக் கொண்ட மிகச் சிறந்த ஒரு வங்கியாகத் தமிழகத்திலே விளங்கிக் கொண்டிருந்த ஒரு சமுதாயத்தினுடைய வங்கி. சிலருடைய சுயநலம் காரணமாக எஸ்.ஆர். குரூப் என்கின்ற ஒரு கம்பெனிக்கு விற்கப்பட்டு, அதன்பிறகு நாடார் சமுதாய மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இதை எப்படியாவது நாம் மீட்க வேண்டுமென்பதற்காக நம்முடைய அன்றைய நிதியமைச்சராக இருந்த திரு. சிதம்பரம்

அவர்களை நாடினார்கள். திரு. சிதம்பரம் அவர்கள் என்ன சொன்னார் என்று சொன்னால், "63 கோடி ரூபாய்க்கு அவர்கள் வங்கியை விற்றிருக்கிறார்கள். நீங்களும் வியாபாரிகள், வாங்கியவர்களும் வியாபாரிகள் என்ற முறையில் அவர்களுக்கு ஏதாவது கூட வட்டி கொடுத்து, அதனை நம்முடைய முதல்வர் மூலமாகப் பேச்சு நடத்தி, அதில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்; நான் உங்களுக்கு செய்கிற ஒரே ஒரு உதவி என்னவென்றால், இந்த எஸ்.ஆர். குரூப் வாங்கியிருக்கின்ற பங்குத் தொகைகளை ரிசர்வ் வங்கி பர்மிஷன் கொடுக்காமல் தடுக்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லி, அந்த ரிசர்வ் வங்கியினுடைய 'ஷேர் டிரான்ஸ்பரைத் தடுத்து நிறுத்தினார்கள். அதன் பிறகு தலைவர் மூப்பனாரை வந்து பார்த்தார்கள். அவர்கள், உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசுங்கள், வேண்டியதை அவர்களும் செய்வார்கள், நானும் செய்கிறேன் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களோடு இருந்து பேசி 100 கோடி ரூபாய் என்கின்ற முறையில் பேச்சு நடத்தி, ஒரு எழுதப்படாத அக்ரிமெண்ட் போட்டு, டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாக நீங்கள் பணத்தை வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்.

முற்பகல் 11-15

எஸ்.ஆர். குரூப் இன்னும் அதிகப்படியான பணம் கேட்கின்ற நேரத்தில் Interest, Interest என்று சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எனக்கும் இதில் Interest இருக்கிறது என்று சொன்னதாக அந்தக் குழுவிலே வந்தவர்கள் சொன்னார்கள். காரணம், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய துணைவியார் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்கின்ற Interest நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்ற எண்ணத்தோடு அந்தப் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் மிகத் திருப்தியோடு வெளியே வந்தார்கள். 60 கோடி ரூபாய் அளவிற்கு 5,500 ரூபாய் ஒரு ஷேர் என்கின்ற முறையில் தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஏழை எளிய நாடார் சமுதாய மக்களிடத்தில் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் வசூல் செய்து 60 கோடி ரூபாயை டிசம்பர் 31-ந் தேதிக்குள் சேர்த்து விட்டார்கள்.

இதிலே எங்களுடைய பகுதியில் பனையேறி நாடார்கள் என்ற மக்களிடத்தில் எப்படி எல்லாம் வசூல் செய்தார்கள் என்கின்ற ஒரு





செய்தியை நான் சொல்கிறேன், ஒரு தொழிலாளி பனை மரத்தினுடைய உச்சியிலே இருந்து கொண்டிருப்பான். இவர்கள் அங்கே சென்று நம்முடைய மெர்க்கன்டைல் வங்கிக்கு நீ ஷேர் கொடுக்க வேண்டும் என்று கேட்பார்கள். ஓ நம்ம மெர்க்கன்டைல் வங்கியா, அந்தக் கருப்பட்டிக் கடையிலே போய் 5,500 ரூபாய் வாங்கிக் கொண்டு ரசீது கொடுத்துவிட்டுப் போங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஏழை எளிய மக்கள் 60 கோடி ரூபாய் அதற்காக முதலீடு செய்திருக்கிறார்கள். இப்போதுகூட, நம்முடைய முதலமைச்சரைப் பற்றியோ அல்லது நம்முடைய மத்திய அமைச்சர்களைப் பற்றியோ ஒரு தவறான கருத்தை நாடார் சமுதாய மக்கள் மத்தியில் உருவாக்குகின்ற ஒரு கொச்சையான விவாதத்தை இந்தச் சட்டமன்றத்திலே பேசியதற்காக நான் இதை எடுத்துச் சொன்னேனே தவிர வேறல்ல. இதிலே சம்பந்தப்பட்ட அத்தனை பேரும், முதலமைச்சர் அவர்களும் சரி, இன்று இருக்கின்ற ஆளும் கட்சியின் மத்திய அரசும் சரி, இந்த மெர்க்கன்டைல் வங்கியை எப்படியாவது மீட்டு அந்த நாடார் சமுதாய மக்களுக்குக் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஏழை எளிய பாமர மக்களுடைய பணம் அதில் ஏராளமாக சேர்ந்து கொண்டிருக்கிறது. அதோடு தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு வங்கி தமிழ்நாட்டை விட்டுச் சென்று விடக்கூடாது. அதோடு 150 கிளைகள் உள்ள இந்த வங்கி, 50-க்கு மேற்பட்ட கிளைகள் சொந்தக் கட்டடங்களோடு, கம்ப்யூட்டர் வசதியோடு இருக்கின்ற ஒரு நல்ல வங்கி என்கின்ற காரணத்தால் என்ன விலை கொடுத்தாவது அதை மீட்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்தியன் வங்கியைப் பற்றியும் இங்கே பேசினார்கள். நம்முடைய அருமைத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் ஒரு கூட்டத்திலே சொன்னார். "நான் இந்த அரசியலில் இருக்கிற வரை நானோ என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ எந்தவிதமான லைசென்சோ அல்லது லாபமோ, வங்கிக் கடன்களோ பெறமாட்டோம். அப்படி இதுவரை ஏதாவது இலாபத்தை மத்திய மாநில அரசுகளிலோ அல்லது வங்கிகளிலோ பெற்றிருப்போமானால், அதை நிரூபித்தால் நான் இந்த அரசியலை விட்டே போய்விடுகிறேன் என்பது மட்டுமல்லாமல் நான் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன்"

என்று பொதுக் கூட்டத்திலேயே பேசியிருக்கிறார்கள். ஆகவே இந்த இடத்தில் இங்கே சட்டமன்றத்தில் அவர்களைப் பற்றிப் பேசிய பேச்சிற்கு இது ஒரு பதிலாக அமையும் என்று கருதி நான் அதை அத்தோடு விட்டுவிடுகிறேன்.

வெடிகுண்டைப் பற்றி இங்கே பரவலாகப் பேச்சு வந்தது. இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய அருமை அண்ணன் லத்தீப் அவர்கள் மிக நீண்டதொரு விளக்கமான உரையை இங்கே நிகழ்த்தினார்கள். இதெல்லாம் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் எரிகின்ற நெருப்பில் நாம் எண்ணெய் வார்த்தது போலாகும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டு மக்கள் மத்தியில், முஸ்லீம் சகோதரர் மத்தியிலேகூட ஒரு பெரிய பயங்கரமான பீதி ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு நிதர்சனத்தை நாம் மறந்து விடக்கூடாது. இப்போது நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் அவர்கள் ஒரு அருமையான அறிக்கையைப் பொது மக்களுக்கு, முஸ்லீம் சமுதாய மக்களுக்கு விட்டிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியைப் படிப்பதற்கு நம்முடைய சபாநாயகரிடத்தில் நான் அனுமதி கேட்கிறேன்.

முற்பகல் 11-20

நபிகள் நாயகம் சல் அவர்கள் தன்னைக் கொல்ல வந்த பகைவர்களைக்கூட இன்முகத்தோடு எதிர் கொண்டார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. பகைவர்களோடு யுத்தம் செய்த போதுகூட தர்மயுத்தம் செய்து அப்பாவிகளுக்கும், ஏழைகளுக்கும், வயோதிகர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏனையோருக்கும் எந்தவிதக் கேடும் நேராமல் புனிதமாக தர்மயுத்தம் நடத்தினார் என்று சான்றுகள் கூறுகின்றன. நபிகள் நாயகம் சல் அவர்கள் வகுத்தளித்த மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் உண்மையான முஸ்லீம்கள் இத்தகைய பயங்கரவாதிகளைத் தனிமைப்படுத்த வேண்டும், இத்தகைய பயங்கரவாதிகளின் எந்த நடவடிக்கைகளுக்கும் முஸ்லீம் சமூகம் ஆதரவு தராது என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றிப் பகிரங்கப்படுத்தவேண்டும்.

அதோடு இன்னொரு கோரிக்கையையும் விடுத்திருக்கிறார்கள். "அனைத்துப் பள்ளி வாசல்களிலும் ஜமாத்தைக் கூட்டி பயங்கரவாதிகளின் செயலைக் கண்டித்தும் அவர்களுடைய





நடவடிக்கைகளை முஸ்லீம்கள் ஏற்கவில்லை என்றும் தீர்மானங்களை நிறைவேற்றி அறிவிக்க வேண்டும், பயங்கரவாதிகளை ஒதுக்கி வைப்பதோடு அவர்களைப் பற்றி எந்தத் தகவல்கள் கிடைத்தாலும் அரசுக்கு அதைத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் உயர்ந்தபட்ச கடும் தண்டனை பெறுவதற்கும் அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் ஒத்துழைப்புத் தரவேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாக முஸ்லீம் சமுதாயத்தின் மீது ஏற்படக்கூடிய சிறு அழுக்கைக் கூடத் துடைத்து எறிந்துவிட நாம் முன்வர வேண்டும்" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். இதையே முஸ்லீம் சகோதரர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு முஸ்லீம் சகோதரர்கள் ஐ.எஸ்.ஐ. இயக்கத்தினரோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று ஒரு செய்தி வந்து கொண்டே இருக்கிறது. ஐ.எஸ்.ஐ. இயக்கத்தில் தொடர்பு உள்ள ஒருவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். "ஐ.எஸ்.ஐ. ஆட்களிடம் அகப்பட்டுக் கொண்டு முகாம்களில் சித்திரவதைப்படுகிறோம். கடுமையான கொடுமைகளைத் தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து விட்டோம்." என்று பஜஉரிசெய்தாளா என்ற கிராமத்தில் போலீசாரிடம் மோதிய இருவர் உயிர் இழந்தார்கள். "இந்தியாவில் அமைதியாக, சந்தோஷமாக வாழ்ந்த அந்த நல்ல நாட்களை நினைத்து ஏங்குகிறோம்" யார் எழுதியிருப்பது என்றால் அந்தக் கிராமத்தில் போலீசாரோடு மோதிய இருவர் உயிர் இழந்தார்களே, அவர்களில் ஒருவரிடமிருந்து இந்தக் கடிதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உருது மொழியில் அது எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கடிதத்தில் "இந்தியாவில் அமைதியாக, சந்தோஷமாக வாழ்ந்த அந்த நல்ல நாட்களை நினைத்து ஏங்குகிறோம், இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்டதை முட்டாள்தனம் என்று உணர்ந்து விட்டோம். மீண்டும் இந்தியா வந்து குடும்பத்தினரோடு சந்தோஷமாக வாழ ஆசைப்படுகிறோம்" என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எதற்காக இதையெல்லாம் நான் சொல்கிறேன் என்று சொன்னால் இன்று சில முஸ்லீம் சகோதரர்கள், நல்ல இளைஞர்கள் திசைமாறிச் சென்றிருக்கிறார்கள். முஸ்லீம் சகோதரர்கள் அவர்களைக் கண்டுபிடித்து, ஒன்று அவர்களைத் திருத்த வேண்டும் அல்லது அரசிடம் அவர்களை

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 மார்ச் 23

ஒப்படைக்க வேண்டும். இந்த முஸ்லீம் சமுதாயத்தினர் இந்த நாட்டைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், முஸ்லீம்களும், இந்துக்களும் எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் அண்ணன் தம்பிகளைப் போல் வாழ்ந்த அந்த நல்ல காலத்தை மறுபடியும் கொண்டு வர வேண்டும் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இதோடு இந்து முஸ்லீம் கலவரம் தமிழ்நாட்டில் வராமல் தடுக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-25

இன்று நம்முடைய போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் மிகத் தீவிரமாகப் பலயிடங்களுக்குச் சென்று இந்தக் கொடிய நிகழ்ச்சிகள், குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கின்ற மிகப் பெரிய பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள் எல்லாம் கூட சொன்னார்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் கூட ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் நகரத்தில் 3 மாடிக் கட்டிடத்தில் ஒளிந்து கொண்டிருந்த தீவிரவாதிகளைப் பிடிப்பதற்குச் சென்ற போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் அவர்கள் தன்னுடைய உயிரையும் மதிக்காமல், பொருட்படுத்தாமல் அங்கே உள்ளே சென்ற நேரத்தில் அவர்கள் வெடிகுண்டை வீசினார்கள். தன்னுடைய சாதுர்யத்தின் காரணமாக, கதவை அடைத்து, அதன் மூலம் சிலர் இறந்து விட்டாலும்கூட, 2 பேரைப் பிடித்துக் கொண்டு வந்த மாபெரும் சாதனையைச் செய்த அந்த சந்திரசேகருக்குப் பதவிஉயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல முரளி என்கின்ற ஒரு இன்ஸ்பெக்டரும் அந்த நேரத்தில் துணையாக இருந்தார். இப்படிப்பட்ட உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிய அந்தப் போலீஸ் அதிகாரிகளுக்கு நல்ல சன்மானம் வழங்க வேண்டும். பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1998 மார்ச் 23] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

இதோடு நான் இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட நேரத்தில், இந்தப் பிரச்சினைகள் தமிழ்நாட்டிலே வந்தன என்பது உண்மைதான். தமிழ்நாட்டில், குறிப்பாக கோயம்புத்தூரில் ஏன் வந்தது என்று சொன்னால், கோயம்புத்தூரில் ஏற்கெனவே தொழில் போட்டி இருந்தது. கேரளத்தில் இருந்து வந்து தொழில் செய்தவர்களுக்கும், தமிழ்நாட்டில் இருந்து தொழில் செய்பவர்களுக்கும் ஒரு போட்டி இருந்தது. ஆகவே தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சில வேலையில்லாத இளைஞர்களைத் திரட்டி, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து தனக்குப் பாதுகாவலாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் காலப் போக்கில் தீவிரவாதிகளாக மாறுவதற்கு ஒரு வாய்ப்பு வந்தது. அன்றிருந்த, கோயம்புத்தூரில் இருந்த போலீஸ் உயர் அதிகாரிகள் இந்த முஸ்லீம் பகுதியில் ஒரு Check post போட்டார்கள். Check post போட்டது என்னவோ ஒரு நல்ல நோக்கத்தோடு போட்டாலும் கூட அது மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக ஆகிவிட்டது. எப்படி வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஒருசில சமுதாயத்தினரை அவர்கள் குற்றப் பரம்பரையினர் என்று சொல்லி, ஆண்களெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்துப் போட வேண்டுமென்று வைத்தார்களோ அதேபோல ஒரு நிலை அங்கேயிருக்கிற முஸ்லீம் சமுதாய மக்களுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. அதன் காரணமாக அந்தப் பகுதிகளையெல்லாம் படமெடுத்து, முஸ்லீம்கள் அதிகமாக வாழ்கின்ற பணக்கார நாடுகளுக்குக் கொண்டு சென்று, அங்கே பெரும் பணம் திரட்டி, பயிற்சி கொடுத்துத் திரும்பவும் அதே வழியாக வந்தார்கள். ஆனால் அதிலே ஒரு வருந்தத்தக்க செய்தி என்னவென்று சொன்னால், Check post காரணத்திற்காகப் போட்டார்கள்? என்ன அந்த செக் போஸ்டிலேயே அவர்கள் இந்தத் தவறான காரியங்களைச் செய்வதற்குத் துணை நின்றார்கள். சில அதிகாரிகள் அப்படியும்கூட இருந்திருக்க முடியும். அதன் காரணமாக, அது வளர்ந்து, வளர்ந்து இன்று அது பூதாகாரமாக, தமிழகம் முழுவதும் பரவியிருக்கின்ற ஒரு சூழ்நிலையிருக்கிறது. பாண்டிச்சேரியிலே தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்; கேரளாவிலே இருப்பதாகச் சொல்கிறார்கள்; பம்பாயிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய

முதலமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் மட்டும் இதைச் செய்ய முடியுமா? இதை சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் விடக்கூடாது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பகட்டுத் திட்டங்களையெல்லாம் இன்றோடு நிறுத்திவிட்டு, நல்ல திட்டங்களை, அன்றாடத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சொல்லிவிட்டு, பேப்பரிலே இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே ஒரு பகட்டுத் திட்டம் வந்திருக்கிறது. என்ன திட்டமென்று சொன்னால், 4000 பேர் போலீஸ் வேலைக்கு எடுக்கப் போகிறோம் என்று. இதுதான் பகட்டுத் திட்டம். பகட்டுத் திட்டம் என்பது, சாலைப் பணியாளர்களுக்குப் பத்தாயிரம் பேர் எடுக்கப் போகிறோம் என்று ஒரு திட்டம் வந்தது. அதனுடைய பலன் என்னவாயிற்று என்றால், இங்கேகூட தி.மு.க.வுக்குக் கிடைத்ததா, அ.தி.மு.க.வுக்கு கிடைத்ததா, த.மா.கா.வுக்கு கிடைத்ததா என்ற பிரச்சினையே இல்லை. என்னவாயிற்று என்றால் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் பேர், விண்ணப்பித்ததாக நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள் 6 இலட்சம் பேரிலே 60,000 பேரை செலக்ட் பண்ணி இன்டர்வியூ வைத்தார்கள். அந்த 60,000 பேரும் — 6 இலட்சம் பேரிலே 60,000 பேர் போக மிச்சப்பேர் எல்லாம் குரோதமாகப் போய் விட்டார்கள். அந்த 60,000 பேரும் தேர்வு அதிகாரிகளால் மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள் எல்லாம் கொண்டு வா என்று சொன்னவுடனே, இந்தப் பையன்களையெல்லாம் நம்பி யாரும் இரவலாக்க கொடுக்க மாட்டார்கள் என்பதால் அவர்கள் கிட்டத்தட்ட ஒவ்வொருவரும் 500 ரூபாய் செலவு பண்ணி இதையெல்லாம் விலைக்கு வாங்கிக்கொண்டு இன்டர்வியூவிற்கு வந்தார்கள். அந்த 60 ஆயிரம் பேரில் ஒரு 10 ஆயிரம் பேரை எடுத்திருக்கிறீர்கள். யார் யாரை எடுத்திருக்கிறீர்கள் என்பதில் பிரச்சினையில்லை. இதனால் என்ன ஆனதென்றால், தமிழகத்தில் இருக்கின்ற இளைஞர்கள் மத்தியில் ஒரு பெரிய அதிருப்தி. இதுதான் பகட்டுத் திட்டம் என்று சொல்லக்கூடியது. இப்போது நியாயவிலைக் கடைக்கும் இதேமாதிரி விளம்பரம் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இது என்ன ஆகப்போகிறதோ தெரியாது.





முற்பகல் 11-30

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே 4 ஆயிரம் பேர் போலீஸ் வேலைக்கு எடுக்கப்படுவார்கள் என்று சொன்னது ஒரு பகட்டுத் திட்டம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னவுடனே, அதைக் கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறுத்திவிடக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். பலபேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். போலீஸ் எண்ணிக்கை 786 பேருக்கு ஒரு போலீஸ் என்று போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கையும் குறைவாகத்தான் இருக்கிறது. எனவே, போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கையும் கூட்டப்பட வேண்டும். இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்ற நல்ல அபிப்பிராயத்தில் 4 ஆயிரம், 10 ஆயிரம் பேர் எடுத்துக் கொண்டால்கூடப் பரவாயில்லை என்ற ஆலோசனையை அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் சொன்னது, போலீஸ் சீருடைப் பணியாளர்கள் தேர்வு பற்றியது அதற்காக ஒரு Recruitment Board வைத்திருக்கிறீர்கள், அதிலே உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு போலீஸ் உயர் அதிகாரிகளுடைய வேலையெல்லாம் தமிழ்நாட்டுக்கு மிகத் தேவைப்படுகிறது. போலீஸ் கான்ஸ்டபிள்களை எடுப்பதற்கு இப்படியொரு திட்டம் வேண்டுமா?. ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட போலீஸ் அதிகாரிகளே தேர்ந்தெடுத்து, ஆண்டுதோறும் தேவைப்படுகின்ற அளவுக்கு அவர்களை எடுத்து அதன்மூலம் இந்தத் துறையைச் செம்மைப்படுத்தலாமே என்று சொன்னேனே தவிர போலீஸ்காரர்களை எடுக்க வேண்டாம் என்ற கருத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்ல ஆரம்பித்தவுடனேயே நம்முடைய மாண்புமிகு திருநாவுக்கரசு தலையிட்டதன் காரணமாக நான் இதை விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. போலீஸ்கார்கள் 4 ஆயிரம், 10 ஆயிரம் பேர் எடுக்கலாம். ஆனால், எடுப்பது அந்தந்த மாவட்டங்களில்....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சாலைப் பணியாளர்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் சொன்னதைப்போல 6 இலட்சம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள், அதிலே 60 ஆயிரம் பேர்

[டாக்டர் க. பொன்முடி] [1998 மார்ச் 23

அழைக்கப்பட்டு 10 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக, தேர்வாணையம் என்று சொன்னாலே, இன்று Employment விதிகளின்படி ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், 20 பேரை நேர்முகத் தேர்வுக்கு அனுப்ப வேண்டும். 20 பேரில் ஒருவருக்குத்தான் வேலை கிடைக்கும். 19 பேருக்குக் கிடைக்காது. 19 பேர் வருத்தப்படத்தான் செய்வார்கள். அதற்கு வேறு வழி என்னவிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் ஏதாவது சொன்னால் செய்யலாம். வேலை கொடுக்க வேண்டும், வேலை கொடுக்கும்போது அதற்குரிய முறையில் தேர்வு செய்துதான் கொடுக்கிறோம். கிடைக்காதவர்கள் வருத்தப்படுகிறார்கள் என்று சொன்னால் அது இயற்கைதான். 30 இலட்சம் பேர் பதிவு செய்திருக்கிற காலகட்டத்தில் 30 இலட்சம் பேருக்கும் வேலை கொடுக்க முடியாது. வேலைகளில் நியமிக்கப்படுகிறபோது, சில முறைகளைப் பின்பற்றிச் செய்கிறோம். இதிலே அருள்கூர்ந்து வேறு ஏதாவது தவறு இருக்குமென்று சொன்னால் திருத்திக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஏதாவது வழி சொன்னாலும் சரியாக இருக்கும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அரசுக்கு நல்ல யோசனைதான் சொன்னேனே தவிர, இதில் தவறு என்று நான் சொல்லவில்லை. நீங்கள் 10 ஆயிரம் பேர் எடுக்கப்போகிறோம் என்று பத்திரிகையிலே போட்டு, 10 இலட்சம் பேரை விண்ணப்பங்கள் போட வைத்து, அதில் 6 இலட்சம் பேரைத் தேர்வு செய்து, அதில் 60 ஆயிரம் பேருக்கு இன்டர்வியூ நடத்தி, இப்படிப் பரவலாக ஒரு அதிருப்தி ஏற்படுத்த வேண்டாம் என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறல்ல. இதை அந்தந்த இடங்களிலே Employment Exchange மூலமாக எடுத்துக்கொள்ளலாம், அது சரியாக இருக்கக்கூடும். அதேபோல போலீஸ்காரர்களை அங்கங்கே மாவட்டவாரியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கங்கே இருக்கின்ற மாவட்ட போலீஸ் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, இந்த இடங்களிலிருந்து எடுங்கள் என்று சிபாரிசு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் ஆகவே, இந்த Recruitment Board என்பது தேவையில்லை. Recruitment Board-ஐக் கலைத்துவிட்டு, அங்கே இருக்கின்ற உயர் போலீஸ் அதிகாரிகளையெல்லாம் மற்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 மார்ச் 23] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் நேற்று ஒரு அரிய கருத்தைச் சொன்னார்கள். வேலையில்லாமை இன்று தமிழ்நாட்டில் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது, படித்த இளைஞர்களுக்கு என்று சொன்னார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவராவது இன்றைக்கு வேலையில்லாமல், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள், எம்.ஏ. படித்தவர்கள், இன்ஜினியருக்குப் படித்தவர்கள் இளைஞர்கள், நகரங்களிலும் கிராமங்களிலும் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இன்று உச்ச கட்டத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும். நான் என்ன நினைக்கிறேன் என்று சொன்னால், இன்று நம்முடைய மாநில அரசாங்கம் 14 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகிறது.

முற்பகல் 11-35

மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏராளமான பணம் வருகிறது. அதையெல்லாம் பயன்படுத்தி பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் சீரணித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். அதாவது, வேலையில்லாதவர்கள் எல்லாம் பதிவு செய்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருந்தார்கள். அந்தக் காலத்திலே படித்தவர்கள் குறைவு என்ற காரணத்தால் படிக்காதவர்களுக்கு அந்த வேலை கொடுக்கப்பட்டது. இப்போது படித்தவர்களுக்குக்கெல்லாம் வேலை இல்லையேதவிர படிக்காதவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது. படிக்காதவர்கள் ஏராளமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வருமானமும் நன்றாக வருகிறது. படித்த இளைஞர்களுக்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். குறிப்பாக, நம்முடைய மத்தியில் எப்படி முப்படை இருக்கிறதோ அதேபோல் தமிழகத்திலேயும் நிலப்படை என்ற பெயரிலாவது, அப்படி ஏதாவது ஒரு பெயர் வைத்து படித்த இளைஞர்களை எல்லாம் அதில் சேர்த்து கண்மாய் வெட்டுவது, கால்வாய் சீரமைப்பது ரோடுகளை அமைப்பது, கட்டடங்களைக் கட்டுவது போன்ற திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணிகளிலே அவர்களை ஈடுபடுத்தலாம் என்பதை நான் ஒரு யோசனையாக இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 மார்ச் 23

நம்முடைய அரசு ஏராளமாகப் பணம் செலவழிக்கிறது. இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு இருக்கிறதா என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. சமீபத்தில் என்னுடைய தொகுதியிலே, கிழக்கே ஒரு பாலம் சாங்ஷன் ஆகியது. ஆனால், வேலை தொடங்கவில்லை. மேற்கே ஒரு பாலம் சாங்ஷன் ஆனது, அதற்கான வேலையும் தொடங்கப்படவில்லை. வடக்கே ஒரு பாலம், அங்கே ரோடுகளை அப்படியே போட்டுவிட்டார்கள். அதிலே வேடிக்கை என்னவென்றால், கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் நம்முடைய தாமரைக்கனி கட்சியைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சியிலேயும் கான்ட்ராக்ட்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என் தொகுதியிலே கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் பூராவும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்காரர்கள். வேலை செய்யப்படாமல் அப்படியே கிடக்கிறது. அதற்கு நான் என்ன செய்வது?.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த வெளிப்படையான திட்டத்தின் மூலமாக ஒப்பந்தங்கள் நடைபெறுகின்றன என்பதற்கு இது ஒரு சான்று. எல்லா கட்சிகளிலேயும் இருப்பவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆட்சிக்காலத்திலே ஒரே ஒரு கட்சியைச் சேர்ந்திருப்பவர்கள்மட்டும்தான் செய்திருக்க முடியும். அதை மாற்றி இப்போது எல்லோருக்கும் கொடுத்திருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சான்று.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கான்ட்ராக்ட்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஒன்று, பணம் கட்டி சரிசெய்து டெண்டர் ரேட்டுக்கே எடுத்துக்கொள்கிறார்கள் அல்லது பணம் கொடுக்க முடியாத அளவிற்கு மிகவும் வலுவான ஆட்கள் வந்துவிட்டார்கள் என்றால் அவர்கள்



1998 மார்ச் 23] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

குறைந்த ரேட்டு போட்டு எடுத்துக்கொள்கிறார்கள். எப்படி எடுத்தாலும் வேலை செய்தாக வேண்டும். இந்த முறை, மூன்று பாலங்களின் வேலைகள் செய்யாமல் போடப்பட்டதன் காரணமாக, கடந்த பெரிய வெள்ளத்தில் என்னுடைய தொகுதிக்குள் நானே போகமுடியவில்லை. ஓட்டுக் கேட்கப் போனால் ஊரிலே 'வராதே' என்று சொல்கிறார்கள். 'நாங்கள் மூன்று மாதகாலம் அந்த வெள்ளத்தில் பட்ட துன்பங்கள், துயரங்கள் என்ன என்று நீங்கள் ஏன் கேட்க வரவில்லை' என்று கேட்கிறார்கள். என்னுடைய கார் உள்ளே வரமுடியவில்லை அதனாலே வரவில்லை என்று சொன்னால், அந்த வேலையை எல்லாம் நீங்கள் பார்க்கக்கூடாதா என்று மக்கள் கேட்கிறார்கள். அதனால், வேலையை கான்ட்ராக்ட் எடுத்தவர்களிடம் இவ்வளவு நாட்களுக்குள்ளே வேலையைச் செய்து முடிக்க வேண்டும் என்று அக்ரிமெண்ட் போட வேண்டும். அதிலேயெல்லாம் அதிகாரிகள் மிகக் கவனமாக, கடுமையாக வேலை வாங்குவதற்கு நம்முடைய அரசு இயந்திரத்தை மிகத் தீவிரமாக முடுக்கி விடவேண்டும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அதிகாரிகள் மேலேயும் முழுமையாகக் குறை சொல்லவும் முடியவில்லை. மதுரை மாவட்டத்தில் சுடுகாட்டு ஊழல் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு ஊழல் நடந்தது. ஒரு அதிகாரியால் அது கண்டுபிடிக்கப்பட்டு அது கோர்ட்டுக்குப் போனது, கோர்ட்டிலே என்ன செய்தார்கள் என்றால் அதற்கு சி.பி.ஐ. விசாரணை வைத்தார்கள். பிறகு அந்த அரசாங்கம் போய் நம்முடைய தி.மு.க. அரசாங்கம் வந்தது. தி.மு.க. அரசாங்கம் வந்தவுடன் நம்முடைய அரசு வழக்கறிஞர் ஹைகோர்ட்டிலே என்ன சொன்னார்கள் என்றால், நீங்கள் அதாவது இந்த மாவட்டத்தோடு விட்டு விடக்கூடாது. இருக்கிற எல்லா மாவட்டங்களிலேயும் இந்தச் சுடுகாட்டு ஊழல் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது சி.பி.ஐ. தரப்பில் என்ன சொன்னார்கள் என்று கேட்டால், அது மிகவும் சின்ன பிரச்சினை, சுடுகாட்டிலே இருக்கிற அந்தக் கூரை ஒன்று காற்று அடித்ததிலே கீழே விழுந்திருக்கலாம் அல்லது கான்ட்ராக்ட் எடுத்து போட்டவர்களே எடுத்துப்போயிருக்கலாம். இப்போது போய் அதையெல்லாம் மாவட்டம் மாவட்டமாகத் தேடிக் கண்டுபிடிப்பது என்பது நடைபெற முடியாத காரியம். ஆகவே, தயவுசெய்து இந்த மதுரை மாவட்டத்தோடு எங்களை விட்டுவிடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வழக்கறிஞர்கள் விடுவதாக இல்லை. இல்லை, இல்லை கண்டிப்பாக

எல்லா மாவட்டங்களிலும் விசாரிக்க வேண்டுமென்று சொன்னதன் மூலம் இன்று 40 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. அந்த அதிகாரிகளிடம் சென்று அரசுப் பணிகள் ஏன் துரிதமாக நடைபெறவில்லை என்று கேட்டால், சி.பி.ஐ. விசாரணை நடக்கிறது, அதிலெல்லாம் கவனம் செலுத்த முடியாது, எனக்கே promotion பாதிக்கிறது என்று சொல்கின்ற ஒரு சூழ்நிலை இன்று நம்முடைய அதிகாரிகள் மத்தியிலே இருக்கின்றது. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து, எப்படி ஐ.பி.எஸ். அதிகாரிகள் மத்தியில் அவர்களுக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுத்தீர்களோ அதைப்போல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் பார்த்துப் பேசி, இதுபோன்ற தடங்கல்கள் இருந்தால் அவற்றை நீக்கினால்தான் அவர்கள் வேலை செய்வார்கள். இல்லையென்றால் அவர்கள் வேலையே செய்யமாட்டோம் என்று இருந்துவிடுவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, பஸ் கட்டண உயர்வைப் பற்றி நான் சென்ற சட்டசபைக்கூட்டத்திலேயே சொன்னேன். முதல்வர் அவர்களே, எல்லோருக்கும் போனஸ் கொடுக்கிறீர்களே, பொதுமக்களுக்கு போனஸ் என்ற முறையில் பஸ் கட்டணத்தைக் குறைத்துக் கொடுங்கள் என்று கேட்டேன். கொடுத்திருந்தால் நிச்சயமாக நாம் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜெயித்திருப்போம். குறைத்துக் கொடுக்காதது மிகப்பெரிய தவறு என்பதை நான் இந்த நேரத்திலும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் பஸ் கட்டண உயர்வுக்கு என்ன காரணம் என்று கேட்டால், புதிய பஸ்கள் விடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் புதிய பஸ்களைக் காணோம். ஓட்டை பஸ்கள்தான் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கே தெரியும். அவர்களுடைய மாவட்டத்திலேயே எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ 122 பஸ்கள் நேரடியாக விடப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ மொத்தம் உள்ள 16 ஆயிரம் பேருந்துகளில் இந்த ஒன்றரை



ஆண்டுகளில் 5750 புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்பது அவர்களுக்கே தெரியும். அவர்களுடைய கட்சியைச் சார்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சொல்லி, அதனை ஏற்றுக்கொண்டு, புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் பஸ்கள் ஓடுகின்றனவா என்று சோதனை செய்து பார்க்கவேண்டும். ஏனென்றால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமாதிரி புதிய பேருந்துகள் ஓடவில்லை என்று தனிப்பட்ட குற்றச்சாட்டு சொல்லப்படுமானால், நிச்சயமாக, அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இவைகளையெல்லாம் சரியாகக் கணக்கிட்டு அங்கிருக்கிற மாவட்ட அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில்தான் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அதிலே ஏதாவது தவறு இருக்குமானால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னால், நிச்சயமாக உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பட்டியல் தயார் செய்து கொடுக்கவும் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ரேஷன் கார்டுகள் பற்றியும் நான் சட்டசபையிலேயும் சொல்லியிருக்கிறேன், வெளியிலேயும் சொல்லியிருக்கிறேன். பல கிராமங்களில் முறையாக ரேஷன் பொருட்களை வழங்குவதில்லை என்று சொல்லி வருகின்றார்கள். நான் அரசாங்கத்திற்கு ஆலோசனையைத்தான் சொல்கிறேனே தவிர, தொல்லை கொடுக்கின்ற மாதிரி பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தவறாக எடுத்துக் கொண்டால் அதற்கு நான் பொறுப்பில்லை. நான் அமைச்சர் மீது எந்தக் குறையும் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், ஏதாவது செய்யவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள். ஆனால், கூட்டுறவுத்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 மார்ச் 23

துறையில் ரேஷன் கடைகள் இருக்கும் வரையில் மக்களுக்கு ஒன்றுமே செய்ய முடியாது. நம்மிடம் ஏற்கெனவே Civil Supplies Corporation இருக்கின்றது. சில ஆயிரம் கடைகளை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே முக்கால் பங்கு பரவாயில்லை என்று மக்கள் சொல்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற கடைகள் அனைத்தையும் எடுத்து Civil Supplies Corporation-ல் சேர்த்து நேரடியாக அரசின் மூலம் அவை நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், ரேஷன் கடைகள் நமக்குப் பழகிப் போய்விட்டன. சுத்தமாக எடுத்துவிட முடியாது. அரிசி, மண்ணெண்ணெய், சீனி போன்ற அத்தியாவசியப் பண்டங்களையெல்லாம் ரேஷன் கடைகளில் வாங்கவேண்டுமென்ற உணர்வு மக்களுக்கு வந்துவிட்டது. ஆனால், ரேஷன் கடைகளில் இருப்பவர்களிடம், சம்பாத்தியம் செய்யவேண்டுமென்ற உணர்வுதான் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் நகர்ப்புறங்களில் யார் அதிகமாக வீடு கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால், ரேஷன் கடைகளில் வேலை பார்ப்பவர்கள்தான் கட்டியிருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரேஷனில் முறைகேடுகள், குளறுபடிகள் இருக்குமானால் அதைப் பற்றிச் சொல்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் பொறுப்பான ஒருவர், சட்டமன்றத்தில் ஒட்டுமொத்தமாக ரேஷன் கடைகளில் வேலை செய்கின்ற எல்லோருமே புது வீடுகள் கட்டுகிறார்கள் என்கிற மாதிரி சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் தயவுசெய்து நிதர்சனமான உண்மை நிலைக்கு வரவேண்டும். இன்னும் மூன்று ஆண்டு காலம் நம்முடைய அரசு இங்கே செம்மையாக நடைபெறவேண்டும். ஆகவே நான் அங்கே நேரடியாகப் பார்த்ததைத்தான் சொல்கிறேனே தவிர, இந்த அரசுக்கு தர்மசங்கடமான ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.



1998 மார்ச் 23]

முற்பகல் 11-45

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே முன்வைத்த கருத்து அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவதாக இல்லை. கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற, உழைக்கின்றவர்களின் நோக்கத்திற்கு தவறான அர்த்தம் செய்யப்படுகிறது என்பதால்தான் இந்தக் கருத்தை நான் இங்கே முன்வைத்தேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இதில் பெரும்பாலானவர்கள் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று ஏமாற்றிச் சொல்லத் தயாராக நான் இல்லை. பெரும்பாலானவர்கள், இந்தக் கூட்டுறவுத் துறையில், ரேஷன் கடைகளில் தவறுகள் செய்கிறார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்கிறேன். அதில் எனக்கு இரண்டுவித கருத்துக்களுக்கு இடம் கிடையாது.

கார்டுகள் கொடுப்பதைப்பற்றி, சென்ற பட்ஜெட்டில் என்ன சொன்னீர்கள்? ஏப்ரல் மாதம் தொடங்கி ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாக கார்டுகள் கொடுத்து விடுவோம் என்று சட்டசபையில் கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டது. இப்போது மே மாதம் தொடங்கி ஜூன் மாதத்திற்குள்ளாகக் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் ஜனங்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அவர்கள் அரசைப் பற்றித் தவறாக நினைப்பார்கள். வருடத்தைச் சொல்லாமல் மாதத்தை மட்டும் சொல்கிறார்கள் என்று நினைப்பார்கள். எனவே இந்தத் தடவையாவது தயவுசெய்து கார்டுகளைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருமானம், ரூபாய் 1,250/-க்கு மேற்படாதவர்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களுக்கான கார்டுகள் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். தயவுசெய்து அதை ரூ.2,500/-ஆக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் ரூ.2,000/-ஆவது வைக்க வேண்டும். ரூ.1,250/-என்பது மிகக் குறைவு.

[1998 மார்ச் 23

* **மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நிர்ணயம் செய்வது நாமல்ல, மத்திய அரசு. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்கள் ரூ.1,250/-க்குக் கீழ் வருமானம் உள்ளவர்கள் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. அதை நிர்ணயித்தது. தமிழக அரசு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மத்திய அரசுக்கு இது குறித்த ஆலோசனையை நீங்கள் எழுத வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம். மிகவும் மோசமாக இருக்கிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் சொன்னார்கள். 6 மணிக்கு மேலே எக்காரணத்தைக் கொண்டும் மின்சார வெட்டு இருக்காது என்று மின்சாரத் துறை அமைச்சர் சொன்னதை விருதுநகரிலே டி.வி.யிலே காட்டியிருக்கிறார்கள். சன் டி.வி.யிலே 8 மணி செய்திகளிலே சொல்லியிருக்கிறார்கள். செய்தி 8.30 மணிக்கு முடிந்தவுடன் மின்வெட்டு வந்து, மீண்டும் 11.00 மணிக்குத்தான் மின்சாரம் வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து பேசுகிறார்களா? அவர்கள் கன்ட்ரோலில் மின்சார வாரியம் இருக்கிறதா என்பது நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. தயவுசெய்து இதை நீங்கள் மிகக் கவனமாகப் பார்க்க வேண்டும். மேலும் மின்சார வெட்டு ஏன் வர வேண்டும்? இந்த வருடம் நல்ல மழை பெய்திருக்கிறது. எல்லா டேம்களிலும் தண்ணீர் இருக்கிறது. எல்லா ரிசர்வாயர்களிலும் தண்ணீர் இருக்கிறது. ஏராளமாக நிலக்கரி இருக்கிறது. ஊழலற்ற ஓர் அரசு நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்கிறபோது ஏன் மின் வெட்டு வருகிறது? ஏதோ ஒரு குறையிருக்கிறது. அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகக் கவனமாகப் பார்த்து, இந்த மின் தட்டுப்பாடு வராமல் செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது மிக, மிக, முக்கியம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதிலே நான் குறை காண விரும்பவில்லை. நம்முடைய தேவை 4,900 மெகாவாட்டுகளாக இருக்கிறது. நீர் மின் நிலையங்களிலிருந்து வரக்கூடிய மின்சாரமும், அனல் மின் நிலையங்களிலிருந்து வரக்கூடிய



1998 மார்ச் 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மின்சாரமும் 4,400 மெகாவாட்டுகள் அளவிற்குத்தான் நமக்கு கிடைக்கின்றது. 500 மெகாவாட்டுகள் மின்சாரம் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், பல பிரச்சினைகள் நாட்டிலே எழுந்துள்ளன. அதைச் சீராக்க வேண்டிய முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

நான் வாக்குறுதி கொடுத்த அன்றே விருதுநகரில் மின்சாரத் தடை இருந்ததாகச் சொன்னார்கள். தமிழகத்திலே பல இடங்களிலே நாம் மின்சாரத்தை முறைப்படுத்த வேண்டுமென்று நினைக்கின்ற நேரத்தில் திடீரென்று ஒரு Transformer அல்லது அந்த ஏரியாவில் ஏற்படக்கூடிய மின் தடை காரணமாக சில பகுதிகள் பாதிக்கப்பட்டு, மின் தடை ஏற்பட்டுவிடுகிறது. சில பகுதிகளில் அப்படி ஏற்படுவதை நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் அப்படி இருக்கிறதா என்றால் இல்லை. படிப்படியாக மின்சாரத்தை முழுமையாகத் தமிழ்நாட்டிற்கு வழங்கிட நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையே தினந்தோறும் நினைவுபடுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இப்போது 500 மெகாவாட்டுகள் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மராட்டிய மாநிலத்தோடு தொடர்பு கொண்டு, அவர்களும் 200 மெகாவாட்டுகள் மின்சாரம் வழங்குகிறோம் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். அதுபற்றிப் பேசுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு இன்று மாலை நான் செல்வதாக இருக்கிறேன். அவர்கள் கொடுத்தால் ஓரளவு நாம் இந்த மின்சாரம் பற்றாக்குறையிலிருந்து மீள முடியும். அப்பொழுது, நமக்கு 300 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை இருக்கும். அதைத் தொழிலதிபர்களுடன் கலந்து பேசி, நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அந்தப் பணியில் ஈடுபட்டு, மின் தடையே இல்லாத ஒரு தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கைத்தறித் துறை. இத்துறை இன்று மிகப் பயங்கரமான சூழ்நிலையில், துணிகளெல்லாம் தேங்கி, நெசவாளர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்கு வேறு வேலையும் தெரியாது. அது ஒரு மிகப் பயங்கரமான சூழ்நிலையை

தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுபோன்று, விசைத்தறி. விசைத்தறி என்பதும் கைத்தறி மாதிரி வீட்டிலே இயக்கும் தொழிலாகும். அதற்கு மட்டும் Tariff போட்டு, மிக அதிகப்படியான மின்சாரக் கட்டணம் வசூலிக்கப் படுகிறது என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை என்பது இந்த ஆண்டு கிடையாது. இந்த ஆண்டு எல்லா இடங்களிலும் குடிநீர் நல்லமுறையில் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் என்பதே இல்லை. அப்பொழுதும்கூட, திருநெல்வேலி மாவட்டத்தில் — எவ்வளவோ மழை பெய்தும், திருநெல்வேலியில்—மட்டும் மழை இல்லாமல் போய்விட்டது. இராதாபுரம் பகுதியில் தொடர்ந்து 6 ஆண்டு காலம் மழை இல்லை என்று சொல்கிறார்கள். மணிமுத்தாறு அணையிலிருந்து புத்தன் தருவை குளத்திற்கும், மற்றும் 16 குளங்களுக்கும் குடி தண்ணீருக்காகத் தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், அங்கே இருக்கிற அதிகாரிகள் அந்த உத்தரவை மீறுகிறார்கள் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் என்ன என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு அணையினுடைய பாசனப் பகுதியில் இருப்பதல்ல புத்தன் தருவை. அது திசையன்விளைப் பகுதியில். மணிமுத்தாறு 4 ரீச்களிலே கடைசி ரீச். இருந்தாலும், 1989-லே கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, மிகவும் வறட்சிப் பகுதி என்ற காரணத்தால், மழையால் தண்ணீர் அதிகமாக இருந்தபோது, அதைக் கொண்டுபோய் புத்தன் தருவைக்குக் கொடுக்க வைத்தார். பிறகு நாட்டிலே எந்த ஆட்சியும் அதைச் செய்யவில்லை. மீண்டும் மணிமுத்தாறிலே தண்ணீர் கிடைக்கிறது என்று சொன்னவுடன் "அவ்வளவு வறட்சிப் பகுதிக்குக் கொஞ்சம் அனுப்பேன்" என்று சொன்னார். அவர்கள் கட்டளையை ஏற்று அந்தப் பகுதிக்கு விடச் சொன்னோம்.





இன்னொன்று, மணிமுத்தாறு பாசனப் பகுதியில் இந்த வருடம் 2 ரீச் தண்ணீர் கொடுத்தால், அடுத்த வருடம் 2 ரீச் கொடுப்போம். ஆனால், 4 ரீச்களுக்கும் இப்போது தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, 4 ரீச்களுக்கும் கொடுத்து, இந்தப் பாசனப் பகுதிக்கு உட்படாத புத்தன் தருவைக்குக் கொண்டு செல்வதில் சில தடங்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், தொடர்ந்து கொடுத்து வருகிறோம். இதில் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன் வெளிப்படையாக. புத்தன் தருவை மணி நாடார் தொகுதியிலே வருவது. அதற்காக 12 கோடி ரூபாயை கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கிறார்கள். வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. இருப்பது மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய அப்பாவு அவர்கள் சொன்னவற்றில் எதையும் இதுவரை நான் மறுத்ததில்லை. அந்தப் பகுதியிலே அவர் அமைதியாக இருக்கிறார்—ஆனால், இவர் போய் அங்கே உட்கார்ந்து கொண்டு உண்ணாவிரதம் இருப்பது என்பது அரசியலாக இருக்குமே தவிர ஆக்கபூர்வமான பணியாக இருக்காது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம், புத்தன் தருவைக்கு மணிமுத்தாறிலேயிருந்து தண்ணீர் தருவதற்கு, அந்தத் திட்டத்தில் சேரவில்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், விஜயநாராயணன் குளத்திலுள்ள நடுமடை என்ற மடையிலிருந்து தண்ணீர் பெறும் என்னுடைய தொகுதியிலுள்ள 11 குளங்களை, முழு உரிமை பெற்ற குளங்களை Concrete இட்டு அடைத்து வைத்திருக்கிறார்கள். 40 கன அடி வீதம் அந்த 11 குளங்களுக்கும் தண்ணீர் வரவேண்டியதற்குப் பதிலாகத்தான் புத்தன் தருவை என்ற ஒரேயொரு கடைசிக் குளத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு முன்னால் இருக்கின்ற சுவிசேஷபுரம் குளம் வழியாக, சுவிசேஷபுரம் குளம், குருவிசுட்டான் குளம், தங்காயன் குளம், இதேபோன்று, ஆணைகுடிப்படுகை, ஆயங்குளம்படுகை வழியாகக் கடைசியாகக் செல்வதுதான் புத்தன் தருவை. ஆகவே, அதிலே எனக்கு உரிமை இல்லை என்று சொல்வதை உண்மையிலேயே நான் மறுக்கிறேன். 11 குளங்களுக்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதில் 40 கன அடி வீதம் தண்ணீர் விஜயநாராயணபுரம் நடுமடை வழியாக வருவதில் 20 கன அடி வீதம் சுவிசேஷபுரம் குளம் வழியாக அந்த 11 குளங்களுக்கும் தண்ணீர் வரும் என்று 4-1-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியோடு மாண்புமிகு பொதுப்பணித் துறை

அமைச்சர் அவர்கள் எல்லா பத்திரிகைகளிலும் செய்தியாகக் கொடுத்தார்கள். அதோடு, 4-2-1998 அன்று 800 எம்.சி.டி. தண்ணீர் கொடுப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்த பின்பும் இன்று எல்லா குளங்களுக்கும் உள்ள பாசன நிலங்களில் முழுமையாகப் பயிர்கள் அறுவடை செய்த பின்பும், குளத்தில் முக்கால் குளத்திற்கு மேல் தண்ணீர் இருக்கின்றது. குடிப்பதற்கு என்று இந்த 16 குளங்களுக்கும் தண்ணீர் வந்தால், நீர்மட்டம் ஓரளவுக்கு இந்த 'போர்-வெல்'களில் எல்லாம் வந்தது என்றால், அந்த உப்பு நீர் மாறிவிடும். ஆகவே, அந்த அடிப்படையில்தான், சுவிசேஷபுரம் வழியாக தண்ணீர் தருகிறார்களே தவிர, எங்களுக்கு உரிமை இல்லாத தண்ணீரை அவர்கள் தரவில்லை. எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, அரசு இதற்கு ஓர் ஆணையைப் பிறப்பித்தால், அதைச் செயல்படுத்துகிற விதத்தில், அதிகாரிகள் இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து...

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், விஜயநாராயண ஏரியிலிருந்து கீழே குளத்திற்குத் தண்ணீர் போகவில்லை என்கிறார். நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அடைத்தது இந்த அரசு அல்ல. இப்படி அடைபட்டுக் கிடக்கிறது என்பதை இந்த 1½ ஆண்டு காலத்திலே, என்னுடைய கவனத்திற்கு ஒரு நிமிடம் கொண்டு வந்திருந்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கையை நான் எடுத்திருப்பேன். ஆனால், உங்களுடைய பகுதி கல்குளம் வரை இருக்கிறது. கல்குளத்திற்குக் கீழே, பட்டர் குளத்திலே ஆரம்பித்து, விஜயநாராயண ஏரிக்குக் கொண்டுபோய் சேர்க்கப்படுவதால், அது அவருடைய தொகுதிக்கு வந்துவிடுகிறது. அந்த 4 ரீச்காரர்களும், அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு, எங்களுக்கே பாசனத்திற்குப் போதவில்லை; உரிமை இல்லாதவர்களுக்குக் கொண்டு போகிறீர்களே என்று மறியல் செய்கிறார்கள். மறியல் செய்தவர்களையும் நாங்கள் அமைதிப்படுத்தி, உங்களுக்கும் தண்ணீர் கொண்டுபோக வைத்திருக்கிறோம். என்று சொல்லியிருக்கிறோம். தண்ணீர் இன்று போயக் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தை என்னிடத்திலே சொன்ன பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நான் மதுரைக்குச் சென்றிருந்தபோது, அங்கேயே எல்லா இஞ்சினீயர்களையும் அழைத்து, 1/2 மணி நேரம் அவர்களுக்கு விளக்கி, அடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று



சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். அதைப் பாராட்ட உங்களுக்கு உள்ளம் இல்லையே என்பதுதான் எனக்கிருக்கிற வருத்தம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு பேச அனுமதி கொடுக்கவில்லை உட்காருங்கள், எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் அத்திக்கடவு என்கிற அவினாசித் திட்டத்தை, குடிநீர்த் திட்டமாகக் கருதி விரிவான ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இராதாபுரம் கால்வாயிலுள்ள 52 குளங்களுக்கும், பேச்சிப்பாறையிலிருந்து தண்ணீர் விட்டு, குடிதண்ணீர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்களைப் பொறுத்தவரை 2 இலட்சம் பேர் நேற்றைக்குமுன் தினம் சென்னையிலே ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். தமிழகத்திலே 2 இலட்சம் பேர் சத்துணவு அமைப்பாளர்களாக இருக்கிறார்கள். கடைநிலை ஊழியர்கள்கூட சம்பளம் ரூ.1,500 என்றும் ரூ.2,000 என்றும் வாங்கிக் கொண்டிருக்கும்போது, இவர்கள் மட்டும் இன்னும் ரூ.500, 600 என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதில் நம்முடைய அரசுக்கு ஆலோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும் கிட்டத்தட்ட எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த இளைஞர்கள் என்ற முறையில், பள்ளிக்கூடங்களிலே, Part time ஆசிரியர்களாக அவர்களை நியமித்து, அவர்களுடைய வாழ்க்கையில் கொஞ்சம் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசு 15 சதவீகிதம் கிராமப்புற மாணவர்களுக்கு, தொழிற்கல்வியில் இடம் ஒதுக்கியிருக்கிறது. இதிலே ஒரு சிக்கல் என்ன என்றால், கிராமப்புறத்தில்தான் படிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கிராமப்புறம் என்று சொன்னால், இப்போது நம்முடைய புதிய சட்டப்படி, நகர பஞ்சாயத்து, அதாவது பெரிய பஞ்சாயத்துகளும் நகரப் பஞ்சாயத்துக்களாகிவிட்டன; அப்படி இருக்கிறபோது, அந்த நகரப் பஞ்சாயத்துக்களிலேதான் உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் இருக்க முடியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள்கூட இரண்டு அல்லது

மூன்று தினங்களுக்கு முன்னாலே, இதைப்பற்றிப் பேசினார்கள். அதை நான் குறிப்பெடுத்துக் கொண்டேன். கிராமப்புற, நகரப் பஞ்சாயத்துக்களில் படிக்கிற மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அதோடு, நாட்டிலுள்ள கிராம மக்கள் 75 அல்லது 80 சதவிகிதம் பேர் வாழ்கின்ற பகுதியில் 15 சதவிகிதம் என்பது குறைவு. ஆகவே, அதை 25 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, 15 விழுக்காடு ஒதுக்கியிருப்பது, கிராமப் பகுதி மாணவர்களுக்கு என்ற அடிப்படையில், பேரூராட்சி போன்ற அந்தப் பகுதிகளும் அதில் இணைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மத்திய அரசு, Rural என்று சொல்லப்படுகிற அந்தச் சொல்லுக்கு, பேரூராட்சி அல்லாத பிற பகுதிகள் என்றுதான் வரையறை செய்திருக்கிறது. அதுதான், நீதிமன்றத்திலேயும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஒரு காரணமாக, ஏதுவாக இருந்தது.

இரண்டாவது, பேரூராட்சிகளிலோ அல்லது அதற்குச் சற்று உயர்ந்த இடத்திலோ படிக்கிற சற்று வசதியுள்ள வட்டாரத்திலே படிக்கிற மாணவர்கள், இந்த Rural area என்று சொல்லப்படுகிற மாணவர்களுடைய பட்டியலிலே சேர்க்கப்படுவார்களானால், இவர்களைவிட அவர்கள் 5 அல்லது 4 எண்கள் அதிகம் பெறுகிற காரணத்தினால், அவர்கள் இடம் பெற்று இந்த Rural என்று சொல்லப்படுகிற பகுதியில் இப்போது இடம் பெறுகிற மாணவர்கள், மறுபடியும் இடம்பெற மாட்டார்கள். இந்த 15 விழுக்காடு என்பது, சிறப்புத் தகுதியே தவிர, 85 விழுக்காட்டிலேயும், மற்றவர்கள் யார் யாரானாலும் எப்போதும் அதிலே சேர்க்கப்படலாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் நிச்சயம் அந்தப் பகுதியிலே இடம் பெறுவார்கள். விளக்க வேண்டுமானால், ஒன்றைச் சொல்ல வேண்டும். மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 விழுக்காடு; பிற்படுத்தப் பட்டவர்களுக்கு 30 விழுக்காடு என்ற பாகுபாடு வருகிறபோது, சிலபேர், எங்களை மிகப் பிற்படுத்தப்பட்டவர்களில் சேருங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்தால், 20 விழுக்காட்டிற்குள் தான் அவர்களுக்கு வாய்ப்பு.





நண்பகல் 12-00

பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே இருக்கிறபோது 30 விழுக்காட்டிலே அந்த வாய்ப்பு. இரண்டும் இல்லாதவர்கட்கு மொத்தத்தில் அந்த வாய்ப்பு. ஆகவே அந்த வகையிலே 85 விழுக்காட்டிலேயும் பேரூராட்சியிலே உள்ள பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற பிள்ளைகள் அந்த வாய்ப்பைப் பெறுகிறார்கள். ரூரல் ஒதுக்கீடு ஒரு சிறப்பே தவிர இதுவே எல்லா மாணவர்களையும் எல்லா வகையிலும் இடம்பெறுவதைத் தடுத்துவிடாது. இது ஒரு சின்ன, கைதூக்கிவிடுகிற வாய்ப்பு. அடித்தட்டில் உள்ள மக்களுக்குப் போய்ச் சேருவதற்கு இந்த வாய்ப்பு ஏதுவாக இருக்கிறது. அதுவும் இது ஓர் 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் நடைமுறையில் இருந்து செயல்படுகிறபோது ஏதேனும் தகுந்த மாற்றம் செய்ய வேண்டுமானால் அப்போது ஆலோசிக்கலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் குழந்தைசாமி அவர்கள் தினமணி பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதில் என்ன சொல்கிறார்? இதற்கான நிதியை மற்ற மாநிலங்களில் மாநில அரசுகள் கணிசமான அளவுக்கு ஒதுக்குகின்றார்கள் என்கிறார். நான் முதலில் கட்டுரையின் சில பகுதிகளைப் படித்துவிடுகிறேன். வாரனாசி இந்து பல்கலைக்கழகத்திற்கு 8032 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 201 இலட்ச ரூபாய்தான் ஒதுக்கப்படுகிறது. அலிகார் பல்கலைக்கழகத்திற்கு 7500 இலட்ச ரூபாய் ஒதுக்குகிறார்கள். அதேமாதிரி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு இவ்வளவு என்றெல்லாம் சொல்கிறார்கள். அது மத்திய அரசாங்கம், அது வேறு. மாநில அரசாங்கங்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்திற்கு 1437 இலட்சம் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். உஸ்மானியா பல்கலைக்கழகத்திற்கு 3405 இலட்சம் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆந்திரா பல்கலைக்கழகத்திற்கு 2534 இலட்சம் பணம் ஒதுக்குகிறார்கள். வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்திற்கு 1508 இலட்சம், ஆனால் நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தீர்களேயானால் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 201 இலட்சம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு 10 இலட்சம், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு 189 இலட்சம், பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 மார்ச் 23

111 இலட்சம், பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு 93 இலட்சம் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு 67 இலட்சம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு 100 இலட்சம், அன்னை தெரசா பல்கலைக்கழகத்திற்கு 68 இலட்சம் என்று சொல்லிவிட்டு என்ன சொல்கிறார்கள்? "இதற்கான நிதியை மற்ற மாநிலங்களில் மாநில அரசுகள் கணிசமான அளவில் ஒதுக்குகின்றார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ ஆளும் கட்சி எதுவாக இருந்தபோதிலும் வேறுபாடின்றி பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்குவது மாநில அரசின் முக்கியப் பொறுப்பு அல்ல என்பது போன்ற மனநிலையைத் தமிழக அரசு கடைப்பிடித்து வருகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து பல்கலைக்கழகங்கள் சிறப்பாக நடந்தால்தான் இந்த நாடு சிறப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து .....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் ஒவ்வொரு நிலையிலேயும் அரசு நிதி ஒதுக்குவது என்பது பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து படிப்படியாக சிறு வளர்ச்சியைப் பெற்றுவருகிற ஒன்று. அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலேதான் இலவசக் கல்வி என்ற பெயரால் மிகப்பெரிய அளவுக்கு இந்தப் பொறுப்புச் சுமையை அரசு ஏற்றுக்கொள்கிற நிலைமை உள்ளது. மற்ற மாநிலங்களில் வருவதற்கு முன்னாலேயே தமிழ்நாடுதான் ஏற்றுக்கொண்டது. அந்த வகையிலே கல்லூரிப் படிப்பிலேகூட இலவசக் கல்விக்காக நாம் செலவிடுகிறோம்.

சத்துணவுத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி இல்லை. மாநில அரசு தான் பெருமளவுக்குச் செலவழிக்கிறது. இப்படி அடிப்படையில் தொடக்கக் கல்வியிலிருந்து தொடங்கி நாம் செலவிடுகிற அந்த விகிதாச்சார அளவு சற்று அதிகம் என்ற காரணத்தினால் பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி குறைவு. ஆனால் இன்னொரு பக்கம் கல்லூரிக் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற தொகை வேறு சில மாநிலங்களில் சற்று அதிகம், தொடக்கக் கல்விக்குக் குறைவு. நாம் தொடக்கப பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளை இன்னும் சொல்லப்போனால் தாழ்த்தப்பட்ட மக்கள், மிகப் பின்தங்கிய மக்கள் ஆகியோரைக் கைதூக்கிவிட வேண்டும் என்பதால் கல்வி அளிப்பதை அடித்தட்டிலிருந்து நாம் தொடங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்கள் சொன்ன கருத்து அடியோடு தவறு அல்ல. ஆனால் அது



1998 மார்ச் 23] [பேராசிரியர் க. அன்பழகன்]

நீண்டகால வரலாறு. காங்கிரஸ் கட்சிக் காலத்திலிருந்து பல்கலைக் கழகங்களைவிடப் பள்ளிக்கூடங்களுக்கு முக்கியத்துவத்தைத் தருகிற ஒரு மனப்போக்கு நம்முடைய மாநிலத்திலே ஏற்பட்டது. அது நாம் வரவேற்கின்ற மனப்போக்காக இருந்தாலும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியை உயர்த்துவது குறித்து அரசு ஆலோசிக்கும் என்னும் கருத்து ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன், நீங்கள் 50 நிமிடங்களுக்கு மேலே பேசிவிட்டீர்கள், கொஞ்சம் விரைவாகப் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-05

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மிகப் பெரிய வெள்ளம் வட மாவட்டங்களிலே வந்தது. அந்த வட மாவட்டங்களில் வெள்ள நிவாரணத்திற்காக பணம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒருவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 17-1-1998-ல் எழுதியிருக்கிறார். விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், பெருவனூர் என்ற கிராமத்தில் வாழ்கின்ற விவசாயக் குடிமக்களுக்கு Cheque கொடுத்திருக்கிறார்கள். இந்தியன் வங்கி Cheque கொடுத்திருக்கிறார்கள். Agricultural Development Officer, மேல்மலையனூர் என்று போட்டு Cheque கொடுத்திருக்கிறார்கள். அந்த Cheque-ஐக் கொண்டுபோய் வங்கியில் கொடுத்தால் பணம் இல்லை, செல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், அதைச் சில விவரமான ஆட்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர் எழுதியிருப்பது என்னவென்றால், பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இதனால் மன வேதனையோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதி, 100 பேர்களிடம் கையொப்பம் பெற்று அனுப்பியிருக்கிறார். இக்கடிதம் முதலமைச்சர் அவர்களுக்கும் வந்திருக்கிறது. இருந்தாலும், நான் இதை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து - இவை எல்லாம் மிகவும் சீரியசான விஷயம் - அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் ஏற்கெனவே பேசிய விஷயம்; சென்னையிலே மட்டும் 192 கோடி ரூபாய் அளவுக்கு சில நிதி நிறுவனங்கள் மோசடி

செய்து, அதன் காரணமாக ஏராளமான மக்கள் துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். அதற்காக ஒரு Special Court போடப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. அந்த Special Court போடுவது குறித்து மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. ``Sometime back President of India has approved the formation of Special Court for these Companies, to arrange for refund" என்று வந்திருக்கிறது. இங்கேயும் அந்த Special Court உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த Special Court-க்கு Secretary போடவில்லையாம். எந்தவித வசதியும் செய்யாமல் மிக மோசமான நிலை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. 192 கோடி ரூபாய் அளவுக்குப் பறிகொடுத்துவிட்டு மக்கள் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்மை கிடைக்கின்ற வகையில் அக்கோர்ட்டுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, அந்த மக்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கின்ற துன்பத்தைப் போக்குவதற்கு ஒரு வழிகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் ரூ.500 கொடுக்கப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. அதிலே சிலர் 'நீங்கள் கோயிலில் வேலை செய்ததற்கான ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். பல கோயில்களில் பணிபுரிந்தவர்களுக்கு அதற்கான ஆதாரம் இருக்காது. ஆகவே, அங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் அல்லது கோயிலில் இருக்கக்கூடிய அறங்காவலர்களுடைய சர்டிபிகேட்டை வைத்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உடல் ஊனமுற்றவர்கள் ஒரு மனுவை எனக்கு எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள், எனக்கும் எழுதியிருக்கிறார்கள். கண் தெரியாதவர்களுக்கு ஒரு சதவிகித வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதன்படி நமமுடைய அரசும் செய்ய வேண்டும். அவர்கள் மேலும் பல கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையும் கவனித்துக் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், தன்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில், உள்ளாறு





நீர்த்தேக்கத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரங்களை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

அடுத்து, கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதிகளான பேராவூரணி, சேதுபாவாசத்திரம், பட்டுக்கோட்டை போன்ற இடங்களில் அரசே நேரடி கொள்முதல் செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்பணி சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அதை நானே நேரடியாகச் சென்று பார்த்தேன். இருந்தாலும்கூட சில இடங்களில் சரியான முறையில் இல்லை. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது என்று எனக்குப் புகார் வந்திருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேட்டூர் வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில் புஞ்சைப் பயிருக்காகத் தண்ணீர் திறந்து விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதிநீர் என்ன ஆயிற்று என்று கேட்கிறார்கள். தண்ணீர் வருகின்றதா, வரவில்லையா என்று கேட்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்றது என்று சொல்கிறார்கள். வரவில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி ஒரு விளக்கமான அறிக்கையை வைக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் நடக்கும் ஒரு கொடுமையைப் பற்றி ஏ.பி.சி. சிவிக் எக்ஸ்னோரா என்கின்ற அமைப்பு ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறது. அது என்னவென்றால், கெல்லிஸ் பகுதியில், 20 அடி ரோட்டில்—மெயின் ரோட்டில் அல்ல, உள்ளே செல்லும் ரோட்டில்—ஒரு பிராந்திக்கடை அதிக நாட்களாக இருந்து வருகிறது. அந்த பிராந்திக் கடையில் குடிப்பவர்கள், சிறுநீர் கழிப்பதற்கு அருகிலுள்ள இடத்தைப் பயன்படுத்துகிறார்கள். அந்தப் பகுதியில் ஒரு அருமையான, நல்ல அப்பார்ட்மெண்ட் இருக்கிறது. அதிகம் படித்தவர்கள், நல்ல நிலையில் இருப்பவர்கள் எல்லாம் அந்தத் தெருவிலே குடியிருக்கிறார்கள். அந்தத் தெருக்களிலே போக முடியவில்லை என்றும், பல பெண்களுக்கு அவமானங்கள்

ஏற்பட்டிருக்கின்றன என்றும் சொல்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரத்தில், இந்தப் பிராந்திக் கடைகள் எல்லாம் இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்டதல்ல. ஏற்கெனவே பழைய அரசாங்கத்தினாலே கொடுக்கப்பட்ட லைசென்ஸ்கள் ஆகும். அது நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரின் தொகுதியைச் சார்ந்ததாகும். இதுபற்றி ஓட்டுக் கேட்கின்றபோது அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அப்போது அவர் 'நான் தேர்தல் முடிந்தவுடன் இதை எடுத்துவிடுகிறேன்' என்று சொன்னதாகவும் ஆனால் இதுவரை எடுக்கவில்லையென்றும் சொன்னார்கள். நான் அவரைப் போய்ப் பார்த்தீர்களா என்று கேட்டேன். நாங்கள் போய்ப் பார்த்தோம் அங்கு மிகுந்த கூட்டமாக இருந்தது என்றும், மனுக்கள் எல்லாம் கொடுத்துவிட்டு வந்தோம் என்றும், இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொல்லி நீங்கள் சட்டசபையிலே நேரிடையாகச் சொல்லுங்கள் என்று சொல்லி இருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தினைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் சொன்ன அந்த இடத்திலே பிராந்திக் கடை இருந்தது உண்மை. மக்கள் புகார் சொன்னதும் உண்மை. அந்தப் பகுதியிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கும்போது ஒரு தனியார் அதைச் சுற்றியுள்ள அத்தனை நிலங்களையும் தனக்குச் சொந்தமாக வாங்கிக் கொண்டார். அதனாலே அரசு உடனடியாகத் தலையிட முடியவில்லை. இப்போது நீதிமன்றத்தில் அந்தப் பிரச்சினை இருக்கின்றது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** கடைசியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையினை வைக்கிறேன். தொகுதி மேம்பாட்டுக்காக ஒதுக்குகின்ற 25 இலட்சம் ரூபாய் போதாது. அதை 50 இலட்சம் ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பஞ்சாயத்துத் தேர்தல் வந்த பிறகு பஞ்சாயத்து யூனியனிலே வேலையே கிடையாது. இ.ஏ.எஸ். திட்டம் என்று ஒரு கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து ஒவ்வொரு ஊராட்சி



ஒன்றியத்திற்கும் வருகின்றது. அதேபோல ஜே.வி.வி.டி. திட்டம் இருக்கின்றது. ஏராளமான திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அதற்கான தொகையை நம்முடைய அரசு, பஞ்சாயத்துக்கு இவ்வளவு என்றும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு இவ்வளவு என்றும், மாவட்டத்திற்கு இவ்வளவு என்றும் பிரித்துக் கொடுக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்வளவு தொகை என்று பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைகளைப் பொறுத்தவரையில் டெண்டர் விடுங்கள் ஆட்சேபணையில்லை. ஆனால் எந்த வேலையை எங்கே எடுக்க வேண்டுமென்ற உரிமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டுமென்பதை நான் பணிவோடு தெரிவித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, இறுதியாக அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் எல்லாவற்றின் மீதும் என்னுடைய பதில்களைச் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கூட, அடுத்து தொடர்ந்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நடைபெறுகின்ற பொது விவாதம், தனித்தனித் தலைப்புகளிலே வருகின்ற மானியங்களின் விவாதங்கள் இவற்றில் அதற்கான விளக்கங்களை, விடைகளை அளிக்க முடியும் என்ற நிலையில், குறிப்பிட்ட சில மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் எடுத்துக்கூறி சில பொதுவான செய்திகளை இந்த மாமன்றத்திலே பரிமாறிக் கொள்ளலாம் என்ற அளவோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று அந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது கவர்னருடைய உரையேயல்ல; கருணாநிதியினுடைய உரை என்று கூட விமர்சிக்கப்பட்டு வெளியிலே

பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஒரு உண்மையை இதுவரையிலே உணராமல் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இருப்பார்களேயானால் அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகச் சொல்கிறேன். எந்த ஓர் ஆளுநர் உரையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய உரை தானே தவிர, முதலமைச்சர் அவர்களுடைய உரையைத்தான் ஆளுநர் அரசின் சார்பாக அவைக்கு வழங்குகிறார் என்பதுதான் உண்மையே தவிர, முழுக்க முழுக்க அரசுக்குச் சம்பந்தம் இல்லாத உரை என்று யாரும் கருதிவிடக் கூடாது.

பிற்பகல் 12-15

நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தோழமைக் கட்சிகள், அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பெரும்பாலான இடங்களிலே வெற்றி பெறவில்லை என்ற உண்மை உலகத்திற்கே தெரிந்தது. எனவே, அதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால், இத்தகைய முடிவுகளின்போது இதற்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்து கொண்டது என்பதையும், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், வேறு சில கட்சிகளும் தற்போது எப்படி இங்கே நடந்து கொண்டன என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

1980 ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டபோது, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில் 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் அணி மகத்தான வெற்றியைப் பெற்றது. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த இடங்கள் இரண்டே இரண்டு இடங்கள்தான். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தது.



அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இப்போது நடந்து கொண்டதைப்போல, நடக்கின்ற, நடக்க வேண்டும் என்கின்ற நினைவே எங்கள் யாருக்கும் அப்போது வரவில்லை. ஆனால் எனக்கு நேராக, இந்த அவையிலே தாங்கள் அமர்ந்திருக்கும்போது, ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. 'இந்த அரசு பதவி விலக வேண்டும்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் இங்கே காட்டப்பட்டன. இதுபோன்ற மரபுகள் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டே இரண்டு இடங்களைப் பெற்று தோல்வியைத் தழுவிய நேரத்தில், இங்கே எந்தக் கட்சியாலும் கடைப்பிடிக்கப்படவில்லை. அன்றைக்கு இந்த அவையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த முறையைப் பின்பற்றுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல; கஷ்டமான காரியம் அல்ல. ஆனால், நாம் இந்த அவையிலே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற அந்த மரபுக்கு விரோதமாக நடக்கின்ற மனப்பான்மை கிஞ்சிற்றும் ஏற்படாத காரணத்தால் அன்று இந்தக் காட்சியை இந்த அவை காணவில்லை. ஆனால், இப்போது அந்தக் காட்சியை இந்த அவை கண்டது. அது எவ்வளவு பெரிய தவறு என்பதைத் தாங்கள், தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பின் மூலமாக இந்த அவைக்கு விளக்கி நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள், அந்த உறுப்பினர்களுக்கும் உணர்த்தி இருக்கிறீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகமோ தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணி சேர்ந்து இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு பெரும்பாலான இடங்களைப் பெறவில்லை என்பதற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சற்று வேகமாகவே இங்கே செய்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. சில நேரங்களில், அனுபவங்கள் அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளுக்கு உதவிடக் கூடும்.; துணையாக இருக்கக்கூடும் என்ற அளவில் கடந்த கால அனுபவங்களை நாங்கள் இன்றைக்கு எங்களுக்குப் பெருந் துணையாகக் கொள்கின்றோம்.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, நீங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டுவிட்டீர்கள்; எங்களை விட்டுவிட்டீர்கள்; புதிய தமிழகம் கட்சியை விட்டுவிட்டீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள் நாங்கள் புதிய தமிழகத்தை என்றும் விடமாட்டோம். புதிய தமிழகமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் தன்னுடைய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்ததற்குப் பிறகு சில விஷயங்களை நாம் ஆராய்ந்து, யார் மீது குற்றம், எவர் மீது குற்றம் என்று ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதை விட, நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கின்ற அந்த முனைப்போடு பயணத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அந்த அடிப்படையிலேதான், நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட முடிவை இருகூறாகப் பிரித்து, ஒரு முடிவில் தமிழக சட்டமன்றத்திற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றிபெற மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியும், நாடாளுமன்றத்திற்கு அளித்த வாக்கு, மத்தியிலே ஒரு நிலையான ஆட்சி அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதையும் கவர்னருடைய உரை விளக்கியிருக்கின்றது. இதனை எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி யாரும் ஏமாறத் தயாராக வேண்டாம் என்று நான் அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-20

இந்த அவையில், பல பிரச்சினைகள், கொந்தளிப்பான பிரச்சினைகள், பரபரப்பான பிரச்சினைகள், இந்தப் பேச்சினால் என்ன விளைவு ஏற்படுமோ என்று நானே அஞ்சுகின்ற அளவிற்குப் பேசப்பட்ட பல பிரச்சினைகள் எல்லாம், பல்வேறு உறுப்பினர்களாலும், இங்கே பேசப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளைப்பற்றி எடுத்துச் சொன்ன அந்தச் செய்திகளுக்கு நான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றேன். குறிப்பாக,



திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது அறந்தாங்கிச் சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகின்றேன். மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, - அதனுடைய தொழில் துறை அமைச்சர் முயற்சியால் நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க,—21-3-1997 அன்று இ.ஐ.டி. பாரி நிறுவனத்திற்குத் தினசரி 2500 டன் கரும்பு அரைவை செய்யும் திறன் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றைப் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலே நிறுவ அனுமதி அளித்துள்ளது. அந்த ஆலைக்குக் கரும்பு பயிரிட, கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்யும்படி 25-6-1997 அன்று இ.ஐ.டி. பாரி நிறுவனம், சர்க்கரைத் துறை ஆணையருக்கு விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பம் சம்பந்தமாக, அரசால் நியமிக்கப்பட்ட பகுதி ஒதுக்கீட்டுக் குழு, நிலப் பகுதிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்தக் குழு பரிசீலித்து, அரசுக்கு அதனுடைய பரிந்துரையை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அறந்தாங்கி ஆலைக்குப் பகுதி ஒதுக்கீடு ஆணை, சர்க்கரைத் துறை ஆணையரால் 5-2-1998 மற்றும் 17-2-1998 அன்று வழங்கப்பட்டுள்ளது. இ.ஐ.டி. பாரி நிறுவனம், அறந்தாங்கி வட்டத்திலே உள்ள குரும்பூர் என்ற கிராமத்தில் இந்த ஆலை அமைக்க ஏதுவாகத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆலையை நிறுவுவதற்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து தேவைப்படும் கடனைப் பெறவும், இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆலை நிறுவுவதற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டபின், ஆலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தருவித்து ஆலையை நிர்மாணம் செய்து முடித்து, இந்த ஆலை 1999 ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-25

அடுத்து, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தொடக்கத்திலே உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழகத்திலே 8 விழுக்காடு மாத்திரமே நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது மிகக் குறைவானது என்றும், வேறு சில மாநிலங்களைச் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் 40 விழுக்காடு, 30 விழுக்காடு வழங்கப்படும்போது, இங்கே மாத்திரம் 8 விழுக்காடு என்ன நியாயம் என்றும் கேட்டார்கள். இந்த 8 விழுக்காடு என்பது

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 23

1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே மொத்த வரி வருவாயிலே 8 விழுக்காடு என்பதாகும். அதன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் 662 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இவை தவிர கேளிக்கை வரியிலே 90 விழுக்காடு 100.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் முத்திரைத்தாள் மீதான மேல் வரி, நில வரி வருவாயிலே தல வரி, தல மேல் வரி, பண்ணைக் காடுகள் வளர்ச்சி வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் தொகை, 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள், குடிநீர் வழங்குவதற்கான கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற மானியம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான மானியங்கள். குறைந்த அளவு தேவைத் திட்டத்தின்கீழ் மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களின் கணக்கில் 539.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக 1997-98 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1301.91 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது 9 அல்லது 10 சதவீதம்தான் இருக்கும். ஆனால், கர்நாடகத்திலே 36 விழுக்காடு இருக்கிறதே என்று திரு. சுப்பராயன் அவர்கள் வினவக் கூடும். அதற்கான விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் எல்லா பொறுப்புகளையும் அரசு ஏற்றுக்கொண்டு, சில பொறுப்புகளைத்தான் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தந்து, அந்தப் பொறுப்புகளுக்கான தொகை ஒதுக்கும்போது 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்கின்ற அளவிற்குத்தான் அதுபோய் நிற்கின்றது. உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் 10 ஆம் வகுப்பு வரையிலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான சம்பளம், அவர்களைப் பற்றிய பொறுப்பு அந்தனையுட் மாவட்டப் பஞ்சாயத்துகள் மூலம்தான் நிர்வகிக்கபபடுகின்றன. இங்கே ஆசிரியர்களைப பஞ்சாயத்திலே ஒப்படைத்தால், நாளைக்கே போர்க்கொடி தூக்குவார்கள். அந்தப் போர்க்கொடிக்கு அடுத்த கொடியாக சுப்பராயனுடைய கொடி நிற்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே அனுபவப்பட்டு இருக்கின்றோம். எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி, அதற்கு முன்பு திராவிட



1998 மார்ச் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, ஆசிரியர்களுடைய ஒரு பெரும் கோரிக்கையே, எங்களை ஒன்றியத்திலோ அல்லது உள்ளாட்சி மன்றங்களிலோ ஒப்படைத்து விடாதீர்கள் என்பதுதான். எனவே, அவர்களை எல்லாம் ஒன்றியத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே ஒப்படைத்தால், இன்னும்கூட அதிக சதவீத நிதி ஒதுக்கீட்டை நாம் அவர்களுக்குச் செய்ய முடியும். அதுமாத்திரமல்ல. மருத்துவமனையிலேகூட, 50 படுக்கைகளுக்குக் குறைவாக உள்ளவற்றின் எல்லா மருத்துவச் செலவினத்தையும் அங்கெல்லாம், கர்நாடகா போன்ற மாநிலங்களில், பஞ்சாயத்துகளே, மாவட்டப் பஞ்சாயத்துகளே ஏற்றுக்கொண்டு உள்ளன. இதைச் சொல்லும்போது ஒரு கேள்வி எழும். அப்படிப்பட்ட உரிமைகளை, ஆசிரியர் அல்லாத மற்ற உரிமைகளை ஏன் ஊராட்சி மன்றங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரக்கூடாது என்று கேட்கக் கூடும். இதற்காகத்தான் ஒரு குழுவையே நாம் இப்போது அமைத்து இருக்கின்றோம்.

இதற்கிடையில், மேற்கு வங்கத்தைப் பார்த்தால், அங்கே 16 சதவீதம்தான். அவர்கள் பேசிய பிறகு, அங்கெல்லாம் தொடர்பு கொண்டு, அதிகாரிகளைவிட்டு தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, மேற்கு வங்கத்திலே 16% உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மேற்கு வங்கத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகபட்சப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதுமாத்திரமல்ல, அரசமைப்புச் சட்டத்திலே 73, 74-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான இனங்கள், உதாரணமாக கல்வி, சுகாதாரம் ஆகிய இனங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலேதான் மேற்கு வங்கத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இங்கே மேற்கு வங்கத்தை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட்கள் இருந்தாலும்கூட, உள்ளாட்சி மன்றங்களிடத்தில் ஆசிரியர்களை ஒப்படைத்தால், அதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டும். எனவேதான், இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்குத் தரலாம், வழங்கலாம் என்பதற்கான குழு, உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் குழுவினுடைய பணிகள் எப்பொழுதோ நடைபெற்று முடிந்து இருக்க வேண்டும். ஆனால், குழு

அமைப்பதற்காக ஒவ்வொரு கட்சியினுடைய தலைவருக்கும் கடிதம் எழுதி, உங்கள் கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினரை வழங்குங்கள் என்று கேட்டபோது, பல கட்சிகளிடமிருந்து பதில் உடனடியாக வரவில்லை; மிகத் தாமதமாகத்தான் வந்தது. எந்தக் கட்சிகள் என்று [illegible] பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை; யாரும் என்னை ஆவலோடு, [illegible]டு பார்க்கத் தேவையில்லை. எந்தக் கட்சியினுடைய பெயரையும் நிச்சயமாகக் குறிப்பிடமாட்டேன். ஆனால், அப்படித் தாமதமாக வந்த காரணத்தால், அந்தக் குழுவினுடைய பணி தொடங்கவும் தாமதம் ஆயிற்று. ஒரு கூட்டமோ அல்லது இரண்டு கூட்டங்களோதான் அந்தக் குழுவினுடைய கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. ஆகவே அந்தக் குழு கூடுவதற்கு நேரமில்லாமல் போய்விட்டது. இனி அந்தக் குழுவை நம்முடைய சட்டமன்றப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோதே கூட இடைப்படுகின்ற நேரத்தில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நன்கைந்து தடவைகளாவது கூட்டி, இன்னும் என்னென்ன அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்குத் தரலாம் என்பதை நிர்ணயித்து, அரசுக்கு அறிக்கையாக அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

பிற்பகல் 12-30

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை அமையவேண்டும் என்பதற்காக, அவர்களும் சரி, குமாரதாஸ் அவர்களும் சரி, நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரப்பரைப் போலவே அந்த ரப்பர் தொழிற்சாலையும் நீண்டு கொண்டே போகின்றது. இருந்தாலும் 1994 ஆம் ஆண்டில் செண்பகராமன்புதூர் என்ற கிராமத்திலே வாகன டயர் திட்டம் ஒன்றை அமைக்க 70 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முன்பிருந்த அரசு நடவடிக்கை எடுத்தது. நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணையை 1995 ஆம் ஆண்டு பெற்றுவிட்டார்கள். ஆனால் அந்தத் தடையாணையை விலக்குவதற்குக் கடந்த கால அரசு விரைவான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதத்திற்காக வேதனைப்பட்டு அங்கே ரப்பர் தொழிலைத் தொடங்க முனைந்த அந்தத் தொழில் முனைவர், இந்தத் திட்டமே தேவையில்லை

N211,31N9C N98. 40.2



என்று, அதைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்ட பிறகு, டிட்கோ நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. டிட்கோ நிறுவனம் அந்த நிலங்களுக்கான தொகையை அளித்து, நிலத்தைக் கையகப்படுத்தும் அலுவலரிடம் அந்தப் பொறுப்பை இப்போது வழங்கியிருக்கின்றது. அதே நேரத்தில், நீதிமன்றத் தடையாணையை விலக்குவதற்கும் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த நிலத்தில் ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழிற் பூங்கா - Industrial Park - ஒன்றை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்காக ஏற்கெனவே கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அருகில் இன்னொரு 150 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அவற்றையும் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தொழிற் பூங்கா - ரப்பர் பூங்கா—சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் தொழில்கள் அமைக்க முன்வருகின்ற தொழில் முனைவோருக்கு உதவும் வகையில், தடையில்லாத மின்சாரம், நீர் வளங்கள், உற்பத்தியாகும் ரப்பர் தரங்களைப் பிரித்தெடுத்து ஒரே இடத்தில் சோதனை மற்றும் சான்றிதழ் வழங்குகின்ற வசதிகள், பொது நீர் வெளியேற்றம், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும் என்பதையும், இப்பூங்காவுக்கான பூர்வாங்கமான திட்ட மதிப்பீடு ரூ. 50 கோடியாகும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் எடுத்துக் கூறி இதை விரைந்து முடிக்க டிட்கோ நிறுவனம் எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

பொதுப் பிரச்சினையாக - தொகுதிப் பிரச்சினைகளாக இல்லாமல், மாநிலம் தழுவிய பிரச்சினையாக, குறிப்பாக—பொது விநியோகம் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே அதைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கின்றார்கள். பேசிய எல்லா உறுப்பினர்களுமே இந்தக் குடும்ப அட்டை, நியாய விலைக் கடைகள், பொது விநியோகம் இவைபற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதில் தாமதம் ஆனது உண்மைதான். ஆனால்



218450.

திட்டமிடுகின்ற நேரத்தில், மூன்று வண்ணங்களில் அட்டைகள் என்று எண்ணித் திட்டமிடப்பட்டது. அந்த அட்டைகளை அச்சிடுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தவர்கள், இதற்குக் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்த நேரத்திலே, விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நானும் உணவு அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் ஐந்தாறு தடவையாவது அவர்களிடத்திலே விவாதித்திருக்கின்றோம். இருந்தாலும் கூட அதை அச்சேற்றுகின்ற பணி விரைந்து முடிக்கப்படவில்லை. அந்த நேரத்திலேதான், இந்த ஆளுநர் உரைக்கு முன்பு எனக்குத் தோன்றிய யோசனையாக, இந்த மூன்று வண்ண அட்டைகள் தேவையா, பச்சை அட்டை, மஞ்சள் அட்டை, இளம் சிவப்பு அட்டை என்று மூன்று அட்டைகள் தேவையா, அவரவர்கள், இஷ்டத்திற்கு அதாவது option-லே ஓர் அட்டை, மற்றவர்களுக்கு அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்களைத் தருவதற்கு ஓர் அட்டை என்றிருந்தால் போதாதா? ஒருவருக்கு இல்லவே இல்லை என்று சொல்வதற்கு ஓர் அட்டை தேவையா என்று யோசித்தபோதுதான், வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு இல்லவே இல்லை என்ற நிலையிலே அந்த அட்டை வழங்கப்படலாம்; எனவே இரண்டு அட்டைகள் போதுமானது என்று அந்த அட்டைகளைக் கணக்கிடும்போது நம்முடைய திரு. தாமரைக்கனி குறிப்பிட்டதைப் போல பச்சைமீது வந்துள்ள வெறுப்பால் அல்ல; வெறுப்பு ஒன்றும் வரவில்லை; என்றைக்கும் வராது; ஏனென்றால் பச்சைப் பசேல் என்றுள்ள இயற்கையைப் பார்ப்பதிலேதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி; அந்த எண்ணத்தால் அந்த நிறத்தை விலக்கிவிடவில்லை; இந்தத் திட்டத்தை நாங்கள் மாற்றி அமைக்க எண்ணியபோது, அச்சடிக்கப்பட்டிருக்கிற அட்டைகள் எத்தனை என்று கணக்கிட்டபோது, எந்த நிறத்தைக் குறைத்தால் இழப்பு, குறைவாக இருக்கும் என்று எண்ணிப்பார்த்து பச்சை நிற அட்டைகள்தான் குறைவாக அச்சடிக்கப்படும்.; ஏனென்றால், இல்லை என்று சொல்கிற கார்டுகள்தான் குறைவாக இருக்கும்; ஆகவே அதை விலக்கிவிட்டு, மற்ற நிறங்களை அச்சிடலாம் என்றொரு முடிவுக்கு வந்து, மஞ்சள், இளம் சிவப்பு என்ற அந்த இரண்டு வண்ண அட்டைகளை வெளியிடுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. இதிலே வருமான அடிப்படை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய நண்பர் ஆர்.எம். வீரப்பன் அவர்கள் எம்.ஜி.ஆர். மன்றத்தினுடைய தலைவர், அவருடைய கட்சி சார்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி





இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருமான அடிப்படையே கூடாது, எல்லோருக்கும் கார்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே உணவு அமைச்சர் எடுத்துக்காட்டியதுபோல, மத்திய அரசு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு தானியங்கள் வழங்க வேண்டும், அது அரிசி ஆனாலும் கோதுமை ஆனாலும், என்கிற முடிவை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தபோது, அந்த முடிவு எடுக்கிற கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன் என்ற நிலையில் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் என்கிற முறையில் மாத்திரமல்ல, நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கிற முறையிலும் நான் எடுத்து வைத்த கருத்து; 'ஏற்கெனவே, நீங்கள் சொல்கின்ற விலையைவிட குறைவான விலைக்குத்தான் தமிழ்நாட்டிலே நாங்கள் அரிசி விற்பனையை நியாயவிலைக் கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதை எடுத்துக்காட்டி, 'நீங்கள் கொண்டு வருகின்ற இந்த முறையின் காரணமாக எங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற அரிசியைக் குறைத்துவிடக் கூடாது' என்ற உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகுதான், நான் அவர்கள் எடுத்த அந்த முடிவுக்கே ஒப்புதலை அளித்தேன். அந்த உத்தரவாதத்தை, அன்றைய பிரதமரும், உணவு அமைச்சரும்கூட அந்தக் கூட்டத்திலே எனக்கு வழங்கினார்கள். அந்த உத்தரவாதத்தின்படி நமக்கு அவர்கள் அரிசி வழங்கி வருகிறார்கள் என்பது ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்த வருமான வரம்பு, வறுமைக்கோடு எது என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஒன்றாகும். 1250 ரூபாய் இந்த வருமான வரம்பு இருக்கிற காரணத்தினால், இந்தச் சிவப்பு அட்டை; அரிசி இருப்பவர்களுக்கு மாத்திரம்தான், இந்தச் சிவப்பு அட்டை; அரிசி மற்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்று இல்லை. அதற்கு மேலாக மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள்கூட அவர்கள் விரும்பினால் - option அவர்களுக்கு — அரிசிதான் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம். எனவே, அப்போது, எனக்கு அரிசிதான் வேண்டும் என்று மஞ்சள் அட்டைக்காரர் சொல்வாரேயானால், மஞ்சள் அட்டையும், இளஞ்சிவப்பு அட்டையும் ஒரே தரம்தான். அப்போது, இல்லை, இல்லை எனக்கு வேண்டாம்,

எனக்குத் தேவையில்லை என்று அவர்களாக முன்வந்து 'வேண்டாம்' என்று சொன்னால் தவிர, அவர்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்படமாட்டாது. மஞ்சள் அட்டைக்கும் அரிசி உண்டு என்பதை நான் மிகத் தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வருமான அடிப்படையிலே இருக்கின்ற இந்த முறை நீது. இதனால் கெடுதி ஏற்படும் என்ற விமர்சனத்திற்கு எள்ளளவு இடமுமில்லை. அப்படி யாரும் அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. அதற்காக அதிர்ச்சி அடையத் தேவையும் இல்லை என்பதையும் இந்த விளக்கத்தின் மூலமாக அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே இந்த அட்டை வழங்கத் தொடங்கப்பட்டு, விரைவிலே முடிவுறும் என்று மாதக் கணக்கிலே, முதலிலே சொல்லப்பட்டது உண்மைதான். ஆனால் எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட காலதாமதத்தால் அந்த நாட்களைச் சற்று நீட்டிக்க வேண்டிய இன்றியமையாமை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக இங்கே நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல, இந்த இடைக்காலத்திலே யாரும் குடும்ப அட்டை இல்லாமல் அவதிப்படுகின்ற நிலை நிச்சயமாக வராது. ஏன் என்றால், ஏற்கெனவே இருக்கின்ற அட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள், நியாயவிலைக் கடைகளிலே அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இன்றைக்கும் இருக்கின்றது. அவர்களுக்கு மேலும் உதவிகரமாகவும், அதே நேரத்திலே அரசாங்கத்தினுடைய பொருளாதார இழப்பின் சுமையைக் குறைப்பதற்காகப் போலி அட்டையைக் கண்டுபிடிப்பதற்காகவும்தான் இந்த முறையை நாம் கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

*பிற்பகல் 12-40*

சென்னை மாநகரத்தில், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப் போல மே முதல் தேதி முதல் இந்த அட்டைகள் வழங்கப்படும். அது, ஜூன் மாதம் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வரும்; அந்தப் பொருட்களை வாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு நடைமுறைக்கு வரும். அதேபோல், சென்னை மாநகரத்திலே மே முதல் தேதி வழங்கப்படும் அதே காலகட்டத்தில், மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகரப் பகுதிகளிலும் அதே முதல் தேதி குடும்ப



அட்டைகள் வழங்கப்படும். திருநெல்வேலி மாநகரப் பகுதியில் மே மாதம் 16 ஆம் தேதி முதல் இந்தக் குடும்ப அட்டை வழங்கப்படும். மாவட்டங்களில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய குடும்ப அட்டைகள், இந்த வண்ண அட்டைகள், 1-6-1998 முதல் வழங்கப்படும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம்கூட 1-6-1998-ல் இந்த அட்டைகள் வழங்கப்பட்டு விடும். நான் குறிப்பிட்ட இந்த 8 மாவட்டங்களில் மாத்திரம் 1-7-1998 முதல் இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, தற்போதுள்ள குடும்ப அட்டைகளை, அதுவரையிலே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினையும் நான் தருகின்றேன். எனவே, மாநிலம் முழுவதும் இந்தப் புதிய இருவண்ணக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி மே மாதம் 1 ஆம் தேதி தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் அழகிரியும், மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும், இன்னும் சில குடும்பங்கள், குடும்ப அட்டைகள் இல்லாமலே இருக்கின்றன என்ற குறையை இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளாக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன என்ற கருத்தும் ஆளும் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி, இதுவரையில் குடும்ப அட்டைகளே பெறாமல் விட்டுப்போன குடும்பங்களுக்கு, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் ஜூலை மாதத்திற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான அறிவிப்புகளும் விரைவிலே வரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்டுப்போன குடும்பங்களிலிருந்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்கெனவே மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் குடும்ப அட்டைப் பிரச்சினைக்கு அடுத்து, — ஏன் அடுத்து என்றுகூடச் சொல்ல முடியாது. இதைவிடச் சற்று மேலாகவே — கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினை பற்றி இங்கே பேசப்பட்டு

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 23

இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு பெரியசாமி அவர்களும், ஏன் எல்லோருமே, நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர்களும், அத்தனை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களே கழகத்திற்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உள்ள ஈடுபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1955-56 ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்களும், நானும் மற்றும் நம்முடைய பேராசிரியர் போன்ற கழகத்தினுடைய தலைவர்களும், கைத்தறித் துணிகளைத் தலையிலும், முதுகிலும் சுமந்து, 'கைத்தறி வாங்கலையோ கைத்தறி' என்று அப்போது உடுமலை நாராயண கவிராயர் எழுதிய 'செந்தமிழ்நாட்டுக் கைத்தறிச் சேலை, வேட்டிகள் வாங்கிடுவீர், நம் கைத்தறியாளர் சேமமுறவே வாங்கிடுவீர்' என்ற பாடலைப் பாடிக் கொண்டு, அண்ணா அவர்கள் திருச்சியிலும், நான் சென்னையிலும், கைத்தறித் துணிகளை விற்றோம். அன்றைக்கு ஒருநாள் விற்பனை 1 லட்சம் ரூபாய். அன்றைக்கு 1 லட்சம் ரூபாய் என்றால், இன்றைக்கு எவ்வளவு என்று பார்த்துக் கொள்ளுங்கள். 1 லட்சம் ரூபாய்க்கு அன்றைக்குக் கைத்தறித் துணிகளை விற்று, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு ஒரு மவுஸ் · ஒரு மகத்துவத்தை ஏற்படுத்துகின்ற நிலையை நாங்கள் உருவாக்கினோம். அப்படி விற்றபோதுதான், அதுவரையிலே கதர் ஆடையிலேயிருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையிலே நான் விற்ற கைத்தறி ஆடைகளை அன்றைக்கு அவருடைய இல்லத்திலே 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, அதற்குப் பிறகு, கைத்தறி கட்ட ஆரம்பித்தார் என்ற ஒரு வரலாற்றுச் செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-45*

இன்றைய நிலையில் உலகம் முழுவதும் இந்தத் துணித் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கைத்தறியாளர்களுடைய குறைகளைத் தமிழகத்திலே போக்குவதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

1989 ஆம் ஆண்டிலேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியவர்களுக்கு இலவச



1998 மார்ச் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

வேட்டி, சேலை வழங்குவது என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவாக அது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டத்தின்கீழ் 1997-98-ல் ரூ.92.60 கோடி மதிப்புடைய சேலைகளும், வேட்டிகளும் தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நல்ல தரமான வேட்டிகள், சேலைகள்—சிலபேருக்கு வழங்கப்படாமல் விட்டுப் போயிருக்கலாம், ஆங்காங்கே உள்ள குறைகளின் காரணமாக—தரமான வேட்டி சேலைகள், நடுத்தர வர்க்கத்தினர்கூட 'எங்களுக்குத் தரக்கூடாதா' என்று கேட்கின்ற அளவிற்கு அவ்வளவு தரமான வேட்டிகளும், சேலைகளும், ரூ.92 கோடிக்கு அத்தனையும் நெசவாளர் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உற்பத்தி செய்து தரப்படவேண்டுமென்று கூறப்பட்டு, ரூ.92 கோடி அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

அதேபோல் 1998-99ஆம் ஆண்டுத் திட்டப்படி, வேட்டி, சேலை இலவசமாக வழங்கப்படும் திட்டப்படி, இந்தச் சங்கங்களுக்கே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மீட்டர் துணிகூட வெளி மாநிலங்களிலிருந்தோ, தனியாரிடமிருந்தோ கொள்முதல் செய்யப்படவில்லை என்பது இந்த அரசு கைத்தறி நெசவாளர்கள்மீது கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவச சீருடைகளுக்காக ரூ.56.74 கோடி மதிப்புடைய 188 லட்சம் மீட்டர் துணிகள் தமிழக நெசவாளர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் ஆகிய துறைகள் நடத்துகின்ற, பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்குகின்ற திட்டத்திற்கு ரூ.6.83 கோடி வழங்கப்பட்டு, 22 லட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமேதான் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவை எல்லாம், துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடாது என்பதற்காக, நெசவாளர்களுக்கே போய்ச் சேரவேண்டும்; அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே போய்ச் சேரவேண்டுமென்பதற்காக, ஒரு மீட்டர் துணிகூட வெளியிலே வாங்காமல் அவர்களுக்கே போய்ச் சேர இந்த அரசு வகுத்த வழிகள் ஆகும்.

அதுமாத்திரமல்லாமல் கைத்தறித் துணிகளுடைய விற்பனையை மேம்படுத்த இந்த அரசு உச்சவரம்பு இல்லாமல் ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் (Rebate 20 Per cent) வழங்கி ஆணை பிறப்பித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக 1997-98-ஆம் நிதியாண்டில், முதல் 5 மாதங்களில், அதாவது 1-4-1997 முதல் 31-8-1997 முடிய ரூ.147 கோடியாக இருந்த விற்பனை அடுத்த 6 மாதங்களில் 1-9-1997 முதல் 28-2-1998 முடிய ரூ. 235 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, இந்த 20 விழுக்காடு ஆண்டு முழுவதும் என்று ஆக்கிய காரணத்தால் அதிக விற்பனை—ரூ. 88 கோடிக்கு—ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமாத்திரமல்ல. கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு 1-4-1997 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படியும், 1-10-1997 முதல் அடிப்படைக் கூலியிலே 10 விழுக்காடு உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஓய்வுபெறும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ. 150 ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது 1-9-1996 முதல்.

பிற்பகல் 12-50

நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 15,000 ரூபாய் என்பது 18-9-1996 முதல் இந்த அரசினால் 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு உதவிகளைச் செய்தும்கூட, இந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தும்கூட அவர்களுக்கு இன்னமும் முழுமையாகத் துன்பம் தீர்ந்தபாடில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களைப் போலவே நானும் உணர்ந்து வருந்துகின்றேன். எனவே, இவற்றை நல்லமுறையில் ஆராய்ந்து அவர்களுடைய வாழ்விலே வளம் சேர்க்கவும், நலம் சேர்க்கவும், அவர்களுக்கு எளிதாக, நியாய விலையிலே நூல் கிடைக்கவும், அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும், அவர்களுக்குத் தேவையான கடன்



வசதியை எளிதில் தரவும் என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி நன்கு பரிசீலித்து, இந்த அரசுக்கு ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, நெசவாளர்களுடைய பிரதிநிதிகள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அந்தக் குழு மிக மிக விரைவில் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும். அந்தக் குழு உறுப்பினர்கள் யார், யார் என்பதை நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகிறேன். அதற்குள்ளாக அவர்களையெல்லாம் கலந்து பேசி, அந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு, நெசவாளர் துயர் நீங்க நல்ல முடிவுகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த அவையில் National Agenda பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி நேற்றைக்கு முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். இந்த National Agenda, 17 கட்சியினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வைகோ. அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள், இத்தனை பேரும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள, 17 பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும். இந்த National Agenda-வில் இன்னின்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்தும், அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு, சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்க வேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவிரிப்

பிரச்சினையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்துகொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் நின்று கொண்டு பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு சில பொதுப் பிரச்சினைகளானாலும், அதிமுகவும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டுதான் இருக்கிறது.

அந்த அளவிற்கு காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, அதைப்பற்றிப் பேசுவதற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள், ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்களுக்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் 'நீ காவிரிப் பிரச்சினைக்கு துரோகம் செய்து விட்டவன்; ஆகவே, அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது' என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப்படையாகவே பத்திரிகைகளுக்குத் தந்து, அந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

பிற்பகல் 12-55

இங்கேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989-90-ல், திரு. வி.பி. சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக, பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை நிறைவேற்றி எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த திரு. எஸ்.ஆர்.இராதா—அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர். இராதா அவர்கள் என்று நினைவு—அவரும் வருவதாகச் சொல்லி, எல்லோருக்கும் சேர்த்து டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச் சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே நாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; அவர்கள் வராதது மாத்திரமல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்துவிட்டார்கள்.



அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. வைஜயந்திமாலா, அவர்கள்தான் துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்தத் தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு வி.பி. சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள் யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை. பொதுவான பிரச்சினை; அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை. இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு ஒத்துழைக்காமல், எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்ததும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப்பிரச்சினையில் அதிகம் பேச நான் விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைக்கு முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன; கிடைத்தது என்ன என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த Agenda-விலே வர வேண்டும்; இந்த-National திட்டத்திலே - தேசிய திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடினார்கள்; போராடினார்கள்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சிலபேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப்பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது. ஆனால் நடைபெற்றிருப்பது என்னவென்றால் காவிரி என்ற சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில் . குடகிலேயிருந்து பூம்புகார் வரையிலே நீண்டு பாந்து வந்துகொண்டிருக்கின்ற அந்தக் காவிரி. இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட காவிரி என்கின்ற 3 எழுத்து தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே CAUVERY என்ற சொல்லையோ இதிலே காணமுடியவில்லை. இரண்டு நாளைக்கு முன்பு தினமணி பத்திரிகையிலே ஒரு தலையங்கம் பார்த்தேன். அதிலேகூட கர்நாடக முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ

அதைத்தான் இந்த தேசிய திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூடத் தலையங்கம் தீட்டியிருக்கிறது; படித்துப் பார்த்தேன்.

அதுமாத்திரம் அல்ல. கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேயினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது; உணர முடிகிறது என்ன, உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது? "We will adopt a National Water Policy which provides for effective and prompt settlement of disputes and time-bound implementation". என்றுதான் இருக்கிறது. அந்த தேசிய நதிநீர்க் கொள்கை என்பது National Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். அதை யாரும் மறுக்கவில்லை. தேசிய நதிநீர்க் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை, ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அதை வைத்து, அந்தத் தீபத்தை வைத்து, இந்த வீட்டைக் கொளுத்தி விடக் கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்த முடியுமா?' திரு. பட்டேல் என்ன சொல்கிறார்; கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது? 'இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்க வேண்டாம்; பேச்சுவார்த்தைக்கு வா, நான் சொல்வதைக் கேள், ஏற்றுக்கொள்' என்றது. பேச்சுவார்த்தைக்கு நாம் மறுத்தபோதுகூட உச்ச நீதிமன்றம்தான் தாக்கீது தந்தது. பேசுங்கள் என்று. பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று, பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிப் பெறவில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை; உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம். உச்சநீதிமன்றம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

பிற்பகல் 1-00

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதா தளத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவ



கவுடா, ஐக்கிய முன்னணி கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது நானும், திரு. மூப்பனார் அவர்களும்தான் அவரை முன்மொழிந்து, வழிமொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய Chairman ஆக அந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவர் இருக்கிறார். அவர் இருந்தபோதுகூட மத்திய அரசு அவருக்காக வளைந்து கொடுக்காமல்—தேவ கவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உச்ச நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறது.

என்ன திட்டம்.? ஒரு Authority, Cauvery Valley Authority, அது என்ன சொல்கிறது? Authority யினுடைய வேலை என்ன? நடுவர் மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால Award இருக்கிறதே; அந்தத் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது? — நிறைவேற்றுவதா இல்லையா என்பதல்ல — எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத் தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது. இதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று உச்ச நீதிமன்றம் நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இருந்ததால் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப் போலவே புதுவை மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கேரள மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தது. இழுத்தடிக்கும்போது அது சொன்னது எல்லாம் "Authority வேண்டாம்; Committee போதும்" என்பதுதான். அதுமாத்திரம் அல்ல. "இந்தப் பிரச்சினையைத் தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றார்கள். இது இப்போது திரு. ஹெக்டே வாயிலாக இந்த National Agenda-வில் ஏற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபட வேண்டும்; போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர்மன்றம் நான் கேட்டபோது அம்மையார் ஒருமுறை சொன்னார்கள்; அப்படியே நடுவர்மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக்

கட்டுப்பட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றும் விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்லமுறையில் தீருமா என்ற அச்சம் ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல.

அடுத்து B.C. மற்றும் M.B.C.-க்கு இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே 69 சதவீதத்திற்கான சட்டம்கூட நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் அரசமைப்புச் சட்டத்தினுடைய 9-வது அட்டவணையில் கூடச் சேர்க்கப்பட்டது. இப்படிச் சேர்க்கப்பட்ட பிறகும்கூட உச்ச நீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த முடிவு என்ன? இந்த முடிவுக்கு யார் காரணம்? 17-11-1994 அன்று உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது உச்ச நீதிமன்றம் தன்னுடைய ஆணையில் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால்; It is significant to notice that after the order dated 18th August 1994 was passed, the State itself moved for modification of that order in the circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application no plea was raised based upon the inclusion of the said Act in the 9th Schedule and orders were obtained on 3rd October 1994. இப்படி ஒரு சட்டம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பதையே இவர்கள் யாரும் உச்ச நீதிமன்றத்திலே சுட்டிக்காட்டவில்லை என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. சுட்டிக்காட்டாத காரணத்தால் நான் இந்த 69 சதவீதத்தைப் பெற முடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்று நாம் மாத்திரமல்ல; நானும், அருமை நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அத்தனைபேரும் ஒரே குரலிலே முழங்கியிருக்கிறோம். இதை யாரும் மறந்து இருக்க முடியாது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தியிருக்கிறோம். இதை சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

பிற்பகல் 1-05

உச்ச நீதிமன்ற ஆணை என்னவென்றால் 18-8-1994 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டதற்குப் பின்னர் மாநில அரசே அந்த ஆணையை மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது கவனத்திற்குரியது. அந்த மனு 23-9-1994 அன்று தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிடப்பட்ட சட்டம், இந்த 69 சதவீத



சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதை ஒட்டி எந்தவித கோரிக்கையும் அந்த மனுவிலே எழுப்பப்படவில்லை. இப்படி உச்ச நீதிமன்றமே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்குக் கடந்த கால அரசு பிழை புரிந்து விட்ட்து என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. ஆனால் அதை இடம் பெறச் செய்வோம், அது எங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று; இல்லாவிட்டால் பட்டமளிப்பு விழாவிற்கே-மன்னிக்க வேண்டும்-பதவியேற்பு விழாவிற்கே வரமாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், Agenda-வில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், என்ன இருக்கிறது என்றால், அன்றைக்கு தீரன் குறிப்பிட்டதைப் போல, "We will provide legal protection to existing percentages of reservation in educational institutions at the State level." என்றுதான் இருக்கிறது. ஏற்கெனவே, கல்வி, வேலை வாய்ப்பு இரண்டிலேயும் இருந்தது. இந்த National Agenda-வைப் படித்த பிறகு, எனக்கு வருகிற பயம் என்னவென்றால், அவர் கேட்ட உறுதிமொழியின் காரணமாக, நிபந்தனையின் காரணமாக, இந்த வேலைவாய்ப்பும் போய் விட்டதோ; அதிலே உள்ள இட ஒதுக்கீடும் (reservation) போய் விட்டதோ என்கின்ற அச்சம் என்னைப் பிடித்து வாட்டுகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு பீதி இதன் காரணமாக இன்றைக்குத் தோன்றியிருக்கிறது. ``We will provide legal protection to existing percentages of reservation in educational institutions at the State level என்றுதான் இருக்கிறது. கல்விக் கூடங்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இருக்கிறது. எவ்வளவு இட ஒதுக்கீடு? அந்தப் புள்ளி விவரம் இதிலே காட்டப்படவில்லை. எவ்வளவு காலத்திற்கு? யாருக்கு என்பது எல்லாம் அது காட்டப்படவில்லை. எனவே, ஆங்கிலத்தில் சொல்வார்களே (Vegue) என்று. அது மாத்திரம் அல்ல; Vague ஆக மாத்திரம் அல்ல; "போக்காகவும்" இது அமைந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, பெண்களுக்கு 33 சதவீதம் கேட்டபொழுது, அம்மையார் சொன்னது "பெண்களுக்கு என்று மாத்திரம் இருந்தால் போதாது, அந்தப் பெண்களிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சதவீதம் வேண்டும். அதோடு கூடிய சதவீதம்தான், ஒதுக்கீடுதான் தேவை" என்று சொன்னார்கள்.

இதிலே பார்த்தால் அப்படி எதுவும் இல்லை. "33% of the seats in Parliament and State Assemblies for women". என்று இருக்கிறதே அல்லாமல், அதிலே B.C. உண்டா? S.C. உண்டா. M.B.C. உண்டா என்பதெல்லம் இதிலே காணப்படவில்லை.

பிறகு, மொழிப் பிரச்சினை. மொழியைப் பொறுத்தவரையில் எல்லா மொழிகளும் மத்தியிலே உள்ள இந்தி. ஆங்கிலம், ஆகிய இந்த இரண்டு மொழிகளோடு சேர்ந்து மத்திய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்; எல்லா மொழிகளும் ஆக வேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நீண்ட காலமாக எடுத்து வைக்கப்பட்டு வருகின்ற ஒரு கொள்கை முடிவு, மொழியைப் பொறுத்து. அதிலே மேலும் ஒரு திருத்தத்தோடு 1996ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முரசொலி மாறன் முன்மொழிந்து, நம்முடைய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம், "மத்தியிலே ஆட்சி மொழி அட்டவணையிலே, அரசமைப்புச் சட்டத்திலே அட்டவணையிலே உள்ள எல்லா மொழிகளும், குறிப்பாக எல்லா மாநிலங்களிலும் உள்ள ஆட்சி மொழிகளும் இடம் பெற வேண்டும்; அதற்குக் காலக்கெடு வேண்டுமென்றால் எல்லா வகையிலும் வளம் பெற்ற, இலக்கிய வளம், இலக்கண வளம், தொன்மை அத்தனை சிரும் நிறைந்த தகுதி வாய்ந்த எங்கள் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும்" என்பது தீர்மான வாசகம் ஆகும்.

அதை யார் எடுத்துக் கொண்டாலும், எனக்கு மகிழ்ச்சிதான். அதை ஜெயலலிதா அவர்கள் எடுத்துக் கொண்டு, அவர்களுடைய கட்சி மாநாடுகளிலும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ம.தி.மு.க. மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான். இந்தக் கொள்கை எல்லோருக்கும் சொந்தமாக வேண்டுமென்பதுதானே நம்முடைய கொள்கை.

அப்படி வந்ததில், இதிலே தமிழை ஆட்சிமொழியாக, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலை, இந்த National Agenda-விலே இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைக்கு ஒரு பெரியவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய தலைவர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்; அரசியல் நிர்ணய சபையிலே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்று பிரச்சினை வந்தபொழுது



தமிழகத்திலேயிருந்து ஒலித்தது காயிதே மில்லத் அவர்களுடைய குரல். எல்லா வளமும் நிறைந்த, எல்லா இலக்கிய இன்பமும் வாய்ந்த, எல்லா இலக்கணச் செறிவும் மிக்க தமிழ் மொழியைத்தான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று அன்றைக்கு உரத்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் குரலும் அன்றைக்கு வெற்றி பெறவில்லை.

பிற்பகல் 1-10

அதே நிலையிலேயிருந்து தமிழ் மொழி, ஆட்சி மொழியாக ஆக வேண்டும், அது ஒரு நிபந்தனை என்று விதிக்கப்பட்டு, பின்னர் தயாரிக்கப்பட்டு, அவர்களும் கையெழுத்திட்டுள்ள Agenda-விலே என்ன இருக்கிறது என்றால், "A Committee will be set up to study the feasibility of treating all 19 languages included in Schedule VIII of the Constitution as Official Languages." இதற்கு ஒரு Committee போடப்பட்டு, இது சாத்தியமா என்று ஆராயும். சாத்தியமா என்று ஆராயும்போது, ஒவ்வொரு மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். 19 மொழிகளும் சாத்தியமா என்று ஆராய்ந்தால் சாத்தியமில்லையென்றுதான் முடிவு வரும். தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டா என்று ஆராயத் தொடங்கினால், எல்லோரும் சேர்ந்து உண்டு என்ற அந்த முடிவைத்தான் தெரிவிப்பார்கள். எனவே, தமிழ் மொழி அங்கே ஆட்சி மொழியாக, மத்திய ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழல் இந்த Agenda-விலே இடம்பெறவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இப்படிச் சுட்டிக்காட்டுவது குறை கூற அல்ல. மேலும் இதற்கான முயற்சிகளை இப்போது அங்கே பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேனேயல்லாமல் குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. இவையெல்லாம் நிறைவேற வேண்டும் என்கிற ஆசையின் காரணமாகக் கூறுகிறேன். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் ஏதோ சில நிர்பந்தங்கள், ஏதோ சில பதவிகளுக்காகத்தான் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விரோதமாக சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்ற ஓர் எண்ணத்தை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆகிவிடும் என்பதற்காக, இதிலே மேல் நின்று முயற்சிகளை முனைப்போடு செய்ய வேண்டும் அவர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 23

அடுத்து. மிக முக்கியமாக இங்கே பேசப்பட்ட வெடிகுண்டுச்
சம்பவங்கள். இதிலே நான் நீண்ட நேரம் பேச
விரும்பவில்லையென்றாலும், ஒரு தகவலை, இந்த அரசுக்குக் கிடைத்த
இந்தத் தகவல் எப்படியெல்லாம் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு
எங்கே இதிலே சோடை ஏற்பட்டது என்பதை உங்களுக்கு
விளக்குவதற்காகச் சொல்கின்றேன். ஏற்கெனவே, செய்தியாளர்
களிடத்திலே ஒரு சிலவற்றைச் சொல்லியிருக்கின்றேன். முழுமையாக
இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக இவற்றை
நான் நினைவூட்டுகின்றேன். கோவை குண்டுவெடிப்புச் சம்பவம்
நடப்பதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றெல்லாம்
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கேட்டிருக்கிறார்கள். நான்
அவர்களுக்குச் சொல்கின்ற பதிலை ஒரு அறிக்கை போல இங்கே
வைக்க விரும்புகின்றேன்.

'கோவை மாநகரக் காவல் நிலையத்தையும், காவல் துறை
வாகனங்களையும் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்காக இஸ்லாமியத்
தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்ற செய்தியை தமிழ்நாடு
காவல் துறையின் புலானாய்வுத் துறை, 11-12-1997 அன்று அரசுக்குத்
தெரிவித்தது. மத்திய புலனாய்வுத் துறையல்ல; கவனமாகக் கேட்க
வேண்டும், தமிழ்நாடு காவல் துறையினுடைய புலனாய்வுத் துறை -
D.I.G. - 11-12-1997 அன்று அரசுக்குத் தெரிவித்தது. உடனடியாக
அரசின் சார்பில் இந்தத் தகவல் கோவை மாவட்ட ஆட்சித்
தலைவருக்கும், மாநகரக் காவல் ஆணையருக்கும் அனுப்பப்பட்டு
தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை அரசாங்கத்தால்
வழங்கப்பட்டது. 'கோவை மாநகரக் காவல் நிலையம், காவல் துறை
வாகனங்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும் தீவிரவாதிகளால்,
அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்ற செய்தி 11-12-1997 அன்று
கிடைத்த செய்தி உடனடியாகக் கோவை மாநகரக் காவல் துறை
ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

பிறகு 21-12-1997-ல் சென்னையிலே உள்ள மத்திய புலனாய்வுத்
துறை இணை இயக்குநர் — ஐ.பி.யினுடைய இணை இயக்குநர் —
தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 21-12-1997-
ல் ஒரு தகவல் அனுப்பினார். அதில் "1997 நவம்பர், டிசம்பர்
மாதங்களில் கோவை நகரில் நடந்த மதக் கலவரங்களில் தங்களுக்கு
ஏற்பட்ட இழப்புக்கு பதில் அடி கொடுக்கும் வகையில் கோவை நகர்
வெளிப்புறத்தில் சில வன்முறைகளில் அல்-உம்மா இயக்கத்தினர்
ஈடுபடக்கூடும், காவல் நிலையங்கள், கோவை காவல் ஆணையர்



1998 மார்ச் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

அலுவலகம், எரி வாயு ஏற்றிச் செல்லும் லாரிகள் போன்றவை
பாதிக்கப்படலாம்" என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது.
இந்தத் தகவலும் புறக்கணிக்கப்படவில்லை.

பிற்பகல் 1-15

உடனடி நடவடிக்கைக்காகக் கோவை மாநகரக் காவல் துறை
அதிகாரிகளுக்கு மாநில காவல் துறை அதிகாரிகளால் அனுப்பி
வைக்கப்பட்டது. பிறகு, 24-12-1997 அன்று அரசின் தலைமைச்
செயலாளருக்கு ஒரு தகவல் தரப்பட்டது. இந்தத் தகவலும் நான்
முதலிலே குறிப்பிட்ட அதே தகவல்தான், என்னென்ன நடைபெறும்
என்ற தகவல்தான் தரப்பட்டது. உடனடியாக, தலைமைச் செயலாளர்,
உள் துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல் துறை
இயக்குநர், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு), காவல்
துறை கூடுதல் இயக்குநர் (உளவுத் துறை) ஆகியோரைக் கொண்ட
உயர்மட்ட அலுவலர்களுடைய கூட்டம் கோட்டையிலே நடந்தது.
இந்தக் கூட்டத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பாக விரிவாக
விவாதிக்கப்பட்டது. ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட மதத்
தீவிரவாதிகளுடைய செயல்பாடுகளை உன்னிப்பாகத் தொடர்ந்து
கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள,
அதற்கான திட்டம்-Contitagency Plan - ஒன்றைத் தயாரித்து
உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனக் காவல் துறை
அதிகாரிகளுக்கு அந்தக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல், அல்-உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பால் கேன்
போன்று தோற்றம் அளிக்கக்கூடிய பொருட்களில் வெடி பொருட்களை
மறைத்துவைத்து, எரி வாயு ஏற்றிச் செல்லும் லாரிகளையும், காவல்
நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற
தகவலை தமிழ்நாடு அரசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு S.B., C.I.D.
27-12-1997 அன்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.
அதையொட்டி தலைமைச் செயலாளர், காவல் துறைத் தலைவர்
(D.G.P.) காவல் துறை கூடுதல் தலைவர் (புலனாய்வு), (A.D.G.P.)
(Intelligence) ஆகிய உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட
கூட்டத்தைக் கூட்டி அது பற்றி விவாதித்து, உடனடியாக நடவடிக்கை
எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. மத்திய அரசின் உள்
துறையிடமிருந்து 24-1-1998 அன்று ஒரு எச்சரிக்கைச் செய்தி வந்தது.
அதிலே, ரம்ஜான் பண்டிகையையொட்டி அல்-உம்மா இயக்கம் கோவை
நகரில் குண்டுவெடிப்பிற்குத் திட்டமிட்டிருப்பதாகத்

தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோவை மாவட்ட காவல் துறை ஆணையர் அவர்களுக்கும், காவல் துறை . இயக்குநருக்கும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 24-12-1997 அன்று கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தீவிர அறிவுரைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மத்திய புலனாய்வுத் துறையின் இணை இயக்குநர் 21-12-1997 அன்று கடிதத்தில் என்ன தெரிவித்திருந்தாரோ அதே எச்சரிக்கைச் செய்தியை மத்திய புலனாய்வுத் துறை இயக்குநர் 2-1-1998 அன்று மாநில காவல் துறைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் 5-1-1998 அன்று காவல் துறைத் தலைவரால் பெறப்பட்டது. மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர் தமிழக அரசின் காவல் துறைக் கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 19-1-1998 அன்று எழுதிய கடிதத்தில் ரம்ஜான் பண்டிகையைத் தொடர்ந்து ஒருவார காலத்திற்குள் வன்முறைச் செயல்களில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதுவும், உடனடியாக கோவை காவல் துறை அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டு, இதைப்பற்றியெல்லாம் கண்காணிப்போடு செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிற்பகல் 1-20

14ஆம் தேதி கோவையிலே வெடிகுண்டுச் சம்பவம் நடப்பதற்கு முன்பு இதேபோல் பல எச்சரிக்கைகள் செய்யப்பட்டும், அந்த எச்சரிக்கையின்பேரில் திருநெல்வேலி மாவட்டம் - கூடங்குளம், விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம், தர்மபுரி மாவட்டம் - பாப்பாரப்பட்டி, அஞ்சட்டி, பென்னாகரம், கடலூர் மாவட்டம் - சிதம்பரம், செங்கற்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தில் தாம்பரம், மாங்காடு, மதுரை மாவட்டம் - பேரையூர், சென்னையில் வேப்பேரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, கருமலைக் கூடல், தாரமங்கலம், வீரகனூர், கொண்டலாம்பட்டி, சங்ககிரி, தேவட்டிப்பட்டி, சூரமங்கலம், தம்மம்பட்டி, ஓமலூர், சேந்தமங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், காரியாப்பட்டி, மாரனேரி, வச்சகாரன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்



- மொரப்பநாடு, ஆத்தூர், குமரி மாவட்டத்தில் இரணியல், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், கோவை மாவட்டத்தில் மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் கோவை ஒன்றைத் தவிர எல்லா இடங்களிலும் முறையாக அரசு தாக்கீதை ஏற்று D.G.P.-யினுடைய தாக்கீதை ஏற்று ஆங்காங்குள்ள காவல் துறை ஆணையாளர்கள், D.I.G.-கள், S.P..-கள், இவர்கள் முறையாகச் சோதனையை அங்கே நடத்தினார்கள். 1-2-1998 முதல் 13-2-1998 வரை 13 நாட்களில், கண்டுபிடிக்கப்பட்டவை, நாட்டு வெடிகுண்டு 2019, ஜெலட்டின் குச்சிகள் 586, டெட்டனேட்டர்கள் 1595, பட்டாசுகள் 2675 மற்றும் 11 பண்டல்கள் Fuse wire 362 metres,

இதர வெடிமருந்துப் பொருட்கள் 207 கிலோ, துப்பாக்கிகள் 6, கைத்துப்பாக்கிகள் 2, எஸ்.பி.எம்.எல்.2, கேட்ரிட்ஜ்கள் 5. பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களையொட்டி தொடரப்பட்ட வழக்குகள் 49. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 95 பேர். இந்த 95 பேரில் கைது செய்யப்பட்டவர்கள் 81 பேர். ஆனால், கோவையிலிருந்து வந்த பதில் என்னவென்றால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டதற்கு வந்த பதில் என்னவென்றால், கோவையிலும் பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், சில இடங்களில் மத்தியக் காவல் படை (C.R.P.F.) துணையோடு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் அந்தச் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கோவை மாநகரக் காவல் அதிகாரி அறிக்கை அனுப்பினார். ஏன் முன்கூட்டியே தெரியவில்லை, என்ன செய்தாய் என்றால், இதற்கெல்லாம் முதலமைச்சரா போய்ப் பார்க்க முடியும்? அதிகாரியைத்தானே நம்பினோம். கோவை மாநகரக் காவல் துறை அதிகாரி தெளிவாகச் சொல்கிறார். கோவையிலே பல இடங்களில் சோதனைகள் செய்யப்பட்டன; சில இடங்களில் மத்திய காவல் படை (C.R.P.F..) துணையோடு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று கோவை மாநகர அதிகாரி அரசு கேட்ட விளக்கத்திற்குப் பதில் அனுப்பினார். அதற்குப் பிறகுதான் 14 ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற நாளில் சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக் கூட்டம். நானும், மூப்பனாரும், நல்லக்கண்ணு அவர்களும், சங்கரய்யா,

வடிவேலு போன்றவர்களும் அதற்குப் பிறகு அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கலந்து பேசிக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு பேசினோம். உடனடியாக அதே நாளில் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக இரண்டு தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்தது. அந்த நேரத்தில் கோவைக்குப் பிரச்சாரத்திற்கு வந்திருந்த திரு. அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டுமென்று, 10 நிமிடங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு பேசினேன். இன்னும் சொல்லப்போனால், 14 ஆம் தேதி காலையில் திரு. அத்வானி அங்கே வருகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தவுடன், உடனடியாக நான் போலீஸ் கமிஷனர், கோவை அவர்களோடு, தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, 'அத்வானி வருகிறார், பாதுகாப்பு சரியாக இருக்கட்டும், பல கடிதங்கள் ஏற்கெனவே வந்து போயிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டபடி கண்காணியுங்கள்' என்று சொன்னபோது, சரி என்றுதான் சொன்னார். ஆனால் நிலைமை இப்படி ஆகிவிட்டது.

இருந்தாலும் கூட நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ளட்சுமணன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, திரு. அத்வானி பேசவிருந்த அந்தக் கூட்டத்திற்கும், வெடிகுண்டு வெடித்த இடத்திற்கும் கிட்டத்தட்ட 820 மீட்டர் தொலைவு. 820 மீட்டர் தொலைவிலே வெடிகுண்டு வெடித்து, திரு. அத்வானி அவர்களை அந்தக் கூட்டத்திலே கொன்றிருக்க முடியுமா என்பதை நான் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இவற்றையெல்லாம் கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய விசாரணைக் குழு ஆராய்ந்து பதில் சொல்லவிருக்கிறது. எனவே அதிலே எதையும் நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எங்களுக்கு இருந்த கவலை, நானும் மூப்பனாரும் உட்கார்ந்து கொண்டு 10 நிமிடங்களுக்கு ஒருமுறை கலெக்டருக்கு Phone செய்து, திரு. அத்வானி அவர்களைப், பத்திரமாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று சொன்னபோது, 'அவர் கேட்கமாட்டேனென்கிறார், மருத்துவமனைக்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்' என்று சொன்னபோது சரி, என்று சொல்லி பலத்த பந்தோபஸ்தோடு, ஒரு பிரதமருக்குப் போடுகின்ற பந்தோபஸ்தைவிட அதிக பாதுகாப்பு திரு. அத்வானி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர் மருத்துமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார். பிறகு, திருச்சியிலும், அதைவிட அதிகமான பந்தோபஸ்தோடு கூட்டம் அங்கே நடைபெற்று, திரு. அத்வானி



அவர்கள் பத்திரமாக திரும்பிச் செல்வதற்கான வழிவகை ஏற்பட்ட பிறகுதான் நான் பெருமூச்சே விட முடிந்தது. அந்த அளவிற்கு அந்த நாள் அமைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வெடிகுண்டுச் சம்பவத்திற்கான காரணங்களைக் கண்டறியவும், காவல் துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எச்சரிக்கைச் செய்தி மீது இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், கோவை மாநகரக் காவல் துறை அதிகாரி செயல்பாட்டில் குறைகள் இருப்பின், அவை பற்றிய உண்மை நிலையை அறியவும், நஷ்ட ஈடு எவ்வளவு தரவேண்டுமென்பதைப்பற்றி அறியவும், இதற்கெல்லாம் மூல காரணம் என்ன என்பதைப்பற்றி அறியவும்தான், நீதிபதி பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய அனுமதியோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படிப் பொறுப்பற்ற ஒரு காவல் துறை அதிகாரி மீது — உங்களுடைய அனுமதியோடு — இந்த அரசு விளக்கம் கேட்டுக் கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ந்து இங்கே எதிக்க்கட்சித் தலைவர்கூட C.B.I. விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மாநிலக் காவல் துறை உயர் அதிகாரிகள் மற்றவர்களுடைய விளக்கங்கள் கோரப்பட்ட அந்தச் சூழ்நிலையில், விரிவான புலனாய்வு ஒன்றை நடத்த பாம்வீர்சிங் என்ற I.P.S. அலுவலர் I.G. அந்தஸ்தில் உள்ளவர் தலைமையில், — 15-2-1998 முதல், மறுநாளே விசாரணை ஆரம்பமாகிவிட்டது.

இந்த விசாரணை மிகத் திறமையாக் நடைபெற்று வருகிறது. நான் C.B.I. வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. மிகத் திறமையாக இவர்கள் இந்த விசாரணையை நடத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 1-25

கேரளத்திலே விட்டுவிட்டார்களே என்று கூட தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே யாரையும் விடவில்லை. அங்கே 8 பேர் பிடிபட்டதாகச் செய்தி வந்தது. அவர்களுக்கும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரிலே பிடித்து வைத்திருந்தார்கள் இவர்களும் பரபரப்போடு அங்கே ஓடிச் சென்று பார்த்தார்கள். இந்தச் சம்பவத்திற்கும், இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர்கள் விடப்பட்டார்களே அல்லாமல், குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் யாரும் விடப்படவில்லை.

இதுவரையில் 104 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு 42 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தமிழகத்திலே, மாநிலத்திலே எந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; சென்னை மாநகரம் எப்படிக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக, தெளிவாக அறிவீர்கள். இதற்கெல்லாம் மூல காரணங்களை ஆராய்ந்து, அதைப் பற்றி நாம் இங்கே பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அருமையாக 'எரிகிற நெருப்பிலே எண்ணெய் வார்ப்பதாக நம்முடைய பேச்சுக்களோ எழுத்துக்களோ அமைந்து விடக்கூடாது' என்று சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் மூண்டெழுகின்ற உணர்ச்சிகளை அடக்க முடியாமல் சிலர் தங்களுடைய எண்ணங்களை வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது அந்த நிலையில், நம்முடைய அன்பிற்குரிய, இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர், அருமைமிகு நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பல செய்திகளை இங்கே சொன்னார்கள். அதற்குப் பதிலாக மற்றொன்று நடைபெற்றது. நவம்பர் கடைசி நாளும் டிசம்பர் முதல் நாளும், கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு மாற்றாக பதிலடியாக இந்தச் சம்பவம் நடந்தது என்ற நிலையிருந்தாலும்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல. சட்டத்தை நாமே கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதை திரு. அப்துல் லத்தீப் அவர்களும் மறுப்பவர்கள் அல்ல; ஏற்றுக்கொள்ளக் கூடியவர்தான். அத்தகைய பண்பு வாய்ந்தவர்தான் அவர்.. அவரைப் போலவேதான் எல்லோரும்.

நம்முடைய திரு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போதுகூட மிகுந்த வேகத்தோடும், கொந்தளிப்போடும், குமுறல்களோடும் இங்கே தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் வெளிக்காட்டினார்கள். நான் அந்த அடிப்படைகளையெல்லாம் மறைக்கவில்லை; மறைக்கவும் விரும்பவில்லை. அந்த அடிப்படைகளையெல்லாம் உணர்ந்தவன்தான் நான் அந்த அடிப்படைகளை சரிசெய்யப்பட வேண்டும் என்கிற பேரியக்கத்தில் தந்தை பெரியார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்டு இன்றைக்கு உங்களோடு இருப்பவன்தான் நான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். எனவே 'அந்த அடிப்படைகளைப் பற்றி திரு. லத்தீப் அவர்களோ, திரு. கிருஷ்ணசாமி அவர்களோ,



மற்றவர்களோ எடுத்துச் சொல்கிற அந்தக் கருத்துகள் எனக்கு முரண்பாடானவை அல்ல. இருந்தாலும்கூட வன்முறைக்கு வன்முறை பரிகாரம் ஆகாது.

சென்னையிலே பிடிபட்டிருக்கின்ற நான்கைந்து இளைஞர்களுடைய படங்களைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு இளைஞர்கள் அவர்கள், அழகானவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று இஸ்லாமியத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி—அவர்களைப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவர்களிடம் இந்த உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய அளவிற்கு, மூளைச் சலவை என்பார்களே, அதேபோன்று சலவை செய்யப்பட்டு அவர்கள் இப்போது முடுக்கிவிடப்பட்டு இருக்கிறார்கள். நபிகள் நாயகம் என்ன சொன்னார்? இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள், இந்த மாதிரி காரியங்களைச் செய்து விட்டு, செத்துப்போனால்கூட, மோட்சத்திலே நமக்கு மகிமை உண்டு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில இளைஞர்களில் ஒருவர் தன்னுடைய மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரண லோகத்திலே நமக்கு எல்லாவிதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத்திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மத மாச்சரியத்திற்காகப் போரிடுவதும் நல்லதல்ல, அதற்காக மரணம் அடைவதும் நல்லதல்ல, அவர்கள் எல்லாம் நம்மவர்களும் அல்ல' என்று கூறியிருக்கிறார். இதை அந்த இளைஞர்கள் உணர வேண்டும். ஏதோ ஒரு காரியத்திற்காக, பழிக்குப் பழி வாங்குதல் என்ற காரியத்திற்காக, மொத்த சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது. அப்படியே—நான் வாதத்திற்காகச் சொல்கிறேன்.—பழி வாங்குவது, பகை தீர்த்துக்கொள்வது என்றால் குறிப்பிட்ட ஒரு நபரையா பழி தீர்க்கிறோம்; பலி வாங்குகிறோம? அல்ல. யாரையோ பழி வாங்குவதாக எண்ணிக்கொண்டு, அப்பாவி மக்கள், இதைப் பற்றியே தெரியாத மக்கள், இன்னும் சொல்லப்போனால் பலபேருக்கு பாபர் மசூதி என்றால் என்னவென்று தெரியா. அங்கே என்ன பிரச்சினை என்று பல பேருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் தெருவிலே வியாபாரம் செய்து கொண்டு போகிறவர்கள், பால் விற்றுக் கொண்டு போகிறவர்கள்,

காய்கறி விற்றுக் கொண்டு போகிறவர்கள். தன்னுடைய அண்ணனையோ தம்பியையோ பார்க்கச் செல்கின்றவர்கள். தாயைக் காணச் செல்கின்றவர்கள். சகோதரனைப் பார்க்கச் செல்கின்றவர்கள். குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புகின்ற தாயார். இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள். சாதாரண அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்களே, அந்த நேரத்தில் அது நம்முடைய தாயாக இருந்தால். அப்படி இறந்தவர் நம்முடைய தந்தையாக இருந்தால். கொல்லப்பட்டது நம்முடைய குழந்தையாக இருந்தால், நம்முடைய மனம் எப்படித் துடிக்கும் என்று ஒரு கணம் எண்ணினால், இப்படிப்பட்ட தீய சிந்தனையிலிருந்து தங்களை அவர்கள் விடுவித்துக் கொள்ள முடியும். இந்த வெடிகுண்டுப் பிரச்சினையில் ஓர் அரசு எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரோடும் சேர்ந்து நானும் இணைந்து கொள்ள விரும்புகிறேன். இதில் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல நான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். மார்க்ரெட் தாட்சர், இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமராக இருந்தவர், இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி ஒன்று சொல்லியிருக்கிறார். ``If the terrorists succeed once, it is a great victory for them. But, we have to succeed everytime against their activities."

•

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தீவிரவாதிகளை அடக்க முனையும் அரசு 100 தடவை முயன்றாலும் அந்த 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். அதாவது, 100 தடவை முயன்றாலும், 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். ஆனால், தீவிரவாதிகளோ அவர்களது முயற்சியில் ஒருமுறை வெற்றி பெற்றாலும் அதைப் பெரும் வெற்றியாகக் கருதுவார்கள். அதையும் மனதிலே வைத்து இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகுந்த பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பல தலைவர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளுக்கெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கங்களைத் தருவேன். எவையெவை ஏற்றுக் கொள்ளப்பட்டவை, எவையெவை ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதையும் அதில் நீங்கள் காணலாம்.

ஆதி திராவிடர்களுக்கு மொத்த வருவாயிலே 25 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். 25 சதவிகிதம் என்பது, பார்ப்பதற்கு அவ்வளவுதானே கேட்கிறார்; குறைவாகத்தானே கேட்கிறார்; கொடுத்தால் என்ன என்று கேட்கத் தோன்றும். ஆனால், நான் சொல்ல விரும்புகிறேன்; வருவாயிலே 50 சதவிகிதம் எங்கே போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு அவர்களுக்காகப் பேச இருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர்கள். அரசு அலுவலர்களுக்கு நம்முடைய வருவாயிலிருந்து 50 சதவிகிதம் செல்கிறது. 25 சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டால், மிச்சம் 25 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு எல்லாம். அதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். 25 சதவிகிதமோ அல்லது அதற்குக் குறைவானதோ ஆதி திராவிடமக்களுக்கு நாம் ஒதுக்குகிறோம் என்றால், மிச்சம் இருக்கின்ற எல்லாத் தொகையும் ஆதி திராவிடர் அல்லாதவர்களுக்குப் போய்ச் சேருவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. மிச்சத் தொகையும் ஆதி திராவிடர்களுக்கும் சேர்த்துத்தான். சாலை போட்டால் அதில் ஆதி திராவிடர்களும் நடக்கிறார்கள்; அல்லாதவர்களும் நடக்கிறார்கள். குளம் வெட்டினால், அதில் ஆதி திராவிடர்களுக்கும் உரிமை இருக்கிறது. சில இடங்களில் உரிமை இல்லாமல் இருக்கலாம். அந்த உரிமையைப் பெற்றுத் தர வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதைப்போல எல்லாவிதமான நன்மைகளிலும், அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், எல்லா வகைகளிலும் ஆதி திராவிடர்களுக்குப் பங்கு இருக்கிறது. எனவே, தனியாக அவர்களை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு என்று, சில சலுகைகளுக்காக, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த ஒதுக்கீடே தவிர, இதுவேதான் அவர்களுக்கு, இதற்கு மேலே ஏதும் அவர்களுக்குத் தர முடியாது என்று நூல் கட்டி, உச்ச வரம்பு வைத்து இந்த நிதி

ஒதுக்கப்படவில்லை.

பிற்பகல் 1-35

இறுதியாக, இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப்பாகக்கூடப் பேசினார், இந்த பஸ் கட்டணத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். இது பற்றிப் பல விளக்கங்கள் நான் அளித்திருக்கின்றேன். ஏற்கெனவே 14 காசு என்று இருந்தது 22 காசு என்று உயர்த்தப்பட்டது. பொது மக்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப 22 காசு என்பது 20 காசாகக் குறைக்கப்பட்டது. அப்படி 20 காசாகக் குறைக்கப்பட்ட நிலையிலும்கூட போக்குவரத்துத் துறைக்கு, ஏற்பட்ட நஷ்டம், சுமார் ரூ.280 கோடி. அவர்களுக்கா நஷ்டம்? அரசுக்கு நஷ்டம். அரசு கொடுக்க வேண்டும் அவர்களுக்கு. நாம்தானே கொடுக்க வேண்டும் அந்த 280 கோடி ரூபாயை? 20 காசு என்று நம் மாநிலத்திலே நிர்ணயித்தபோது, ஆந்திராவிலே — நம்முடைய சுப்பராயன் அவர்கள் கேட்பார்கள், அங்கே 36% கொடுக்கிறார்களே, இங்கே கொடுத்தீர்களா என்று. அதற்கு மாத்திரம் அதை Compare செய்வார்கள். திரு. பழனிசாமி, திரு. சுப்பராயன் எல்லோரும் அதை Compare செய்வார்கள். அதை இங்கே கொடுப்பீர்களா என்று கேட்பார்கள்—ஆந்திராவிலே, கேரளாவிலே, கர்நாடகாவிலே, ஒரு கிலோ மீட்டருக்கு 22 காசுகள். அதைவிட இங்கே 2 காசுகள் குறைவு. இராஜஸ்தானிலே கிலோ மீட்டருக்கு 24 காசு. உ.பி. பெரிய மாநிலம், அங்கே 27.80 காசு; அதைவிட நாம் 7.80 காசு குறைவாக வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, தொடர்ந்து ஆளுநர் உரைமீதான விவாதத்திலே அத்தனை பேரும் பேசி ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்த காரணத்தினால், பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு மேலும் 2 காசு குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பற்றி எல்லோரும் பேசியாகிவிட்டது. திரு. கணேசன் உட்பட எல்லோரும் பேசியாகிவிட்டது. நான் அவரது பெயரையும் சொல்கிறேன். அத்தனை பேரும் பேசியாகிவிட்டது. எல்லா கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால், பொதுமக்களுடைய நன்றி, எனக்கு மாத்திரம் அல்ல; உங்கள் எல்லோருக்கும் சாரும் என்று கூறி, கிலோ மீட்டருக்குக் கட்டணம் 18 காசாக ஆக்கப்படும்; அதற்கேற்றபடி, மற்ற நிலைகள் எல்லாம் வகுக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய



நன்றியைக் கூறி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) ஏன் நீங்கள் எல்லோரும் எழுந்து நிற்கிறீர்கள்? நான் ஒருவரை அனுமதித்தால் எல்லோரையும் அனுமதிக்க வேண்டி வரும். உட்காருங்கள்.

திருத்தம் கொடுத்த திரு. ஜி.கே. மணி அதை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; அதுபற்றி நீங்கள் தனியாகப் பேசுங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்களால், 19-3-1998 ஆம் நாளன்று முன்மொழியப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும்.

"1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு, ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[1998 மார்ச் 23

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1998) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனைவரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) **திருத்தச் சட்டமுன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு **எண் 4/1998) மாண்புமிகு** சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



1998 மார்ச் 23] [திரு. ஆலடி அருணா]

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதன்மீது கருத்துக்கள் கூற விரும்பும் உறுப்பினர்கள் யாராவது இருந்தால், கூறலாம். யாரும் இல்லை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்:

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வணிக வரிவிதிப்பு தொடர்பாக மேல்முறையீடு செய்யவும் உதவி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் பிறப்பிக்கும் ஆணைகள் மீது, சீராய்வு செய்வதற்கு நோட்டீஸ் கொடுக்கவும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தில், இம்மாதம் 30ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குறித்த காலத்திற்குள் நோட்டீஸ் கொடுக்க முடியாத அளவுக்கு பல ஆணைகள் இருக்கிற காரணத்தினால், மேலும் இரண்டு மாதங்கள் நீடிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் திருத்தம். இதிலே கருத்து வேறுபாடுக்கே இடமில்லை. எனவே, இதை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாமன்ற உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்

---

@ 23-3-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-40

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.





சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 2/1998).. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை பெயர் மாற்றமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஆகையால், மாநிலத் தேர்தல் ஆணையத்தை இந்தியத் தேர்தல் ஆணையத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இதுவரை தமிழ்நாடு தேர்தல் ஆணையம் என்று இருப்பதை, அது எங்கெங்கு வருகிறதோ அங்கெல்லாம் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் என்றும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவு இது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 21-3-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மார்ச் 23

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 2, including the marginal heading, for the expressions 'Tamil Nadu Election Commission' and 'Tamil Nadu Election Commissioner', substitute the expressions 'Tamil Nadu State Election Commission' and 'Tamil Nadu State Election Commissioner.'

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1998 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1998) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

[1998 மார்ச் 23

**(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1998). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1998 @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை நடைபெற்றிருக்கிற ஊராட்சி மன்றத் தேர்தல்களில் ஏறத்தாழ 4 மாவட்டங்களில் 6 ஒன்றியங்களில் 6 ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. அந்த மன்றங்களுக்கு நாங்கள் தனி அதிகாரிகள் நியமிக்க வேண்டியிருந்தது. அவர்களுடைய பதவிக் காலம் 31 மார்ச்சுக்குள் முடிவடைகிறது; ஆகையால் செப்டம்பர் திங்கள் இறுதி வரையில் அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துத்தர வேண்டும். இதற்கிடையில் தேர்தல் நடந்தால் அவர்களுடைய பதவிக்காலம் அதோடு முடிவுறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 21-3-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1998 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

*பிற்பகல் 1-45*

**(ஈ) தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு,** 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1998) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1998) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் திரைப்படம் பார்க்கச் செல்லுகின்றவர்களுடைய—வாகனங்களைத் திரையரங்குகளின் உரிமையாளர்களே, பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கிறது. இருந்தாலும், பல்வேறு திரையரங்குகளில் கட்டணம் தாறுமாறாக வசூலிக்கப்படுவதும், சினிமா திரையரங்கச் சீட்டுகள் அங்கேயே விற்கப்படுவதும் நடைபெறுகின்றன. அதை முறைப்படுத்துவதற்காக, அரசு தலையிடுகின்ற வகையில் கட்டணம் விதிக்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக இதைக்

---

@ 20-3-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





கருதுகிறோம். இந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்கும் மேல் எக்காரணம் கொண்டும் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்ற உத்தரவாதமும் இந்தச் சட்டத்தில் உள்ளடங்கி இருக்க வேண்டும். அடுத்து, இன்றைக்கு பல்வேறு திரையரங்குகளில் ஏ.சி. என்று போட்டிருக்கிறார்களே தவிர, ஏ.சி. இயங்குவதே இல்லை. மேலும் பல்வேறு அடிப்படை வசதிகள், கழிப்பிட வசதிகூட இல்லாமல் பல திரையரங்குகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட திரையரங்குகளில் ஏற்கெனவே இருக்கின்ற மேற்படி நிலைமைகளை செம்மைப்படுத்துவதோடு, இந்தக் கட்டணம் வசூல் செய்வதிலே மிகவும் கறாராக இருக்க வேண்டும். ஏனென்றால், ஒரு அரசுக்கு நல்ல பெயர், கெட்டபெயர் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இதில் கூடுதலாக இருப்பதைக் கவனத்தில் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரையரங்க உரிமைதாரர்கள், திரையரங்கங்களில் நிறுத்தப்படும், சைக்கிள், ஸ்கூட்டர், கார் முதலான வாகனங்களுக்கு அளவு கடந்த கட்டணங்கள் வசூலிப்பதாகப் பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வந்ததையொட்டி, அரசு திரையரங்க வளாகங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதை முறைப்படுத்தத் தீர்மானித்தது. அதற்கிணங்க திரையரங்க வளாகங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்காக உரிமையாளர்கள் வசூலிக்க வேண்டிய கட்டண விகிதங்களை நிர்ணயிக்கின்ற வகையில் தேவையான வரைமுறைகளைச் செய்யும் பொருட்டு 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் முறைப்படுத்துதல் சட்டத்தில், தமிழ்நாடு சட்டம் 9/1955, 10ஆம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் கூறுகளுக்குப்பின் புதிய கூறு ஒன்றைச் சேர்க்க வேண்டுமென்று அரசு இப்போது முடிவுசெய்துள்ளது. இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் திரையரங்கு உரிமைதாரர்கள் திரையரங்குகளில் நிறுத்தப்படும் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், கார்கள் முதலான வாகனங்களுக்கு அளவு கடந்த கட்டணம் வசூல் செய்வது தடைபடும். அதைக் கருத்தில்கொண்டு இச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாமன்ற உறுப்பினர்கள் இச்சட்டமுன்வடிவை ஆய்வு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வ. முல்லைவேந்தன்] [1998 மார்ச் 23

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, மாவட்ட ஆட்சித் தலைவர்களே இந்தக் கட்டணத்தை நிர்ணயிப்பதன் மூலம், ஆங்காங்கே இருக்கின்ற திரையரங்குகளின் தகுதிக்கு ஏற்பவும், பொதுமக்களுடைய வசதிக்கு ஏற்றவாறும் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற வகையில்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும், கட்டணங்களைக் கூடுதலாக வசூலிக்காமலிருப்பது, கழிப்பிட வசதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது போன்றவை குறித்துச் சரிபார்ப்பதற்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் முடுக்கிவிடப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு வாரத்திற்கு முன்னால் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும். என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1998 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்.".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 3. அரசினர் தீர்மானங்கள்-தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடுதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறித்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

[1998 மார்ச் 23

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 27-3-1998ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் 27-3-1998 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றம் (சம்பளம், படி மற்றும் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணிமுறைமைகள்) விதிகளை நீக்குவது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 17-11-1997ஆம் நாளிட்ட 518ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1998 மார்ச் 23]

59. எரிசாம்பல் செங்கல் விற்பனை செய்யும் வணிகர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரியை நான்கு சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 16-12-1997ஆம் நாளிட்ட 579ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

60. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு விற்கப்படும் பாலிதின் தாளுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரியை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 6-8-1997ஆம் நாளிட்ட 297ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

61. 1996-97ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

62. 1996-97ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

63. 1996-97ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் பேருந்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்-I) லிமிடெட்டின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

64. 1996-97ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் பேருந்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்-II) லிமிடெட்டின் நான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

65. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-I) லிமிடெட்டின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

66. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-II) லிமிடெட்டின் பதினான்காம் ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

67. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-II) லிமிடெட்டின் நான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

68. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-II) லிமிடெட்டின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

69. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-II) லிமிடெட்டின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

-ஏதுமில்லை-

D
V24, 31 N98
N98 . 40

218450

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.